Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 22 புதன்கிழமை (04.04.2012) பக்கங்கள் 20 ஓசை – 187

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து

(C/1325)



இழுத்தடிப்புக்கு காரணம் (04)




மாபெரும் உணர்ச்சிச் சுரண்டல் (18)



தமிழர்களும் எருமைகளும் (10)



அரிதாக உள்ள ஒன்றே ஒன்று (15)



யாழில் பாலுக்கு தட்டுப்பாடு (05)

# சர்வதேச அழுத்தங்கள் இன ஐக்கியத்தை தராது

(கொழும்பு)

சர்வதேச அழுத்தங்களால் இன ஐக்கியத்தை ஏற்படுத்திவிட முடியாது. இன முரண்பாடுகளை வளர்த்துக் கொண்டு அரசியல் உரிமைப் பிரச்சினைக்குத் தீர்வை எட்ட முடியாது. இது கடந்த காலத்தில் நாம் கண்ட பட்டறிவின் பாடங்களாகும். எனவே இனங்களுக்கிடையில் ஐக்கியத்தையும் புரிந்துணர்வையும் பாது காத்துக்கொண்டே எமது மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சி னைக்குத் தீர்வுகாணும் முயற்சியை முன்னெடுக்க நாம் விரும்புகி றோம் என்று யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. எம்.பி.யும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் நாடாளுமன்றில் நேற்று உரை நிகழ்த்தும் போது தெரிவித்தார்.



நாடாளுமன்றில் ஆரம்பமாகிய ஜெனிவாத் தீர்மானம் குறித்த விவாதத்தில் பங்குபற்றி உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றும் போது, இலங்கையின் சமகால நிலைமைகள் இன்று சர்வதேசப் பரப்பில் கவனத்தைப் பெற்றுள்ள சூழலில் நாம் அவை பற்றிய கவனங்களை அவதானிப்பதற்காக இங்கே கூடியிருக்கிறோம்.

யுத்தத்தின் முடிவுக்குப் பிறகு, அமைதியைக் குறித்தும் சமாதானத்தைக் குறித்தும் அரசியற்பிரச்சினைகளுக்கான தீர்வைக் குறித்தும் சிந்திக்க வேண்டிய காலகட்டம் இது.

ஆகவே, அதற்கான பணிகளை முன்னெடுக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் நாமனைவரும் இருக்கிறோம். இதில் அனைவருக்கும் முதன்மையான பொறுப்புகள் உண்டு. நாங்கள் இலங்கையர் என்ற ரீதியில் இந்தப் பொறுப்பை ஏற்க வேண்டும்.

19 ஆம் பக்கம் பார்க்க

## மீண்டும் தபாலகம்

(கீரிமலை)

கடந்த 22 வருடங்களாக இயங்காமல் இருந்த கீரிமலை உபதபாலகம் மீண்டும் தனது சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

நேற்று முன்தினம் யாழ். தபால் அத்தியட்சகர் எஸ்.ஜெயரட்ணம் நிலையத்தின் சேவையினை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

இதேவேளை, போரினால் இடம் பெயர்ந்த காங்கேசன்துறை தபாலகம் இன்னும் வேறு இடங்களில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## தீயில் எரிந்து பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நாவலர் வீதிப் பகுதியில் நேற்றுக் காலை தனக்குத் தானே தீ மூட்டிப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நோயின் தாக்கம் காரணமாகவே இவர் இவ்வாறு தீ மூட்டியதாகத் தெரியவருகின்றது. சிவசம்பு நாகேஸ்வரி வயது 71 என்பவரே இவ்வாறு இறந்தவராவார்.

# கூட்டமைப்பை அமெரிக்கா அழைக்கவில்லை

(கொழும்பு)

அமெரிக்க வெளிவிவகார செயலாளர் ஹிலாரி கிளின்டனுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்புக்கான ஏற்பாடு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவராலயம் தெரிவித்துள்ளது. வொஷிங்டனுக்கு வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு அமெரிக்க வெளிவிவகார செயலாளர்

19 ஆம் பக்கம் பார்க்க

# கடன் உதவி கிடைக்கும்

(வொஷிங்டன்)

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு உதவும் முகமாக சர்வதேச நாணய நிதியம் 427 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாக வழங்க முன்வந்துள்ளது.

இலங்கையின் பொருளாதார மீட்சி 2011 இலும் தொடர்ந்ததாயினும் இலகுவாக கிடைத்த கடன்களும் நிலையான நாணய மாற்று வீதமும் வர்த்தக மீதிப்பற்றாக்குறை தொடர்ந்து காணப்பட வழிவகுத்தது என வொஷிங்டனைத் தளமாகக் கொண்ட சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது.

கடந்த வருடத்திற்கான வர்த்தக மீதி 10 பில்லியன் அமெரிக்க டொலரை எட்டியது. இது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஐந்திலொரு பங்காகும். இது குறைவடைந்து நாட்டின் வெளிநாட்டு ஒதுக்கங்கள் மீது பாதகமான விளைவை உருவாக்கியது. 2009ஆம் ஆண்டிலிருந்து

19 ஆம் பக்கம் பார்க்க

# இளைஞன் வெட்டிக்கொலை

வவுனியா, உக்கிளாங்குளம் மைதானம் ஒன்றில் இருந்து வெட்டுக்காயங்களுடன் இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று மதியமளவில் மீட்கப்பட்டுள்ளது. கொலையுண்டவர் ஸ்கந்தபுரம் பகுதியைச் சேர்ந்த இரா.கிருபாகரன் என அழைக்கப்படும் 24 வயதுடைய இளைஞன் என வவுனியா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது இவரது சடலம் வவுனியா பொது வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இக்கொலை தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## ரின் மீன் தொழிலகம் திறப்பு

(கொழும்பு)

இலங்கையின் முதலாவது ரின்மீன் தொழிற்சாலை காலி மீன்பிடித்துறை வளாகத்தில் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையில் நாளொன்றுக்கு 10 ஆயிரம் ரின் மீன்கள் உற்பத்தி செய்யப்படும்.

# தேவாலயங்களுக்கு 50 மில்லியன்

(கொழும்பு)

கிறிஸ்தவ தேவாலயங்களை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் இவ்வருடம் 50 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக பிரதமரும் புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சருமான தி.மு.ஜயரத்ன தெரிவித்தார்.

பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கல்வாரி தேவாலயத்தின் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு தொடர்பான கலந்துரையாடலின்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த பிரதமர் - ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலில் முன் எப்போதையும்

19 ஆம் பக்கம் பார்க்க



# மீள்குடியமர்வில் தாமதம் காரணம் கூற முடியுமா?

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மக்கள் மீள்குடியேற்றம் தாமதமடைவதன் காரணம் குறித்தும், யாழில் படையினர் கடை வைத்து வியாபாரம் செய்வது குறித்தும் அதிகம் அறிவதில் ஆர்வம் காட்டினார். நேற்று முன்தினம் யாழ். செயலகத்திற்கு விஜயம் செய்த பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் லோர்ட்ஸ் நெசபி, அவரது பாரியார் சகிதம் நேற்று முன்தினம் மாலை யாழ். குடாநாட்டிற்கான இரண்டு நாள் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

அரச அதிபரின் மாநாட்டு மண்டபத்தில் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் மீள்குடியேற்றம் கண்ணிவெடியகற்றல் குறித்து குழுவினருக்கு அரச அதிபர்

19 ஆம் பக்கம் பார்க்க

## பனை/தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோரல்

**01. பதவி:- பொதுமுகாமையாளர் (நிரந்தரம்)**

பதவிக் குறியீட்டு எண்:- 101/8

சம்பள அளவுத் திட்டம்:- 11200 - 14100 / 140x10 - 150x10

(கூ.ஊ.ஆ.குழு சுற்றுநிருபம் 66/2006 இன் படி) கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்.

**பதவிக்கான தகைமைகள்:**

அ) கூட்டுறவுப் பணியாளர் 9 ஆவது சம்பள அளவுத் திட்டத்தில் முகாமை/மேற்பார்வை பதவியில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்ட பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டதாரிச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமனான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் முகாமை மட்ட பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் தராதரப் பத்திர (உயர்தர) சான்றிதழ்/க.பொ.த (உயர்தரம்) மூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்ட பதவி ஒன்றில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

வயதெல்லை:- 21 - 45 (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது)

**02. பதவி:- கணக்காளர் (நிரந்தரம்)**

பதவிக் குறியீட்டு எண்:- 104/10

சம்பள அளவுத் திட்டம்:- 10700 - 13200 / 12x10 - 13x10

(கூ.ஊ.ஆ.குழு சுற்றுநிருபம் 66/2006 இன் படி) கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்.

**பதவிக்கான தகைமைகள்:**

அ) கூட்டுறவுப் பணியாளர் 11 ஆவது சம்பள அளவுத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர்/கணக்காளர் அல்லது கணக்கு லிகிதர் பதவியில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது 12 ஆவது சம்பள அளவுத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர்/கணக்காளர் அல்லது கணக்கு லிகிதர் பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் இறுதிப் பரீட்சையில் சித்தியுடன் மேற்பார்வைத் தரத்தில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனத்தில் கணக்கு/கணக்காய்வு வேலைகளில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்/ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவாளர் இடைநிலைப் பரீட்சை சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனத்தில் மேற்பார்வைத் தர கணக்காய்வு பதவியில் 04 வருட அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவு பணியாளர் உயர்தரப் பரீட்சை சான்றிதழ்/க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியுடன் மேற்பார்வைத் தரத்தில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனத்தில் கணக்கு/கணக்காய்வு வேலைகளில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

வயதெல்லை:- 18 - 45 (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது)

**நிபந்தனைகள்**

அ) கூட்டுறவுச் சங்கங்களில் தற்போது கடமையாற்றுபவர்கள் சங்கத்தின் ஊடாக சிபார்சுசெய்து விண்ணப்பிக்கவேண்டும்.

ஆ) பிணைப்பணம்: சங்கத்தால் கோரப்படும் உரொக்கப்பிணை, ஆதனப்பிணை செலுத்த வேண்டும். பதவி நிரந்தரமானது. இரண்டு வருடங்கள் தகுதிகாண் காலத்தை கொண்டதுமாகும்.

இ) விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் பிரதிகள் இணைக்கப்படவேண்டும். விண்ணப்பங்களை ஏற்கவோ, நிராகரிக்கவோ நெறியாளர் குழுவுக்கு உரிமையுண்டு.

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சங்க எல்லைப் பரப்புக்குள் வசிப்பவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பப் படிவங்களை சுயமாகத் தயாரித்து "தலைவர் பளை/பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் - பளை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 20.04.2012 இற்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், குறியீட்டு இலக்கம் குறிப்பிடல் வேண்டும்.

**க.இராசதுரை**
**தலைவர்,**
**பளை/பனை தென்னை வள**
**அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,**
**பளை.**

(C/1360)

# மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் பங்குனித் திங்கள் பொங்கல் விழா





(மட்டுவில்)

யாழ்.மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோயிலில் வரலாற்றுச் சிறப்பு மிக்க 3 ஆம் பங்குனித் திங்கள் பொங்கல் திருவிழா நேற்று முன்தினம் பூஜை வழிபாடுகளுடன் சிறப்புற நடைபெற்றது.

பக்தர்கள் பன்றித் தலைச்சி அம்மன் சூழலில் பொங்கல் பொங்கி அம்மனிற்கு படைத்து வழிபட்டனர். பல பாகங்களில் இருந்தும் பக்தர்கள் காவடி எடுத்தும் கற்பூரச் சட்டி ஏந்தியும் பன்றித் தலைச்சி அம்மனை வழிபட்டு தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றியிருந்தனர்.

பொங்கல் திருவிழாவிற்கு நாட்டின் பல பாகங்களில் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு ஆலய தீர்த்தக் கேணியில் தீர்த்தமாடி பக்தர்கள் தமது குறைகள் நீங்க பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டனர்.

## இளைஞன் தடுப்புக்காவலில்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்குப் பகுதியில் 14 வயது நிரம்பிய சிறுமியை பாலியல் வல்லுறவு செய்த இளைஞரை 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

காரைக்கால் இணுவில் என்னும் இடத்தைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு சிறுமியை வன்புணர்வு செய்ததாக யாழ். சிறுவர் பெண்கள் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரியினால் கைது செய்யப்பட்டு நேற்று நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய வேளையே யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா இவ்வாறு உத்தரவிட்டார். (எஸ்)

## குழவி கொட்டியதில் 4 பேர் காயம்

(கிராஞ்சி)

பூநகரி கிராஞ்சிப் பகுதியில் குளவி கொட்டியதில் ஒரு சிறுவன் உட்பட 4 பேர் படுகாயமடைந்த நிலையில் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பூநகரி கிராஞ்சி மேற்கு ஆலய வளாகத்தில் இருந்த ஆலய மரம் ஒன்றிலிருந்த குளவிக் கூட்டினாலேயே இவ் அனர்த்தம் நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1350)


## அறிவித்தல்

இத்தால் சகலரும் அறிவது 70/14, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வி கிறிஸ்தோத்திரம் எல்சி கிப்பொலிற்றா என்பவர் 1986.08.01 இல் பிரசித்த நொத்தாரிஸ் S.S.பிரான்சிஸ் முகதாவில் நிறைவேறிய 323 ஆம் இலக்க நன்கொடை உறுதியால் சுண்டிக்குளி இறை "விளான்குளம் வயல்" என்ற நாமமுடைய 70/14, ஈச்சமோட்டை வீதியிலுள்ள நிலப்பரப்பு 2 இற்கு சொந்தக்காரரும் ஆட்சியாளருமானவர் என அறியவருகிறது.

மேற்படி செல்வி கிறிஸ்தோத்திரம் எல்சி கிப்பொலிற்றா குறித்த ஆதனத்தின் சோலைவரிப் பெயரை தமது பெயருக்கு மா[illegible] விண்ணப்பித்துள்ளார். எனவே சோலைவரிப் பெயர் மாற்றம் தொடர்பாக எவருக்காவது ஆட்சேபம் இருப்பின் இவ்அறிவித்தல் வெளிவந்த நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் ஆட்சேபனையை யாழ்.மாநகரசபை ஆணையாளருக்கு தெரிவிக்கும்படி வேண்டுவதுடன், குறித்த காலப்பகுதிக்குள் சோலைவரிப் பெயர் மாற்றம் சம்பந்தமாக எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்காவிட்டால் அதன்பின் சோலைவரிப் பெயரை அவர்களது பெயருக்கு மாற்றுவதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் யாழ். மாநகரசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**திருமதி யோ.பற்குணராசா**
**முதல்வர்**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**
**02.04.2012**

(C/1358)

## வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

### உடற்கோப்பு அமைப்பதற்கான கூறுவிலை கோரல்

எமது கொத்தணியினால் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட TATA LPT 1109 EX (19') வாகனத்திற்கு முழு உடற்கோப்பு அலுமினியத்தால் அமைப்பதற்குத் தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது. கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 11.04.2012 ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரியில் கூறுவிலையைச் சமர்ப்பித்து உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**பொது முகாமையாளர்**
**வலிகாமம் பனை தென்னை வள**
**அபிவிருத்திக் கூட்டுறவுச்**
**சங்கங்களின் கொத்தணி.**

**03.04.2012**
**சங்கானை வீதி,**
**மானிப்பாய்.**

(C/1359)

உ

சிவமயம்

"நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்குக"

**புளியம்பொக்கணை**
**நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை**

## கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழாவை முன்னிட்டு தண்டல் ஒழுங்குகள் பற்றிய அறிவித்தல்

நாகதம்பிரான் பொங்கல் விழா எதிர்வரும் 05.04.2012 வியாழன் நடைபெறவுள்ளது. இதை முன்னிட்டு கடந்த 30.03. 2012 தொடக்கம் இன்று வரை வட்டக்கசசி, இராமநாதபுரம், கல்மடு, விசுவமடு, திருவையாறு, பிரமந்தனாறு, மயில்வாகனபுரம், உடையார்கட்டு, சுதந்திரபுரம், தேவிபுரம் போன்ற பகுதிகளுக்கு ஆலயத் தொண்டர்கள் ஆலய சின்னக் கொடிகளுடன் தண்டல் ஒழுங்குகளுக்காக வருகை தரவுள்ளனர்.

**இவ்வண்ணம்**
**ஆலய பரிபாலனசபை**

(C/1345)

நாம் ஒருவருக்கொருவர் ஒரு ரூபாய் கொடுத்தால்,
நம் இருவரிடமும் ஒரு ரூபாய் தான் இருக்கும்.
நாம் ஒருவருக்கொருவர் ஒரு நல்ல எண்ணத்தை பகிர்ந்தால்,
நம் இருவரிடமும் இரு நல்ல எண்ணங்கள் இருக்கும்

\- ஆப்ரகாம் லிங்கன

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## பகைநிலைக்குத் தள்ளும் அரசியல்!

ஜெனிவாத் திருவிழா முடிந்துவிட்டது. பரிந்துரைகளை அமுல்படுத்துவது பற்றிப் பதிலளிப்பதற்கு அரசுக்கு அடுத்த வருடம் வரை காலமிருக்கிறது. அதற்குள் என்னென்னவோ இராஜதந்திர ஓட்டங்கள் நடக்கலாம். அல்லது அதற்கடுத்த வருஷ கால அவகாசத்துடன் மற்றொரு பிரேரணையும் வரலாம்.

கடந்த நாலைந்து மாதங்களாக, சிகரங்கள் சப்பறங்கள் கட்டி நம் மக்களுக்கு ஜெனிவாத் திருவிழாவைக் காட்டிக் கொண்டிருந்தவர்கள், இன்னும் எத்தனையாவது வருஷத்தில் நம் பிரச்சினை தீரும்... மக்கள் பழையபடி அன்ன வாரமில்லாத ஒரு வாழ்க்கைக்குச் செல்ல முடியும் என்று சொல்கிறார்கள்? கேட்க வேண்டியது நம் கடமையல்லவா!

மார்ச் மாதத்துக்குப் பிறகு எதுவோ நடக்கப் போகிறது என்று மக்களுக்கு நம்பிக்கை விதைத்துக் கொண்டிருந்தவர்கள், கடைசியாக மூன்றாந் தரப்பின்றிப் பேச முடியாது என்று சொல்லிவிட்டு அவரவர் அலுவல்களைக் கவனிக்கப் போய்விட்டார்கள். தங்களுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் காலைவாரிக் கொண்டும் திட்டிக் கொண்டும் அவர்களது வேலையில் அவர்கள் மும்முரமாகி விட்டார்கள்.

சிங்கள மக்களை, அதன் அரசியற் கட்சிகளை கணிசமானவற்றையேனும் பொருட்படுத்தி நமது தீர்வு பற்றி, அரசியலுரிமைகள் பற்றிப் பேச வேண்டும் என்கிற எண்ணம் துளிக்கூட இல்லாமல், வெறுந் திமிர்த்தனமான பேச்சுக்களால் எல்லாவற்றையும் குழப்பிவிடுவதையே இவர்கள் செய்கிறார்கள்.

நம் பிரச்சினையை திசை திருப்பி, உலகையே எதிர்க்கக் கூடிய வீரச் சமூகமும் மற்றவர்களைவிட உயர்வான புத்திசாலிச் சமூகமும் நாமே என்பது போன்ற மாயப் புளுகத்தில் ஆழ்த்தி நம்மைப் படுகுழியில் இறக்கிய ஆவேசச் சிந்தனைகளைப் பரப்பியவர்களே இன்றும் எல்லாவற்றையும் எடுத்தெறியும் வீரவசனங்களைப் பேசியபடி பிரச்சினை தீர விடாமல் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

சரி–பிழை, நல்லது–கெட்டது, உரிமைகளையும் வாழ்வையும் பெறும் விவேகம் – மிகை ஆவேசத்தில் வீணான அழிவுகளைத் தேடும் வீம்பு, உலக யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு முன்னகரும் அரசியல்பார்வை – வன்முறைப் பேச்சின்றி இருக்க முடியாத வறட்டுப் பிடிவாதமும் அழிவும், மக்களைக் காக்கப் போராடுதல் – போருக்காக மக்களை அழியவிடுதல்..... இவற்றிலெல்லாம் தவறான தெரிவுகளையே நம் சமூகத்திற்குத் திணித்தார்கள்.

படித்தவர்களும், பத்திரிகையாளர்களும், எழுத்தாளர்களும், பேராசிரியர்களும் அதற்கே உடந்தையாயிருந்துவிட்ட அவலம் தான், இப்போதும் சமூகம் நமது அவல நிலையைப் புரிந்து கொள்ளாமல் வெற்று ஆவேசத்தில் துடித்தபடியிருக்கிறது.

நம் அபிலாசைகளை, உரிமைகளை, கௌரவத்தை இழந்து விடாமல் வாழ்வதற்கு இணக்கபூர்வமான வழிகள் உண்டு. அவற்றைக் கண்டடைந்துகொள்வதே நம்மைப் புத்திசாலிச் சமூகமாக உலகின்முன் நிரூபிக்கும். சமூகங்களைப் பகை நிலைக்குத் தள்ளி பிரச்சினை நீடிப்பதில் குளிர்காயும் அரசியலாளர்களை இனங்கண்டு கொள்ள வேண்டும்.

வாழ்வதற்கும் மக்களை வாழவைப்பதற்கும் உண்டான வழிகளை நோக்கியே நாம் பயணிக்க வேண்டும்.

\- ஆசிரியர்

# வலி.வடக்கில் மீள் குடியேற்றம்; வலியுறுத்தி மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்குப் பகுதிகளில் மக்கள் மீள்குடியேற்றத்துக்கு உட்படாத பகுதிகளில் மக்களைத் துரிதமாக மீள்குடியேற்றக் கோரி வலிகாமம் வடக்கு இடம்பெயர்ந்தோர் மீள்குடியேற்றக்குழு நேற்று யாழ். செயலகத்தில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது.

வலிகாமம் வடக்கு பகுதியான காங்கேசன்துறை, ஊறணி, மயிலிட்டித்துறை, மயிலிட்டி வடக்கு, பலாலி வடக்கு, பலாலி வடமேற்குப் பகுதி மக்களின் துரித மீள்குடியேற்றத்தினை வலியுறுத்தியே குறித்த குழு இம்மகஜரைக் கையளித்துள்ளது.

இம் மகஜர்களின் பிரதிகள் மீள்குடியேற்ற அமைச்சர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர், யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி, அரசியல் கட்சிகள் மற்றும் அரச அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கையளிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் முள்ளிவாய்க்கால் யுத்தம் நிறைவடைந்து மூன்று வருடங்கள் முடிவடையும் நிலை நெருங்கிவிட்ட நிலையிலும் யுத்த அனர்த்தத்தினால் நாம் எமது உறவுகளையும் சொத்துக்களையும் இழந்து உண்ணும் உணவிற்கே கஷ்ரப்பட்டு கலங்கி நிற்கின்றோம்.

வலி.வடக்குப் பிரதேசத்திலிருந்து, காங்கேசன்துறை, ஊறணி, மயிலிட்டித்துறை, மயிலிட்டி வடக்கு, பலாலி வடக்கு, பலாலி வடமேற்கு மக்கள் 1990 இல் இடம்பெயர்ந்து இருபத்திரண்டு வருட காலத்தை எட்டி நிற்கின்றனர். இந்த இடைக்காலத்தில் நாங்கள் சந்தித்த உயிர் இழப்புக்கள், உடமை இழப்புக்கள், அவலங்கள் சொல்லி மீளாது. ஆனாலும் யுத்தம் நிறைவடைந்ததும் மனதில் ஒரு நம்பிக்கை பிறந்தது. எமது ஊரில் எங்கள் காணி வீடுகளில் மகிழ்வுடன் சுதந்திரமாக வாழப்போகின்றோம் என்று, யுத்தம் நடைபெற்ற போது நாட்டின் பிற பகுதிகளிலும் வெளிநாடுகளிலும் வெளியேறி வாழ்ந்த மக்கள் யுத்தம் முடிவுற்றதும் வீட்டுச் சொந்தக்காரர் தம் சொந்த வீடுகளுக்கு வருகை தரும் காரணத்தால் நாம் இருந்த வீடுகளிலிருந்து வெளியேறும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் உறவினர், நண்பர்கள், வீடுகளில் நீண்ட காலம் வாழ்வதால் அவர்களின் சொல்லாலும் செயல்களாலும் படும் இம்சைகள் எம் உள்ளத்தை புண்ணாக்கி தொடர்ந்து வேதனையைத் தந்து கொண்டிருந்தது. அதற்கு ஒரு முடிவு விடிவு வந்துவிட்டது என்று சந்தோஷப்பட்டோம். ஆனால் அதுவும் தற்போது ஏக்கமாக மாறத்தொடங்கி விட்டது 1996, 1997, 2004, 2009 இடம்பெயர்ந்த மக்கள் மீள் குடியேறி வாழ்கின்றபோது கடல் வளத்திலும் (2ஆவது மீன் பிடித்துறைமுகம், இலங்கையின் முதலாவது காசநோய் வைத்தியசாலை உருவாக்கப்பட்டதும் இப்பகுதியிலே) விவசாய வளத்திலும் உழைப்பின் மூலம் நாட்டின் வருமானத்தை உயர்த்தி நின்ற நாம் எமது ஊருக்குச் செல்ல முடியுமா? என்ற ஏக்கத்துடன் வாழ்ந்து விரக்தி அடைந்த நிலையில் தங்களிடம் தயவுடன் வேண்டிக்கொள்வது எமது ஊரில், எமது சொந்தக் காணிகளின் வீடுகளில் சொந்தமான தொழில் செய்து நாம் வாழவழி செய்து தாருங்கள் என்று ஒருமித்த கருத்துடன் ஒருமித்த குரலில் கேட்டு நிற்கின்றோம். இதற்கு தங்களின் சாதகமான பதிலை மிக விரைவில் எதிர்பார்த்து பணிவுடன் வேண்டி நிற்கின்றோம்.

(பா,02)

## நகைக்கடையில் திருட்டு யாழ்.நகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் கஸ்தூரியார் வீதியில் நாவலர் சந்திக்கும் கன்னாதிட்டிச் சந்திக்கும் இடையில் நகைகளுக்கு தங்க முலாம் பூசும் நகைக்கடை ஒன்றில் கூரையைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் அங்கிருந்த ரொக்கப்பணத்தைக் களவாடிச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இத்திருட்டுச் சம்பவம் மேற்படி பகுதியில் அமைந்துள்ள கஜானி கோல்ட் பிளேற்றிங் என்னும் நகைகளுக்கு தங்க முலாம் பூசும் கடையிலேயே இடம் பெற்றுள்ளது. கடையின் உரிமையாளர் நேற்று முன்தினம் இரவு குருதியமுக்க நோய் காரணமாக கடையை பூட்டிவிட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்காகச் சென்றுள்ளார். பின்னர் நேற்றுக் காலை சிகிச்சையை முடித்துவிட்டு கடைக்கு திரும்பி வந்து பார்த்தபோது கடையின் கூரை பிரித்து திருடர்கள் உள்ளே வந்தது தெரிய வந்தது.

கடையின் மேசை இலாச்சியினுள் இருந்த 50,000 ரூபா பணத்தினை திருடர்கள் களவாடிச் சென்றிருப்பதாகவும் இருந்தும் இரும்புப் பெட்டகத்தில் (அயன் சேவ்) இருந்த நகைகள் பத்திரமாக இருப்பதாகவும் தெரியவருகிறது. இச்சம்பவம் குறித்து நகைக்கடை உரிமையாளர் யாழ். பொலிஸாரிடம் முறையிட்டதனை அடுத்து அவர்கள் விரைந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(பா)

## கைதான மீனவர்களை விடுவிக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இந்திய கடற்பரப்பில் வைத்து கடந்த மாதம் 26ஆம் திகதி இந்திய கடலோர பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட வடமராட்சி மீனவர்கள் இருவரையும் விடுவிக்குமாறு கோரி அம் மீனவர்களது உறவினர்கள் நேற்று யாழ்.இந்தியத்துணைத் தூதரகத்திடம் மனு ஒன்றை கையளித்துள்ளனர்.

தயாளன் தயாபரன் (வயது 18) சிவாஜி பிரபு (வயது 28) என்ற இரண்டு வடமராட்சி மீனவர்களே இவ்வாறு இந்திய கடலோரக்காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ் இருவரையும் விடுவிக்குமாறு இந்திய அரசைக்கோரி நேற்று முற்பகல் அம் மீனவர்களது உறவினர்கள் குறித்த மனுவை கையளித்துள்ளனர்.

குறித்த மீனவர்கள் பயணம் செய்த படகு திசை மாறி இந்தியக் கடற்பரப்புக்குள் சென்ற போதே இம் மீனவர்கள் இந்திய கடலோரப் பொலிஸாரினால் பிடித்துச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

(பா, 02)

## திடீர் மின்வலு உயர்வால் உபகரண்ணங்கள் பழுதடைகிறது

(வலிகாமம்)

வலிகாமம் பகுதியிலுள்ள சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பளை, அளவெட்டி, மருதனார்மடம், உடுவில் பகுதிகளில் அடிக்கடி மின் அதிகரிப்பு ஏற்படுவதனால் தொடர்ச்சியாக மின் உபகரணங்கள் எரிந்து பழுதடைந்து வருகின்றன என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் மருதனார்மடம் சந்தியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தின் இரண்டு பம்பிகள் எரிந்துள்ளதுடன் அயலிலுள்ள வீடுகள், கடைகளில் இருந்த மின் உபகரணங்களும் சேதமடைந்துள்ளன.

இதே போன்று கடந்த வாரத்திலும் தெல்லிப்பளை, அளவெட்டி, மல்லாகம் பகுதிகளிலும் நடந்ததால் பல இலட்சம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்கள் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் காங்கேசன்துறை - யாழ்ப்பாணம் வீதி அகலிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து மின் கம்பங்கள் இருந்த இடத்திலிருந்து மாற்றி புதிய இடங்களில் பொருத்தப்பட்டு வருகின்றன. இதனை அடுத்து இந்த அவலம் பொதுமக்களுக்கு ஏற்படத்தொடங்கியுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## பொங்கல் வழிபாடும் உபகரணங்கள் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்கு அருள்மிகு நாக தம்பிரான் ஆலய பங்குனி உத்தர பொங்கல் விழா நாளை வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் இரவு 7.30 மணிக்கு உத்தர அபிஷேகமும், பின்னிரவு 1.00 மணிக்கு பொங்கல் பூசையும், அதிகாலை 5 மணிக்கு நெய்வேத்திய பூசையும் இடம்பெறவுள்ளது.


இவ் உட்சவத்தில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வும் அன்றைய தினம் இரவு 8.00 மணிக்கு தலைவர் ஸ்ரீகந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக ஈ.பி.டி.பி. யின் நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அ.ரவீந்திரதாஸன், அரியாலை கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் வி.சிவநேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

2011 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

# தமிழ்பேசும் மக்களுக்கான தீர்வு சுயஇலாப தலைமைகளால் இழுத்தடிப்பு

## ஈ.பி.டி.பி.சர்வதேச முக்கியஸ்தர் விந்தன் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினை தீராப்பிரச்சினையாக நீடித்துச் செல்வதற்கும் இதனால் கடந்த காலங்களில் எமது மக்கள் அழிவுகளையே சந்திக்க வேண்டிய துயர நிலை ஏற்பட்டமைக்கும் காரணமானவர்கள் யார் என்பதை தமிழ் மக்கள் இன்று உணரத்தொடங்கி விட்டார்கள் என ஈ.பி.டி.பியின் சர்வதேச முக்கியஸ்தர் விந்தன் தெரிவித்துள்ளார்.

கைதடியில் நடைபெற்ற மக்கள் சபை உறுப்பினர்களுடனான சந்திப்பின் போதே தெரிவித்தார். இவ்வாறு அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு முன்னர் மாறி மாறி ஆட்சிக்கு வந்திருந்த தலைமைகள் எமது மக்களின் அரசியலுரிமை தீர்வு விடயத்தில் அக்கறையின்றி செயற்பட்டிருந்தாலும் இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு பின்னரான அரசுகள் ஏதோ வகையில் அரசியலுரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முயற்சி எடுத்திருந்தனர். ஆனாலும் அவ்வப் போது சந்தர்ப்பம் கிடைத்த தமிழ்பேசும் தலைமைகள் தமது சுயஇலாபங்களுக்காக காலம் கடத்தும் நாடகங்களை அரங்கேற்றி வந்தனர்.

குறிப்பாக இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை சரிவரப் பயன்படுத்த முடியாத தமிழ் தலைமைகள் அதற்குப் பின்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க ஆட்சியிலும் அரியதொரு சந்தர்ப்பத்தை திட்டமிட்டு கை விட்டிருந்தனர்.

தென்னிலங்கை இனவாத சக்திகளோடு இணைந்து சந்திரிகா அரசு கொண்டு வந்த தீர்வுத் திட்டத்தை எதிர்த்து இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ளவர்கள் அன்று பேரணியில் கலந்து கொண்டார்கள். அது மட்டுமன்றி அந்த ஒப்பந்த நகல்களை நாடாளுமன்றத்தில் வைத்து தென்னிலங்கை இனவாதக் கட்சிகளோடு இணைந்து எரித்து அழித்திருந்தனர்.

இவ்வாறு கிடைத்த தீர்வுகளையும் எரித்து அழித்தவர்கள் தமிழ் மக்களுக்கு எந்தத் தீர்வைப் பெற்றுக் கொடுத்தார்கள். தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு மாறாக அழிவுகளை மட்டுமே அவர்கள் பெற்றுக்கொடுத்திருந்தார்கள் எனவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சிப் பிரதேச அமைப்பாளரும், சாவகச்சேரி பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான வலன்ரைன் (சாள்ஸ்), ஆசிரியர் செல்வவடிவேல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கற்கைநெறி தொடர்பாக மாணவர்களுடன் சந்திப்பு

(கரணவாய்)

வடமராட்சியில் கடந்த 2 வருடங்களாக திறந்த பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களை நாளை வியாழக்கிழமை காலை 9 மணியளவில் இமையாணன் கலைமகள் முன்பள்ளி மண்டபத்திற்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றையதினம் சந்திப்பொன்று இடம் பெறவுள்ளதுடன் சிரேஷ்ட போதனாசிரியர் கொ.குணசிங்கம் இம்மாணவர்களைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

மேலும் யாழ்.கெருடாவில் பரந்தாமன் பாடசாலையில் பதிவு செய்தவர்களில் அடிப்படைக் கற்கை நெறியை பயின்றவர்களுக்கு தற்காலிக சான்றிதழ் பெறுவது தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளதுடன் இதில் வடமராட்சி வலய முறைசாரா கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கலந்து கொள்ளவுள்ளார். எனவே மாணவர்களைத் தவறாது வருகை தருமாறு போதனாசிரியர் தெரிவித்துள்ளார். (18)

## நீதிமன்றத்தால் அபராதம்

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்து விதிமுறைகளை மீறிய நபருக்கு 4 ஆயிரம் ரூபா அபராதம் யாழ்.நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

யாழ்.போக்குவரத்துப் பொலிஸாரினால் யாழ்.நகரப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சோதனையின் போது குறித்த நபர் கைது செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

மேற்படி வழக்கினை விசாரணை மேற்கொண்ட யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா 4 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தீவகம் வடக்கு ஊர்காவற்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 10 மணிக்கு ஊர்காவற்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தீவகப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் நடைபெறவுள்ளது. (69)

## பாலியல் வன்புணர்வு; இளைஞருக்கு எதிராக வழக்கு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பகுதியில் ஏழு வயதுச் சிறுமியை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திய இளைஞருக்கு எதிராக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் யாழ்.மாவட்ட உள சமூக இணைப்பாளர் கு.கௌதமன் சட்டத்தரணி கே.சுகாஸ் மூலம் சாவகச் சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வீட்டில் உறங்கிக் கொணடிருந்த சிறுமியை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திய குற்றச்சாட்டில் குறித்த இளைஞன் கொடிகாமம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்து, நிபந்தனையுடனான பிணையில் கடந்த 12ஆம் திகதி விடுவிக்கப்பட்டிருந்தார். சிறுமியின் எதிர்காலத்தினைக் கருத்திற்கொண்டு மீண்டும் குறித்த இளைஞனால் சிறுமிக்குப் பாதிப்பு ஏற்படலாம் என்பதைக் கருத்திற்கொண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு எதிர்வரும் 10 ஆம் திகதி சாவகச்சேரி நீதிமனறில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் யாழ். மாவட்ட உளவள சமூக இணைப்பாளர் தெரிவித்தார். (எஸ்)

## யாழ்.வணிகர் கழகத்தால் வாழ்வாதார உதவிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வணிகர் கழகம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த 210 குடும்பங்களுக்கு 13 இலட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகளை வழங்கியுள்ளதாக வணிக கழக சங்கத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தெரிவித்துள்ளார.

இது சம்பந்தமாக அவர் மேலும் தகவல் தருகையில், யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 150 குடும்பங்களுக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 4 பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த 60 குடும்பங்களுக்கும் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு கணவன்மாரை இழந்த குடும்பங்களுக்கும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களுக்கும் இவ்வாழ்வாதார உதவிகள் (கோழிப் பண்ணை அமைப்பதற்கான உபகரணங்கள்) வணிகர் கழகத்தினால் வழங்கப்பட்டு வரும் நிலையில் இதே உதவிகளை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளவர்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் இதற்கு நிதியுதவி செய்ய விரும்புவோர் வணிகர் கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (146)

## பட்டப்பகலில் சைக்கிள் திருட்டு

(கரணவாய்)

கரணவாய்-நெல்லியடிப் பகுதியில் தொடர்ச்சியாகத் திருட்டு நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியிலுள்ள மருந்தகம் ஒன்றில் வேலை செய்யும் பெண்ணின் துவிச்சக்கர வண்டியொன்று நேற்றுமுன்தினம் பட்டப்பகலில் களவாடப்பட்டுள்ளது. குறித்த பெண்ணின் துவிச்சக்கர வண்டியொன்று ஏற்கனவே அதே மருந்தகத்திற்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் 2 மாதங்களுக்கு முன்னர் களவாடப்பட்டது.

தற்போது புதிய துவிச்சக்கர வண்டியில் வந்து சென்ற மேற்படி பெண்ணின் அந்தத் துவிச்சக்கர வண்டியும் திருடப்பட்டுள்ளது.

இப்பகுதியில் அண்மைக் காலமாகத் திருட்டு சம்பவங்கள் அதிகரித்துள்ளதுடன், இச்சைக்கிள் திருட்டுத் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸில் உரியவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (18)



**வல்வெட்டித்துறை மணல் தெரு கம்பர் மலையில் உள்ள தங்கராசா என்பவரின் வீட்டில் உள்ள வாழையில் பெரிதாக இருந்த பொத்தி நீண்ட காலமாக விரியாது இருந்த நிலையில் தற்போது வீட்டு உரிமையாளர் வாழைப் பொத்தியை வெட்டி எடுத்த போது சிறு சிறு பொத்திகள் பல சேர்ந்து அம்மனுக்கு நாகம் குடைபிடிப்பது போல் உள்ளதால் இவற்றை பெரும் திரளானோர் பார்வையிட்டுச் செல்கின்றனர். (18)**

## சாந்திகம் நிலையத்தினால் உளவள ஆலோசனைகள்

(யாழ்ப்பாணம்)

சாந்திகம் உளவள நிலையம் உளவள சேவையினைத் தற்கால தேவைகளுக்கு அமைய வழங்கி வருகின்றது.

அந்த வகையில், யாழ்குடாநாட்டில் அண்மைக்காலமாக அதிகரித்துவரும் சமூகச் சீர்கேடுகள், குடும்பப் பிரச்சினைகள், பாலியல் பலாத்காரங்கள், இளவயதுக் கர்ப்பங்கள், தற்கொலை முயற்சிகள், மதுபாவனையின் தீவிரத்தினால் ஏற்படும் பிரச்சினைகள் போன்றவற்றிலிருந்து மீண்டு வாழ்வதற்கான ஆலோசனைகளும், சிகிச்சைகளும் வழங்கப்பட்டு வருகிறது.

இச்சிகிச்சைகள் இத்துறை சார் வல்லுநகர்களான க.விஜயரட்ணம், டாக்டர் பிறிற்றோ டக்ளஸ், திருமதி லி.சிறோமி, யோக சிகிச்சையாளர் யோகா சிவா முதலானோரால் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உளவள ஆலோசனைகளையும், சிகிச்சைகளையும் பெற விரும்புவோர் இல.15, கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள சாந்திக உளவள நிலையத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும் என நிலையத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஞானச்சுடர் வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையால் மாதாந்தம் வெளியிடப்படும் ஞானச்சுடர் சஞ்சிகையின் பங்குனி மாத இதழ் வெளிவந்துள்ளது.

இச்சஞ்சிகை சைவ சமய ஒழுக்கங்கள், கீர்த்தித் திருவகவல், கந்தரநுபூதி, சைவத் திருக கோவிற் கிரியை நெறிகள் உள்ளிட்ட பல்வேறு ஆன்மீகத் தகவல்களை உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளது.

## படிவங்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வாகன உடமை மாற்றம தொடர்பான பாவனையிலுள்ள MTA - 6&8 படிவங்களைப் பொதுமக்கள் எவ்வித கட்டணமும் இன்றி அவ்வவ் பிரதேச செயலகங்களில் பெற்றுக்கொள்ள முடியுமென்பதையும் வெளியிடங்களில் விற்கப்படும் படிவங்களைப் பெற்றுக்கொளவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் யாழ்.மாவட்ட அரச அதிபர் பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

அத்துடன் குறித்த படிவங்கள் எந்த நிலையிலும் தனியார் கடைகளிலும் விற்பனை செய்யப்பட முடியாது என்பதுடன் அவ்வாறு விற்பனை செய்யப்படுவது மோட்டார் போக்குவரத்துச் சட்டங்களின் படி தண்டனைக்குரிய குற்றமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சவால்களை எதிர்கொள்ள பெண்கள் முன்வரவேண்டும்

## - மகளிர் தின நிகழ்வில் யாழ்.அரச அதிபர்

(வடமராட்சி)

கிராமப்புறங்களில் வாழும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் தெரிந்தோ தெரியாமலே நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வன்முறைகளுக்கு ஆளாகிவருவதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தில் கிராமியப் பெண்களை வலுவூட்டுவோம் வளமான சமுதாயத்தை உருவாக்குவோம் என்ற மகுட வாசகத்திற்கிணங்க சர்வதேச மகளிர் தின விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், கிராமப்புறப் பெண்கள் மீது திணிக்கப்படும் வன்முறைகளுக்கெதிராக அனைவரும் குரல் கொடுக்கவேண்டும் ஆக்கபூர்வமான சிந்தனையுடையவராக பெண்களை மாற்ற கிராம மட்ட சங்கங்கள் முன்வர வேண்டும். அப்போதுதான் பாதிப்படைந்துவரும் பெண் இனத்தை எமது நாட்டில் நல்ல பிரஜைகளாக மாற்ற முடியும். இன்றைய காலத்தில் சிசு தொடக்கம் பெண்கள் வரை அடிமையாக்கப்படுகின்றனர்.

தற்போது யாழ்.மாவட்டத்தில் கல்வியிலும், விளையாட்டுக்களிலும் பெண்கள் முன்னிலையில் நிற்கின்றார்கள். கல்வித்துறையில் தற்போது 2020 வேலையற்ற பட்டதாரிகள் இருக்கின்றார்கள். 35 ஆயிரம் இளைஞர் யுவதிகள் உள்ளனர். இவர்களில் பல விதமான எண்ணங்களோடு வாழ்பவர்களும் இருக்கின்றார்கள். இவர்கள் படித்தது மட்டுமல்லாது நல்ல சிந்தனையும், ஆளுமையும் கொண்டவர்களாகவும் தனியே இறங்கி வேலை செய்து பெண் என்ற சமத்துவத்தை உணர்த்த இன்றைய நாளில் முன்வரவேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச செயலர் திருமதி சு.மதி யழகன், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தி யோகத்தர் திருமதி ந.ஜெயராஜன், சமூக சேவகி திருமதி இந்திராணி பாஸ்கரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (116)

## வீதி அகலிப்புக்காக மின்சாரம் தடை

(யாழ்ப்பாணம்)

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த மின் தடை பற்றிய செய்திக்கு மேலதிகமாக வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை, வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00மணி வரை தொட்டிலடிசந்தி முதல் சங்கானை ஊடாக சித்தங்கேணிச் சந்தி வரையான பிரதேசம், சித்தங்கேணி முதல் வட்டுக்கோட்டை வரையான V.C பிரதேசம் ஆகிய இடங்களிலும், எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், அராலி, காரைநகர் பிரதேசம், தீவகப்பிரதேசம் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்படுத்தப்படும் என யாழ்பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## வீதி விபத்து: இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - ஆரியகுளம் பகுதியில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஆட்டோவுடன் மோதியதில் ஆட்டோவில் பயணித்த இருவர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 6.50 மணியளவில் பருத்தித்துறையில் இருந்து வந்த பேருந்தும் ஸ்ரான்லி வீதியூடாக வந்த ஆட்டோவும் நேருககு நேர் மோதியதில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மானிப்பாய் வீதியைச் சேர்ந்த ஆட்டோ சாரதியான எஸ்.சுதர்சன (வயது - 33) என்பவரும் ஆட்டோவில் பயணித்த தெகிவளையைச் சேர்ந்த பத்மினி சில்வா (வயது - 54) என்ற வயோதிபரும் படுகாயமடைந்துள்ளனர். ஆட்டோவும் பலத்த சேதமடைந்துள்ளது. (எஸ்)

## கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு மேற்கு நெழுவினி ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இவ் உற்சவமானது எதிர்வரும் தமிழ் சிங்களப் புத்தாண்டு தினமான 13ஆம் திகதியன்று தேர், தீர்த்த உற்சவத்துடனும் மறுநாள் பூங்காவன உற்சவத்துடனும் நிறைவு பெறவுள்ளது.

## கணினிகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

கனடா வாழ் சங்கானை மக்கள் ஒன்றியத்தின் நிதியில் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்திற்கு 7 கணினிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

சுமார் 2 இலட்சத்து 42 ஆயிரம் ரூபா பெறுமதியான கணினிகளை பாடசாலை அதிபர் சிவசுந்தரத்திடம் மேற்படி ஒன்றியத்தால் பழைய மாணவர் சங்கத்தின் ஊடாக கையளிக்கப்பட்டுள்ளது. (எஸ்)

## யாழ்.குடா நாட்டில் பாலுக்குத் தட்டுப்பாடு

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணத்திலுள்ள பல பாற்சாலைகளில் பாலுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாவனையாளர்கள் பலர் தினமும் பாற்சாலைகளுக்கு முன்னால் பாலுக்காக காத்திருப்பதைக் காண முடிகின்றது. அதிகாலை பாற்சாலைகள் திறப்பதற்கு முன்னதாகவே பல பாவனையாளர்கள் பாற்சாலைக்கு முன்பாக குழுமி நிற்கின்றனர். சில இடங்களில் வரிசையாக நின்று பாலைப் பெற்றுக்கொண்டாலும் சிலர் பால் கிடைககாமல் வெறும் கையுடன் வீடு திரும்புகின்றார்கள்.

இலவச சேவையை வழங்கும் பல முன்பள்ளிகளில் சிறார்களுக்கு பாடசாலை நாட்களில் தினமும் 150 லீற்றர் பால் யாழ்கோ பால் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்றது. இவ்வாறு யாழ்ப்பாணம், நல்லூர், தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், சங்கானை, காரைநகர், கோப்பாய் ஆகிய இடங்களில் உள்ள முன்பள்ளிகளுக்கு பால் வழங்கப்படுகின்றது.

மகிந்த சிந்தனையின் கீழ் முன்பள்ளி சிறார்களுக்கு இவ்வாறு பால் வழங்கப்படுகின்றது. 4000லீற்றர் பால் தற்போது யாழ்.மாவட்டத்திற்கு தேவைப்பட்டாலும் 3500 லீற்றர் பாலையே பாவனையாளர்களுக்கு வழங்கக்கூடியதாகவுள்ளதாக யாழ்கோ பால் சபையின் பதில் பொது முகாமையாளர் க.மலர்வண்ணன் தெரிவித்தார். மாதத்தில் இருபது நாட்கள் முன்பள்ளிகளுக்கு பால் வழங்கப்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (137)

## அனுமதிப்பத்திரமற்ற பேருந்து; அபராதம் விதித்தது நீதிமன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் வழித்தட அனுமதியின்றி அதிகளவான பயணிகளை ஏற்றிய நிலையில் பயணித்த பயணிகள் வாகனம் ஒன்றின் நடத்துநருக்கு எதிராக யாழ்.நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் 2000 ரூபா தண்டம் விதித்தது.

யாழ்.நகரில் பயணித்த பயணிகள் வாகனமொன்றை தடுத்து நிறுத்திய யாழ்.பொலிஸார் அதன் நடத்துநருக்கு எதிராக யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்றைப் பதிவு செய்தனர்.

இவ்வழக்கினை விசாரணை செய்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா வாகன நடத்துநருக்கு 2000 ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தார். (பா)

## முரசின் இன்றைய பலன்

(04.04.2012 –புதன்கிழமை)

கர வருஷம் பங்குனி 22 ஆம் திகதி. துவாதசி காலை 7.26 வரை. திரயோதசி பின்னிரவு. 5.49 வரை. நட்சத்திரம் பூரம் பின்னிரவு 4.09 வரை. அமிர்தயோம். இராகுகாலம் 12.09 - 1.39 வரை. சுபநேரம் 4.39 - 6.09 வரை. எமகண்டம் 7.39 - 9.09 வரை. குளிகைகாலம் 10.39 - 12.09 வரை. பிரதோஷ விரதம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பெரியோர் ஆசி, வேலைப்பளு அதிகரிக்கும், மருத்துவச்செலவு, திருமணப்பேச்சு. |
| ரிஷபம் | சுலப வெற்றி, அரசவழியில் உதவி, புத்திரர் வழியால் உதவி, ஆன்மீக ஈடுபாடு, |
| மிதுனம் | இலாபதினம், சகோதர வழியில் சச்சரவு, பிணைபோக வேண்டாம், இடமாற்றம் வரும். |
| கடகம் | மனதில் கவலை, ஆடம்பர செலவுகள், கடன தொல்லை தீரும், போட்டிகளால் இலாபம் குறையும். |
| சிம்மம் | இலாபதினம், உடல் ஆரோக்கியம், பெற்றோரால் உதவிகள், கொடுக்கல் வாங்கலில் இழுபறி. |
| கன்னி | வெற்றிக்களிப்பு, ஸ்தல வழிபாடுகள், சகோதர வழியில் உதவிகள், அநாவசிய பயணங்கள். |
| துலாம் | பிரச்சினைகள் தீரும், விறுவிறுப்பான வியாபாரம், உறவினர்களால் நன்மை, இடமாற்ற திருப்தி |
| விருச்சிகம் | எதிலும் இலாபம், தொழில் வளம் உயரும், குடும்பத்தில் கருத்துவேறுபாடு, பெற்றோர் உதவி. |
| தனுசு | திடீர் பயணங்கள், தொழில் துறையில் சாதனை, வரவு செலவில் திருப்தி, விருந்துபசாரங்கள். |
| மகரம் | முன்தினம் போல் கவனம் வேண்டும், குடும்பத்தில இணக்கம், காரியானுகூலம், பதவி உயர்வு. |
| கும்பம் | கடின உழைப்பு, புதிய முயற்சியில் வெற்றி, சமூகம் கௌரவிக்கும், கடன் தொல்லை தீரும். |
| மீனம் | மனக்கவலை, மேலதிகாரிகள் ஆதரவு, பொன பொருள் சேரும், கனவுகள் நிறைவேறும். |

## பரமர் சங்கமம்



யாழ்.அரசினர் வைத்தியசாலையில் முதலாம் மற்றும் இரண்டாம் இலக்க விடுதிகள் பிரசவ விடுதிகளாக அமைந்திருப்பது பலருக்கும் தெரிஞ்ச விடயம்தான்.

இதில் பலருக்குத் தெரியாத விடயங்களும் இருக்கின்றன. அநேகமாக எங்கள ஒட்டிய வயதுக்காரருக்கும் தெரியாத விடயமே! எங்களுக்கும் முன்னோருக்குமே அது நன்றாகத் தெரியும்.

நாங்களெல்லாம் அவங்கள் சொல்லக் கேள்விப்பட்டது எண்டால் எங்களை விட இளையவர்களுக்கும் இனி வரப்போகின்றவர்களுக்கும் சொல்லி வைச்சாலே தெரிய வரும். இல்லாமலும் ஆவணப்படுத்தப்பட வேண்டியது மெண்டால் மிகையிராது பாருங்க!

என்னெண்டால் இப்பொழுது பிரசவ விடுதிகள் அமைந்துள்ள இடங்களில் முன்னொரு காலம் மரவள்ளித்தோட்டம் இருந்ததாக சொல்லுவார்கள். அதனால் சில வருட காலங்கள் "மரவள்ளித்தோட்ட பிரசவ விடுதி" என வழங்கப்பட்டதுமுண்டு.

இந்தப்பிரசவ விடுதிதான் மனிதனின் ஆரம்ப இடமாக இருக்கின்ற அதேவேளை, முடிவு இடமாக அமைந்து விடுவதையும் தவிர்க்கமுடிவதில்லை. அதனைத்தான் செத்தும்பிறக்கும் பிறந்தும் சாகும் எனக் குறிப்பிடுவார்கள் போலும்.

அதுவும் இல்லாமல் பிறப்பில் ஏற்படக்கூடிய சில நாட்கள் அல்லது சில வாரங்கள் அதனையும் விட சில மாதங்கள் கூட கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்து பராமரிப்பதும் நிகழும்.


அப்படி என்ர பேரனும் சில நாட்கள் கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டான். அந்த நாட்கள் வீட்டில எல்லாம் அரை குறைதான். ஆள் ஒரு மாதிரித் தப்பியிட்டான். அப்படி தப்பாமல் போன கதையள் தான் மிக அதிகம்.

இன்னொரு சம்பவம் நடந்தது. பிள்ளையைக் கண்ணாடிப் பெட்டியில் வைத்திருக்க மனநோய் பிடிச்ச தாயொருத்தி பொலிஸில் தன்னுடைய பிள்ளையை தருகிறார்களில்லை என புகார் தெரிவிச்சு நடவடிக்கை எடுக்கப்பட்ட புதினங்களும் நடந்ததேதான்.

அப்படிக் குறைபாடுகளில் சொற்ப நாட்களில் மரணிக்கும் சிசுக்களின் பிரேதத்தை ஆஸ்பத்திரியோட விட்டுவிடுவதுமுண்டு. அப்படி விடப்படும் பிரேதங்களை மருத்துவத்துறை மாணவர்களின் படிப்புக்கு பயன் படுத்துவதுமுண்டு.

இன்னும் வேண்டாத கற்பத்தால் பிறக்கின்ற பிள்ளைகளை எடுத்துச் செல்லும் தாய்மார் வீசிப்போட்டும் போவார்கள். அத்தகைய பிள்ளைகளை, பிள்ளைகள் இல்லாதோர் தத்தெடுத்து வளர்ப்பதற்காகவும் இந்தப் பிரசவ விடுதிகள் களமாக அமைந்தும் விடுகின்றன.

நாட்டில் என்றில்லாமல் உலகெங்கும் அமைந்துள்ள பிரசவ விடுதிகளில் ஆரம்பமாகும் மனித வாழ்வில் இப்படி எத்தின புதினாங்களெல்லாம் ஏற்பட்டுப் போகுதெண்டு பாருங்கோவன்... பின்ன இல்லையே...




கொழும்பில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு அலுவலகத்தினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் திறந்து வைப்பதனையும் அலுவலகத்தின் தோற்றத்தையும் காணலாம்.

# அழுத்தங்களை எதிர்கொள்ள தயாராக உள்ளது அரசாங்கம்

## ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

ஜெனிவா, நியூயோர்க், வோஷிங்டன் என்று உலகில் எங்கிருந்து வரும் அழுத்தங்களையும் எதிர்கொள்வதற்கு தமது அரசாங்கம் தயாராகவே இருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் அரச அதிகாரிகள், கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சி அரசியல் தலைவர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஜெனிவா தீர்மானத்தை அடுத்து அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ள 'ஒன்றுபட்ட நாடு' என்ற பரப்புரை நிகழ்வுத் தொடரின் ஒரு பகுதியாக இந்தக்கூட்டம் இடம்பெற்றது.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி,

இன்று இலங்கை பலத்த சவால்களைச் சந்தித்து நிற்கிறது. ஆனால் இத்தகைய சவால்கள் எமக்குப் புதியவையல்ல.

இலங்கையை ஒற்றையாட்சி நாடாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்ட காலத்தில் இருந்து, நாடு பெரும் அழுத்தங்களை எதிர்கொண்டுள்ளது.

ஆனாலும், வெளிநாட்டு அழுத்தங்களுக்கு எதிராக ஒன்றுபட்ட குரலை எம்மால் வெளிப்படுத்த முடிந்தது.

எரிபொருள் விலை உயர்வு, அனைத்துலக நிதி நெருக்கடி காரணமாக வங்கிகள் மூடப்பட்டமை, பயங்கரவாதம் போன்ற சவால்களை நாம் எதிர்கொள்ள நேர்ந்தது.

அணிசேரா கொள்கை மூலம் இவற்றை எம்மால் எதிர்கொள்ள முடிந்தது. தொடர்ந்தும் நாம் அணிசேராமல் இருப்போம்.

இதனால் எந்த அழுத்தத்தையும் எதிர்கொள்ள நாம் தயார்

தேவையற்ற செலவினங்களை தவிர்த்து சிக்கனத்துடனும், பொறுப்புடனும் அரச அதிகாரிகள் செயற்பட வேண்டும்

அரசாங்கத்திற்கு கிடைக்கும் வருமானத்தில் இரண்டு மடங்கான நிதி, நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கே செலவிடப்படுகிறது

விரயங்கள் மற்றும் ஊழல் என்பன தவிர்க்கப்பட்டு பொது மக்களின் தேவைப்பாடுகளை கவனத்தில் கொண்டு, செயற்படுமாறு அரச அதிகாரிகளுக்கு ஜனாதிபதி இதன்போது பணிப்புரை விடுத்துள்ளார்.

# புதுவருட பரிசு வரிச்சுமை; கண்டிக்கிறது ஜே.வி.பி.

நாட்டில் பொருளாதாரச் சிக்கல் இல்லை எனக்கூறும் அரசாங்கம் நாட்டு மக்களுக்கு புதுவருட பரிசாக அதிக வரிச்சுமையை வழங்கியுள்ளதென ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜே.வி.பி.யின் அரசியல் சபை விடுத்துள்ள அறிக்கையில்,

உடன் அமுலுக்கு வரும் வகையில் பொருட்கள் சிலவற்றின் வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. எரிபொருள், பஸ், மின் கடடண உயர்வால் துயரில் இருக்கும் மக்களுக்கு மீண்டும் வரிச்சுமை கொடுப்பது வீழ்ந்து கிடக்கும் மனிதனை மாட்டை விட்டு முட்டுதல் போன்ற செயலாகும்.

மது பாவனையில் இருந்து மக்களைப் பாதுகாக்கவே வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாகக் கூறி மக்களை ஏமாற்றி, அரசாங்கம் கோடிக்கணக்கில் இலாபம் பெற முயற்சித்துள்ளது.

வாகன வரியை உயர்த்தி இந்தியாவிற்கு பாடம் புகட்டியுள்ளோம் எனக்கூறும் அரசாங்கம், கோதுமை மாவின் விலையை உயர்த்தி ஐரோப்பாவிற்கு பாடம் புகட்டியுள்ளோம் என்று கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என அவ்வறிக்கையில் கூறப் பட்டுள்ளது.

## சிறுவர் இல்லம் விசாரணை

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கருணை இல்லத்தில் இருந்த 12 வயது சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கோட்டக் கல்விப் பணிப்பாளர் பிணையில் விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இல்லத்தின் நிர்வாகத்தினரை விசாரணை மேற்கொள்ளவுள்ளதாக வட மாகாண சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு திணைக்கள ஆணையாளர் ரி.விஸ்வரூபன் தெரிவித்துள்ளார். (எஸ்)

# வீடமைப்பு அலுவலகங்களுக்கு வாகனங்கள் கையளிப்பு

(கொழும்பு)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால், ஜனசெவன 10 இலட்சம் வீடுகளை நாடு பூராகவும் அமுல்ப்படுத்தும் வேலைத்திட்டங்களின் கீழ், 10 மாவட்டங்களில் உள்ள வீடமைப்பு அலுவலகங்களுக்கு, டபிள் கெப் வாகனங்கள் வழங்கப்பட்டன.

இவ்வாகனங்களை கையளிக்கும் வைபவத்தில், அமைச்சர் விமல் வீரவன்ச, பிரதம அதிதியாகக் கலந்துகொணடார். தலா 61 இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த இவ்வாகனங்களுக்கு, திறைசேரி 610 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. பத்தரமுல்லையில் உள்ள கட்டுமாண பயிற்சி அலுவலகத்தில் வைத்து 10 மாவட்ட முகாமையாளர்களிடம் இவ்வாகனங்கள் கையளிக்கப் பட்டன.

யாழ். மாவட்ட முகாமையாளர் ஜெயசந்திரன் உட்பட, முல்லைத்தீவு, அம்பாறை, அநுராதபுரம், மொனராகலை, கொழும்பு, கம்பஹா, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களின் முகாமையாளர்களுக்கு இவ்வாகனங்கள் வழங்கப்பட்டன.

இதன்மூலம் சகல மாவட்டங்களிலும், ஜனசெவன வீடமைப்புத் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு, மாவட்ட முகாமையாளர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென, அமைச்சர் தெரிவித்தார்.

இரண்டாம் கட்டத்தில் வடக்கு கிழக்கில் உள்ள ஏனைய மாவட்டங்களின் வீடமைப்பு அபிவிருத்தி அலுவலகங்களுக்கு வாகனங்கள் பெற்றுக் கொடுக்கப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## நியமனக் கடிதங்கள் வழங்கல்

(மன்னார்)

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப் பட்ட மஸ்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை மாலை மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஜெய்க்கா மண்டபத்தில் இடம்பெற்றதாக மன்னார் மஸ்தியஸ்தர் சபையின் தலைவர் ஆர்.பிரின்ஸ் டயஸ் தெரிவித்தார்.

மன்னார் பிரதேசச் செயலாளர் திருமதி ஸ்ரான்லி டிமேல் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மன்னார் நீதவான் திருமதி கே.ஜீவராணி, சிறப்பு விருந்தினர்களாக மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லக்சிறி விஜயசிங்க, மஸ்தியஸ்தர் சபை இணைப்பாளர் சனாதன சர்மா, மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி எஸ்.மோகநாதன் ஆகியோர் கலந்து கொண்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் இறைவரி செயலணி அமைப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க விமானநிலையத்தின் ஊடாக இடம்பெறும் சட்டவிரோத இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு சுங்கத் திணைக்களத்தின் இறைவரி செயலணி (Revenue Task Force) குழு முழுநேர சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தியாவோ அல்லது வேறு நாடுகளுக்குச் சென்று திரும்புவோர் விமானம் மூலம் குறிப்பிட்ட நிறையுடைய பொருட்களை நாட்டுக்கு எடுத்துவர முடியும். இதனை சாதகமாகப் பயன்படுத்தும் சிலர் வியாபார நோக்குடன் வரிகள் செலுத்தாமல் அதிகளவு பொருட்களை எடுத்து வருவதால் இலங்கைக்குக் கிடைக்கும் வரிவருமானம் இல்லாமல் போகிறது.

சுற்றுலா நோக்குடன் வெளிநாடுகளுக்குச் சென்று திரும்புபவர்கள் குறிப்பிட்டளவு நிறையுடைய பொருட்களை நாட்டுக்குள் எடுத்துவர முடியும். அதே நேரம், வியாபார நோக்கத்தோடு செல்பவர்கள் விமான நிலையத்தின் ஊடாக வரும்போது தமது பொதிகளை சுற்றுலா நோக்கத்துடன் சென்று திரும்புபவர்களிடம் கொடுத்து, விமான நிலையத்துக்கு வெளியே அவற்றை மீண்டும் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளமை கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

இவற்றைத் தடுக்கும் நோக்கில் பொலிஸாரும், விமான நிலையப் பாதுகாப்புப் பிரிவினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக விமானநிலைய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# மருந்து கொள்வனவில் புதிய திட்டம் அறிமுகம்

(கொழும்பு)

அரச வைத்தியசாலைகளுக்கான மருந்து மற்றும் ஏனைய இரசாயனத் திரவியங்களை கொளவனவு செய்யும் முறைமையில், மாற்றங்களை மேற்கொள்வதற்கு, திட்டமிட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில,

இப்புதிய திட்டம் தொடர்பாக ஆராய்வதற்காக, அமைச்சரவை உபகுழுவொன்றும் நியமிக்கப் பட்டுள்ளது. இவ் உப குழுவில் சிரேஷட அமைச்சர்களான பேராசிரியர் திஸ்ஸ விதாரண, கலாநிதி சரத் அமுனுகம மற்றும் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இக்குழுவின் பரிந்துரைகள், அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த பரிந்துரைகளை அமுல்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, ஜனாதிபதி அதிகாரிகளுக்கு, அண்மையில் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அத்துடன் சத்திரசிகிச்சை உபகரணங்கள் மற்றும் இரசாயன திரவியங்களை, உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் கொள்வனவு செய்வது தொடர்பாக, அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது. இதற்கு திறைசேரியின் அனுமதியும், கிடைத்துள்ளது.

அத்துடன் அரச வைத்தியசாலைகளுக்கு வருடாந்தம் 24 ஆயிரம் மருந்துகள், சத்திர சிகிச்சை உபகரணங்கள் மற்றும் இரசாயண உபகரணங்களை சுகாதார அமைச்சு கொள்வனவு செய்கிறது. இதற்காக, சுகாதார அமைச்சு வருடாந்தம் 2 ஆயிரம் கோடி ரூபாவை செலவிடுவதுடன் வருடாந்தம் 450 கேள்விமனுக்கள் கோரப்படுகின்றது.

இதுபோன்ற நடைமுறைச் சிக்கல்களை தவிர்ப்பதற்காக, மருந்துக் கொள்வனவு முறைமைகளில், மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு, சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# பொறுப்புக் கூறல்: பரஸ்பரம் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப நல்ல வாய்ப்பு

- கிருஷ்ணமூர்த்தி அரவிந்தன்

> சிங்களத்தரப்பு பொறுப்புக் கூறலை நிர்ப்பந்தத்தின் விளைவு என்றும் வெளித் தரப்பின் தலையீடும் நெருக்கடியும் என்று உணர்நதுள்ளது. தமிழ்த்தரப்போ இந்தப் பொறுப்புக் கூறல் என்பது முற்று முழுதாக பிறருக்கானது, எதிர்த்தரப்புக்கு, சிங்களத் தரப்புக் கானது என்றே கருது கிறது. கடந்த காலத்தின் அத்தனை நிகழ்ச்சி களுக்கும் நிலைமைகளுக்கும் நிகழ் காலத்தின் இறுக்கங்களுக்கும் சிதைவுக்கும் பொறுப்பு மறு தரப்பே, எதிர்த்தரப்பே, சிங்களத் தரப்பே என்று கருதுகிறது.

**இலங்கை** அரசியலில் 'பொறுப்புக் கூறல்' என்ற பதம் இன்று அதிகம் பயன்படுத்தப்படு கிறது. இது மிக ஆழமான அர்த்த முடைய ஒரு பதம். இந்தப் பதத் தின் உட்பொருளை அதன் பரிமாணங் களோடும் ஆழத்தோடும் புரிந்து கொண்டால், அந்தப் புரிதலின் வழியாக நடைமுறைகளை உருவாக் கினால், இலங்கையின் நீடித்த துக்கங்களையும் தீராப் பிரச்சினை களையும் கடந்து விட முடியும்.

வரலாறு இத்தகைய சில தருணங்களை - புதிய வழிகளை எதிர்பாராத விதமாகத் தருவதுண்டு. அத்தகைய ஒரு தருணம் இப்போது, இந்தப் பதத்தின் வழியாக இலங் கைக்குக் கிடைத்துள்ளது. இது தனியே ஒரு சொல் அல்ல. இது ஒரு வழி: ஒரு நிவாரணி. முரண்பாடு களைத் தணித்துச் சமனிலைப்படுத் தும் ஆற்றலை வழங்கும் ஒரு திறவு-கோல்.

இந்தப் பதத்தை அதன் அர்த்தத் தில் விளங்கிக் கொள்ள வேண்டு மானால், வரலாற்றுக்குப் பொறுப் புக் கூறல், காலத்துக்குப் பொறுப்புக் கூறல், காலங்கடத்தலுக்குப் பொறுப்புக் கூறல், நம்பிக்கை களுக்குப் பொறுப்புக்கூறல், நம்பிக்கைத் துரோ கங்களுக்குப் பொறுப்புக் கூறல், நடந்த அனர்த்தங் களுக்கு, நீதி மறுப் புக்கு, கொலை களுக்கு, பழிக்குப் பாதகத்துக்கு, பாதிக் கப்பட்டோருக்கு, உலகத்துக்கு என எல்லாவற்றுக்கும் எல்லாத் தரப்புக்கும் பொறுப்புக் கூறல் என்று இது பல நிலைகளில் விரிந்து செல்வதை உணர முடியும்.



பொறுப்புக்கூறல் என்பது பொறுப்பை ஏற்றல், நடந்த வற்றுக்குரிய பொறுப்பை ஏற்றுக் கொள்ளுதல் என்ற ஒரு அடிப் படை அம்சத்தை ஏற்படுத்துகிறது. இது குற்றங்களையும் தவறுகளை யும் விளைவுகளுக்கான பொறுப்பு களையும் தார்மீக அடிப்படையில் ஏற்றுக்கொள்வது என்று அமையும்.

தவறுகளையும் குற்றங்களையும் பொறுப்பேற்றல், காயங்களுக்கும் வலிகளுக்கும் வேதனைக்கும் கண் ணீருக்கும் பொறுப்பேற்றல் என்பது சாதாரணமானதல்ல. இதன் மூலமாக பிறரிடையே நம்பிக்கையைக் கட்டி யெழுப்ப முடிகிறது.

இத்தகைய செயல்களும் நிலையும் மாண்புடையவை. மாண்புக்குரிய செயல்களிலிருந்தே புதிய தொடக் கங்களை ஏற்படுத்த முடியும். மாண் புடைய செயல்களின் மூலமாகவே உலகத்தின் மாற்றங்களும் திருப்பங் களும் நிகழ்ந்திருக்கின்றன. வரலாற்று இயக்கமே மாண்புறு நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டதுதான்.

கடந்த காலத்தின் இருண்ட பக்கங்களிலிருந்து ஒளியுடைய புதிய திசைகளை நோக்கிப் பயணிப்பதற்கு, சுமையும் தடைகளும் நிரம்பிய மேடு பள்ளங்களிலிருந்து சமதளத்தில் சுமை யற்றுப் பயணிப்பதற்கு இத்தகைய மாண்புடைய நிலை அவசியம்.

ஆகவே பொறுப்புக்கூறல் என்பது வெறுமனே வாய்பாட்டுக்குரிய பதம் அல்ல. ஆனால், இலங்கையின் அரசி யலில் பொறுப்புக்கூறல் என்பது கடினமானதாகவும் பலவந்தத்திற்குரிய ஒன்றாகவுமே உணரப்பட்டுள்ளது. குறிப்பாக சிங்களத்தரப்பு பொறுப்புக்கூறலை நிர்ப்பந்தத்தின் விளைவு என்றும் வெளித்தரப்பின் தலையீடும் நெருக்கடியும் என்று உணர்ந்துள்ளது.

இதேவேளை தமிழ்த்தரப்போ இந்தப் பொறுப்புக் கூறல் என்பது முற்று முழுதாக பிறருக்கானது, எதிர்த்தரப்புக்கு, சிங்களத்தரப்புக் கானது என்றே கருதுகிறது. கடந்த காலத்தின் அத்தனை நிகழ்ச்சிகளுக்கும் நிலைமைகளுக்கும் நிகழ்காலத்தின் இறுக்கங்களுக்கும் சிதைவுக்கும் பொறுப்பு மறுதரப்பே, எதிர்த்தரப்பே, சிங்களத்தரப்பே என்று கருதுகிறது.

மேலும் தான் உருவாக்கி வைத் திருக்கும் பிம்பங்களையும் புனிதங் களையும் இந்தப் பொறுப்புக்கூறல் சிதறடித்துவிடும் என்றும் அது அச்சப்படுகிறது.

அதனால் இந்தப் பொறுப்புக் கூறலைச் சிங்களத் தரப்பே செய்ய வேண்டும் என்று அது கருதுகிறது. அல்லது இந்த நிலைப்பாட்டில் அது பிடிவாதமாக நிற்கிறது.

சிங்களத் தரப்போ பொறுப்புக் கூறல் என்பதை தோல்வியின் ஒப்புக் கொள்ளலாக, குற்றங்களில் அமிழ்வதாக, தூக்குமேடைக் கொப்பானதாக எண்ணுகிறது. மேலும் தன்னுடைய அதிகாரத்தின் பிடி தளர்ந்து விடும் என்றும் அது அச்சமடைகிறது.

இத்தகைய உளவியற் சிக் கலுக்குள்ளும் தவறான புரிதல் களுக்கும் உள்ளாகி யுள்ளது பொறுப் புக்கூறல் என்ற இந்தப் பதம். பலவீனங்களைக் களைவதற்கான - தவறு களையும் குற்றங்களையும் திருத்திக் கொள்வதற்கான ஒரு நல்வாய்ப்பாக அமைந்திருக்கும் இந்தப் பொறுப்புக்கூறல் என்ற நிலை இவ்வாறான தவறான புரிதல்களில் களினாலும் அணுகுமுறையினாலும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

இந்த இடத்தில் சற்றுப் பின் னோக்கிச் சென்று நாம் சில உண்மை களைப் பார்க்க வேண்டும்.

இலங்கையில் இன ஒடுக்குமுறை என்பது பகிரங்கமாகவே மேற்கொள் ளப்பட்டு வந்துள்ளது. இந்த இன ஒடுக்குமுறையின் காரணமாக ஒரு பெரிய யுத்தமே நடந்துள்ளது. இந்த இனஒடுக்குமுறையில் தாராள மாகவே வன்முறைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. போதாக்குறைக்குத் தாராளமாகவே யுத்தக்குற்றங்கள் நடந்துள்ளன.

இதைவிட இலங்கையின் அரசிய லமைப்பு, அரசாட்சி முறை மற்றும் பொருளாதார அசமத்துவம், ஜனநாயக நெருக்கடி போன்ற காரணங்களினால் கிளர்ச்சிகளும் அதற்கெதிரான ஒடுக்கு முறையும் நடந்துள்ளது. வடக்குக் கிழக்கில் மட்டுமின்றி பல ஆயிரக் கணக்கான மக்களும் இளைஞர்களும் பத்திரிகையாளர்களும் ஜனநாயக விரும்பிகளும் அரசியற் தலைவர்களும் போராட்டத் தலைவர்களும் தெற்கிலும் கொல்லப்பட்டுள்ளனர்.

இதைப்போன்று இலங்கை அர சாங்கத்தினால் மட்டுமன்றி, சிங்களத் தரப்பினால் மட்டுமன்றி தமிழ்த்தரப்பில் ஏராளம் வன்முறைகளும் உள்மோதல் களும் அவற்றின் விளைவான உட்காயங்களும் சிதைவுகளும் கண்ணீரும் குற்றங்களும் தவறுகளும் தாராளமாகவே உண்டு.

இயக்கங்களின் மோதல், ஜனநாயக மறுப்பு, படுகொலைகள், நீதியற்ற தண்டனைகள், தவறான வழிமுறைகள் என எண்ணற்ற குற்றங்களும் குறை-பாடுகளும் தமிழ்த்தரப்பிலும் உண்டு. முஸ்லிம்களின் மீதான அதிகாரப் பிரயோகத்திலிருந்து சாதி ஒடுக்கு முறை வரை ஏராளம் குற்றங்களுக் கும் தவறுகளுக்கும் பின்னடைவு களுக்கும் தமிழ்ச் சமூகமும் தன்னு டைய பொறுப்புக்கூறலைச் செய்ய வேண்டும்.

குற்றங்களிலிருந்தும் தவறுகளிலி ருந்தும் விடுபட வேண்டுமாயின் முத லில் அவற்றைப் பொறுப்பெடுக்கும் மனப்பாங்கும் பண்பும் உருவாக வேண்டும். அதையே பொறுப்புக்கூறல் வலியுறுத்துகிறது. குற்றங்களிலிருந்தும் தவறுகளிலிருந்தும் விடுபட்டாலேயே - பொதுவெளியொன்றுக்கு வந்தாலே புதியனவற்றைப் பற்றிச் சிந்திக்கலாம். புதிதாக எதையாவது செய்யலாம்.

ஆகவே, அமைதிக்கும் சமாதானத்துக்கும் நல்லிணக்கத் துக்குமான வாசலை பொறுப்புக்கூறல் என்ற சாவியே திறக்கிறது.

ஆனால், இதுவரை அப்படியான நிகழ்வுகள் எதுவும் நடந்திருக்கிறதா?

இலங்கையில் எந்தக் கட்சி தன்னுடைய அரசியற் தவறுகளுக்காக - நடைமுறைப் பிறழ்வுகளுக்காகப் பகிரங்கமாகவே மன்னிப்பைக் கேட் டுள்ளது. வரலாற்றின் முன்னே தன்னுடைய குறைபாடுகளை ஒத்துக் கொண்டிருக்கிறது.

பாரம்பரிய அரசியற்கட்சிகளிடம் இதை எதிர்பார்க்க முடியாது. அவை சீரழிவுக் கலாசாரத்திலேயே தமது அரசியல் அடித்தளத்தை நிர்மாணித் திருப்பதால் அவற்றிடம் இதை எப்படி நீங்கள் எதிர்பார்க்க முடியும் என ஒரு நண்பர் கேட்கிறார்.

நண்பருடைய வாதத்தில் நியாய முண்டு. ஆனால், பொதுத்தள மொன்றிற் செயற்படும் எவரையும் வரலாறு அதற்குரிய அடிப்படையில் விசாரணைக்குட்படுத்தும். அந்த விசாரணைக்கான பதிலைச் சொல் வதிலிருந்து தப்பிவிட முடியாது. வேண்டுமானால், இந்த விசாரணைக் காலத்தை ஒத்தி வைக்கலாம். அல்லது நீடித்துச் செல்லலாம். ஆனால், அதற்கும் ஒரு எல்லையுண்டு.

இதேவேளை புரட்சிகர இயக்கங் கள், இயக்கங்களின் வழியாக வந்த அரசியற்தரப்புகள், அவற்றின் தலைமைகள் எவையும் இது வரையில் தமது தவறுகளைக் குறித்துப் பொறுப்புச் செல்லும் மனநிலைக்கு வந்துள்ளனவா?

அல்லது இலங்கை இனப்பிரச் சினையிலும் அதன் விளைவான போரிலும் இலங்கையின் அரசியலி லும் தலையீடுகளையும் செல்வாக் கினையும் செலுத்திய இந்தியா தொடக்கம் அமெரிக்கா வரையான சிறிதும் பெரிதுமான நாடுகள் தங் களின் செயற்பாடுகளினால் ஏற்பட்ட விளைவுகளுக்குப் பொறுப்புக்கூறத் தயாரா?

மேலும் ஊடகங்கள், மதபீடங்கள், மதத்தலைவர்கள், கலைஞர்கள், படைத்தளபதிகள், அரச அதிகா-ரிகள் எனப் பலரும் தங்களுடைய கைகளைக் கழுவுவதற்குத் தயாரா?

பொறுப்புக்கூறல் என்பது எல் லோருக்குமானதே. அது தனியே ஏதோ ஒரு தரப்புக்கானது மட்டுமல்ல.

யுத்தத்தை நடத்தியோருக்கும் அதை ஆதரித்தோருக்கும் அதற்கு உதவியோருக்கும் அதை விரும்பியோருக்கும் பொறுப்புக் கூறவேண்டிய பொறுப்புண்டு.

யுத்தத்தின்போது சனங்கள் கொல்லப்படுகிறார்கள் என்று தெரிந்து கொண்டே அதற்கான நடவடிக்கையை எடுக்கத்தவறிய சர்வதேச சமூகத்துக்கும் பிராந்திய சக்திகளுக்கும் தொண்டர் அமைப்புகளுக்கும் ஐ.நாவுக்கும் பொறுப்புக்கூறவேண்டியதில் பொறுப்புண்டு.

ஏனெனில் சனங்கள் முதலில் தலைவர்களை நம்புகிறார்கள். தாங்கள் நம்புகின்ற தலைமைகளும் தரப்புகளும் அவர்களைக் கைவிடும் போது அவர்கள் வெளியுலகை நம்புகிறார்கள். பின்னர் சர்வதேச சமூகத்தை - ஐ.நா. வை எதிர்பார்க் கிறார்கள். அவர்களுடைய குரலும் கோரிக்கையும் அப்படித்தான் அமைகின்றன.

இது உலகப் பொது நிலை.

இலங்கையிலும் இதுதான் நடந்தது.

ஆனால்?

எவரும் சனங்களைப் பொறுப் பெடுக்கவேயில்லை. அவர்களுடைய இன்னல்களி லிருந்தும் அவர் களுடைய நெருக்கடிகளிலிருந்தும் யாரும் அவர்களைப் பொறுப் பெடுக்கவேயில்லை.

அப்படிப் பொறுப்பெடுக்காதோரும் சனங்களின் இன்னல்களுக்கும் நெருக்கடிகளுக்கும் பொறுப்பான வர்களும் பொறுப்புக்கூறியே ஆகவேண்டும்.


பொறுப்புக்கூறல் என்பதிலி ருந்தே இனி நாம் எதையும் தொடங்கவும் தொடரவும் முடியும். பொறுப்புக்கூறாத எவரும் வரலாற் றுப் பாத்திரத்திற்குரியவர்களல்ல என்பதை வரலாறு திரும்பத்திரும்ப நிரூபித்தே வருகிறது.

# 12ஆவது வீரர்களின் போர் வெல்லுமா ஸ்கந்தவரோதயா?


(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரி அணிக்கும், ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிக்குமிடையிலான 12ஆவது வீரர்களின் போர் என அழைக்கப்படும் இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் வரும் வெள்ளி மற்றும் சனிக் கிழமைகளில் மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.


இது வரை நடைபெற்ற 11 போட்டிகளில் அதிக (மூன்று) வெற்றிகளைப் பதிவாக்கிய அணி என்ற சிறப்பைப் பெற்றிருக்கும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதை தக்கவைத்துக் கொள்ளப் போராடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் கடந்த ஆண்டு நடைபெற்ற போட்டியில் அடைந்த தோல்விக்கு பழி தீர்க்கும் வகையில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஆட்டம் அமையும் என அதன் ஆதரவாளர்களால் நம்பப் படுகின்றது. (44, 93)




சி.சஞ்சயன்
(அணித் தலைவர்)




த. சிந்துஜன்
(உப தலைவர்)




ல. குமுதன்
பந்து வீச்சாளர்




கே. றொபேட் றிஷரன்
சகலதுறை வீரர்



க. துவிசன்
துடுப்பாட்ட வீரர்



சி. கோபிகாந்
பந்து வீச்சாளர்




த. நிறோஜன்
விக்கெட் காப்பாளர்




க. செந்தூரன்
துடுப்பாட்ட வீரர்



க. நிலக்சன்
துடுப்பாட்ட வீரர்



ஜெ. ஜெனக்சன்
சகலதுறை வீரர்




க. துவாரகன்
சகலதுறை வீரர்



ப. சுஜிதரன்
சகலதுறை வீரர்



கெ. பிரதீப்சங்கர்
பந்து வீச்சாளர்



கே. சயந்தன்
துணை விக்கெட் காப்பாளர்



க. பிரசாத்
துடுப்பாட்ட வீரர்



கு. கதியோன்
சகலதுறை வீரர்

## தேசிய ரீதியில் பதக்கம் வென்ற வீரர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு தேசிய மட்ட பாடசாலைப் போட்டிகளில் புதக்கம் வென்ற வீர, வீராங்கனைகள் தெல்லிப்பளை பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டியின் போது கௌரவிக்கப்பட்டனர்.

தெல்லிப்பளை பிரதேசத்திற்குட்ட பாடசாலை வீர, வீராங்கனைகள் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொண்டு பலர் பதக்கங்களைப் பெற்றிருந்தனர்.

இவர்கள் தெல்லிப்பளை பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

கௌரவிக்கப்பட்டோர் விபரம் வருமாறு: 21 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் முதலாமிடம் பெற்ற சண்முகராசா தனுசா, 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் முதலாமிடம் பெற்ற அருந்தவம் பவித்திரா, 19 வயதுப் பிரிவு ஆண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் முதலாமிடம் பெற்ற பா. லவணன், 21 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் இரண்டாமிடம் பெற்ற இ. காவேரி, 21 வயதுப் பிரிவு பெண்களுக்கான உயரம் பாய்தலில் இரண்டாமிடம் பெற்ற சண்முகராசா தனுசா, 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் இரண்டாமிடத்தைப் பெற்ற சி. குவைசியா, 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் மூன்றாமிடம் பெற்ற இ. மேரிபலஸ்தீனா, அதே பிரிவில் மூன்றாமிடம் பிடித்த கு. டிலக்சனா, 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் இரண்டாமிடத்தைப்பிடித்த அ. அன்ரனி பிரசாத் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். (93)

## ஆவரங்கால் இளைஞர் வெற்றி

(புத்தூர்)

கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கழகங்களுக்கிடையில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் ஆவரங்கால் இளைஞர் அணி வெற்றி பெற்றது.

பிரதேச ரீதியாக நடைபெற்ற இப்போட்டியின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு ஆவரங்கால் மத்தி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

புத்தூர் மேற்கு கிராம அலுவர் பிரிவைச் சேர்ந்த விளையாட்டுக்கழகமும், ஆவரங்கால் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஆவரங்கால் மத்தி, ஆவரங்கால் இந்து இளைஞர் ஆகிய விளையாட்டுக்கழகம் இணைந்து இப்போட்டியில் கலந்து கொண்டன.

18 வயதிற்கும் 28 வயதிற்கும் உட்பட்ட இளைஞர்கள் இப்போட்டித் தொடரில் பங்குபற்றியிருந்தனர்.

ஐந்து செட்களைக் கொண்ட இப்போட்டியில் ஆவரங்கால் இளைஞர் அணி 3-2 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றது. (02)

## மாவட்ட மட்ட கராத்தே போட்டி வெற்றி பெற்றோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டு மற்றும் யாழ். மாவட்ட கராத்தே சங்கம் நடாத்திய மாவட்ட மட்ட கராத்தேப் போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் சண்டை, காட்டாப் போட்டிகள் என்பன நடத்தப்பட்டது.

இதில் நிறை அடிப்படையில் நடைபெற்ற சண்டைப் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு:

50 நிறைப் பிரிவுக்குட்பட்டோர் பிரிவில் முதலாமிடத்தை ஆர். ஜாட்சன், இரண்டாமிடத்தை யூ. தயாநிதி, மூன்றாமிடத்தை என். செந்தூரன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

50 - 55 நிறைப் பிரிவுக்குட்பட்டோர் பிரிவில் முதலாமிடத்தை ஜெ. மேகல், இரண்டாமிடத்தை யூ. உதயசங்கர், மூன்றாமிடத்தை ரி. மகேந்திரன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

55 - 60 நிறைப் பிரிவில் முதலாமிடத்தை எஸ். சிவராசா, இரண்டாமிடத்தை எஸ். கோகிலகிருஷ்ணன், மூன்றாமிடத்தை எஸ். சிவசங்கர் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

60 - 67 நிறைப் பிரிவில் முதலாமிடத்தை எம். வசந்தகேசன், இரண்டாமிடத்தை எஸ். கஜேந்திரன், மூன்றாமிடத்தை ஆர். ஆனந்தகுமார் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

67 - 74 நிறைப் பிரிவில் முதலாமிடத்தை பி. விஜயகணேசன், இரண்டாமிடத்தை பி. விஜஜேந்திரன், மூன்றாமிடத்தை ஆர். சானுஜன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

74 - 84 நிறைப் பிரிவில் முதலாமிடத்தை ஏ. லெட்மன் றீகன், இரண்டாமிடத்தை ரி. சாந்தராஜ், மூன்றாமிடத்தை ஜெ. ஆதித்தன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். (எஸ்.பி.)


## யாழ். வலய மெய்வல்லுநர்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 10,11,12ஆம் திகதிகளில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இப்போட்டிகள் அனைத்தும் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறும் என்றும் போட்டியிடும் பாடசாலை வீர, வீராங்கனைகளை காலை 8.30 மணிக்கு முன்னர் வருகை தந்து போட்டி சிறப்புற நடைபெற ஒத்துழைப்புத் தருமாறும் அவர்கள் கேட்டுள்ளனர். (93)

# இப்படியும் வாழ்த்து




(மும்பை)

சர்வதேச போட்டிகளில் 100 சதங்களை விளாசி சாதனை படைத்த சச்சின் டெண்டுல்கர் மீது 100 தங்க நாணயங்களை பொழிந்து வாழ்த்து தெரிவிக்க மும்பை கிரிக்கெட் சங்கம் முடிவுசெய்துள்ளது. நூறு தங்க நாணயங்களால் கௌரவிக்கும் இந்த முடிவு மும்பைக் கிரிக்கெட் சபையின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நூறு தங்க நாணயங்களும் 23 முதல் 25 இலட்சங்கள் இந்திய ரூபா பெறுமதியானவை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கௌரவப்படுத்தல் நிகழ்வு தொடர்பாக மும்பைக் கிரிக்கெட் சபையின் நிர்வாகக் குழுத் தலைவரும் மத்திய அமைச்சருமான விலாஸ் ராவோ தேஷமுக் - சச்சினுடன் கலந்துரையாடியுள்ளதாகவும், கௌரவப் படுத்தல் நிகழ்வுக்காக ஒரு திகதியை ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சச்சின் டெண்டுல்கர் இன்னமும் திகதியை ஒதுக்கித்தராததன் காரணமாக திகதி இன்னமும் நிர்ணயிக்கப்படவில்லை என மும்பை கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவித்தன.

சச்சின் டெண்டுல்கர் தனது நூறாவது சர்வதேசப் போட்டிச்சதத்தினைஅண்மையில் இடம்பெற்ற ஆசியக் கிண்ணத் தொடரில் பங்களாதேஷ் அணிக்கெதிரான போட்டியில் பெற்றுக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச போட்டிகளை நடத்த தொடர்ந்தும் முயற்சிக்கப்படும்

(கொழும்பு)

2018 ஆம் ஆண்டின் பொதுநலவாய விளையாட்டு விழாவை நடத்துவதற்கான உரிமையைப் பெறுவதில்இலங்கை தோல்வியுற்ற போதிலும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு இலங்கைதொடர்ந்தும் முயற்சிக்கும் என விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கூறியுள்ளார்.

இலங்கையின் பிரசாரம் வெற்றிகரமானது என்றபோதிலும் பொதுநலவாய அமைப்பிலுள்ள அரசியல் காரணமாக போதிய வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியை நடத்திய பின்னர், இலங்கை கிரிக்கெட் நிறுவனம் நிதி நெருக்கடியை எதிர்நோக்கிய நிலையில், அம்பாந்தோட்டைக்கு பொது நலவாய போட்டிகளுக்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தால் நாடு பெரும் நிதி நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கும் என்ற கருத்தை அமைச்சர் நிராகரித்தார்.

உலகக்கிண்ணப் போட்டிகளின் பின் இலங்கைக் கிரிக்கெட் வங்குரோத்தாகவில்லை. அது கபடதாரிகள் பரப்பும் கருத்து மட்டுமே.

பொதுநலவாய போட்டிகளுக்கான உரிமை தொடர்பாக சென் கிட்ஸ் தீவில் கடந்த வருடம் நடந்த வாக்கெடுப்பின்போது, இலங்கையின் சார்பில் 160 பிரதிநிதிகளும் அவுஸ்ரேலியாவின் சார்பில் 20 பிரதிநிதிகளும் கலந்துகொண்ட போதிலும் இலங்கையை விட அவுஸ்ரேலியா 3 மடங்கு அதிக தொகையை பிரசாரங்களுக்காக செலவிட்டதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



## கால்பந்து வீரர் கைது

இத்தாலியைச் சேர்ந்த கால்பந்து வீரர் ஆண்டிரியா மாசி யலோ. 26 வயதான அவர் பேரி கிளப்புக்காக விளையாடும் போது சூதாட்டத்தில் (பிக்சிங்) ஈடுபட்டது தெரியவந்தது. இத்தாலி கால்பந்து கிளப்புகளுக்கான போட்டியில் எலசி அணிக்கு எதிரான ஆட்டத்தில் அவர் பிக்சிங்கில் ஈடுபட்டார். இதை அவரே தற்போது ஒப்புக்கொண்டு உள்ளார். லெசி அணி வெல்வதற்காக பணம் வாங்கிக் கொண்டு சுய கோல் (சேம்சைடு) அடித்ததாகஅவர் வாக்குமூலம் அளித்துள்ளார். சூதாட்டத்தில் ஈடுபட்டதை ஒப்புக்கொண்ட மாசியலோ கைது செய்யப்பட்டுள்ளார்.

# யோக்கர் பந்தின் மூலம் மக்கலத்தை கட்டுப்படுத்தலாம்

நியூசிலாந்து அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் பிரெண்டென் மக்கலத்தைக் கட்டுப்படுத்த அவருக்கு யோக்கர் பந்துகளை வீசுவது சிறந்தது என நியூசிலாந்து அணியின் பந்து வீச்சாளரான டக் பிரேஸ்வெல் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். போட்டிகளில் பங்குபற்ற இந்தியாவுக்கு வந்துள்ள டக் பிரேஸ்வெல் அங்கு ஊடகவியலாளர்களுடனான கருத்துப் பரிமாற்றத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட்டின் எந்தவொரு வகையான போட்டியிலும் ஒவ்வொரு பந்துவீச்சாளரும் தனக்கான ஒருவகையான பந்துவீச்சைக் கொண்டு துடுப்பாட்ட வீரர்களை அச்சுறுத்த வேண்டுமெனத் தெரிவித்த டக் பிரேஸ்வெல், பிரெண்டன் மக்கலம் ஓர் அதிரடித் துடுப்பாட்ட வீரர் என்பதனால் அவருக்கு யோக்கர் பந்துகளை வீசினால் அவரது ஓட்டம் பெறுதலை நிறுத்த முடியும் எனத் தெரிவித்தார்.

ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடுவது குறித்துக் கருத்துத் தெரிவித்த அவர், ஐ.பி.எல். போட்டிகளுக்காகத் தெரிவு செய்யப்படுவேன் எனத் தான் எதிர்பார்த்திருக்கவில்லை எனவும், டில்லி டெயாடெவில்ஸ் அணியால் 50,000 ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு வாங்கப்பட்டமை இன்ப அதிர்ச்சியாக அமைந்ததாகத் தெரிவித்தார்.

ஏற்கனவே ஐ.பி.எல். போட்டிகளில் பங்குபற்றிய மூத்த வீரர்களான டானியல் விட்டோரி, பிரெண்டன் மக்கலம் ஆகியோருடன் இதுகுறித்துக் கலந்துரையாடியதாகவும் அவர் தெரிவித்தார்.



## சச்சினுக்கு உதவி

(சென்னை)

சச்சின் டெண்டுல்கர்எந்தப் பிரச்சினையும் இல்லாமல் நிம்மதியாக விளையாட வேண்டும் என்பதற்காகத் தான் நான் அணித் தலைவர் பொறுப்பை ஏற்றுள்ளேன் என ஹர்பஜன் சிங் தெரிவித்துள்ளார்.

சச்சின் டெண்டுல்கர் அணிக்காக எத்தனையோ செய்திருக்கிறார். இது அவருக்காக நான் செய்யும் உதவி.

அவரை நிம்மதியாக விளையாட விட வேண்டும். மும்பைஇந்தியன்ஸ் அணிக்காக சிறப்பாக அவர் விளையாடுவார் என்று நம்புகிறேன் என ஹர்பஜன் செய்தியாளர்களிடம் கூறினார்.

ஐ.பி.எல். 5 போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு சச்சின் டெண்டுல்கருக்குப் பதிலாக ஹர்பஜன் சிங் அணித் தலைவர் பொறுப்பை ஏற்றுள்ளார். இந்த முடிவுக்கு வரவேற்பும் கிடைத்துள்ளது.

## நெருக்கடி எமக்கே

அதிக எதிர்பார்ப்பு எமக்கு இருப்பதால் நெருக்கடியிருப்பதாகவும், அந்த எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும் வகையில் எமது ஆட்டம் இருக்கும் என்றுசென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் சுழற் பந்து வீச்சாளர் அஸ்வின் தெரிவித்தார். அதிகளவான சர்வதேசப் போட்டியில் இந்தியவீரர்கள்பங்கு கொண்டபோதும் இத்தொடரில் ரசிகர்களின் ஆவலை அவர்கள் பூர்த்தி செய்வார்கள் எனவும் தெரிவித்தார்.



## மஹேல சதம்; மீண்டது இலங்கை

(கொழும்பு)

மஹேல ஜெயவர்த்தனவின் சதத்தின் மூலம் நெருக்கடியிலிருந்து இலங்கை அணி மீண்டுள்ளது.

இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டுபோட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும், இறுதியுமான போட்டி நேற்று கொழும்பில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இலங்கை அணி ஆரம்பத்தில் மிகப் பெரும் சரிவை எதிர்கொண்டது. முதலிரு விக்கெட்டுக்களையும் 21 ஓட்டங்களுக்குப் பறிகொடுத்த இலங்கை அணி மூன்றாவது விக்கெட்டையும் 30 ஓட்டங்கள் பெறுவதற்குள் இழந்தது தடுமாறியது. இந்த நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த சமரவீர, மஹேல ஜெயவர்த்தன ஜோடி அணியின் நிலையை உணர்ந்து பொறுப்புடன் ஆடியது. நான்காவது விக்கெட்டுக்காக இந்த ஜோடி 124 ஓட்டங்களைப் பெற்றது. இறுதியில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை இலங்கை அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 238 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன 216 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், 11 பவுண்டரிகள் அடங்கலாக 105 ஓட்டங்களைப் பெற்றார். இது மஹேலவின் 31ஆவது டெஸ்ட் சதமாகும். மற்றும் சமரவீர 54 ஓட்டங்களைப் பெற்றனர். ஆட்டமிழக்காது மத்தியூஸ் 41 ஓட்டங்களுடன் களத்திலுள்ளார். பந்து வீச்சில் அண்டர்சன் மூன்று, ஸ்வான், பின், பிரஸ்னன் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

ஏற்கனவே காலியில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 75 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



# வென்றார் வெண்கலம்

மொங்கோலியாவில் நடைபெற்றஆறாவது ஆசிய மகளிர் குத்துச் சண்டை போட்டியில் ஷிரோமாலீ வீரரத்ன 69 கிலோகிராம் பாரத்தில் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

சீனா, இந்தியா, உஸ்பெகிஸ்தான், துர்க்மெனிஸ்தான், இலங்கை உட்பட 17 நாடுகளில் இருந்து 84 விளையாட்டு வீரர்கள் பங்கு பற்றினர். உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் நடைபெற்ற போட்டிகளிலும் இவர் பல வெற்றிகளைப் பெற்றவர்.

அண்மையில் பிலிப்பைன்ஸில் நடைபெற்ற குத்துச் சண்டைப் போட்டியிலும் இவர் வெற்றி பெற்றார்.

தான் எதிர்பார்த்த இலங்கை அடையவில்லை என்றும் தொடர்ந்து வரும் போட்டிகளில் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்துவேன் என்றும் போட்டியின் பின் வீரரத்ன தெரிவித்தார்.

- சேரன் -



# தமிழர்களும், எருமைகளும், ஐ.நா. அவையும்

மழை பெய்கிறது
ஊர் முழுவதும் ஈரமாகிவிட்டது
தமிழர்கள் எருமைகளைப் போல
எப்போதும் ஈரத்திலேயே நிற்கிறார்கள்
ஈரத்திலேயே நடக்கிறார்கள்
ஈரத்திலேயே படுக்கிறார்கள்
ஈரத்திலேயே சமையல் ஈரத்திலேயே உணவு
உலர்ந்த தமிழன் மருந்துக்குக் கூட
அகப்பட மாட்டான்.

மார்ச் மாதம் இருபத்திரண்டாம் நாள் இலங்கை பற்றிய தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் அவையில் நிறைவேற்றப்பட்ட பிற்பாடு தமிழர்களில் பலருடைய - குறிப்பாகப் புலம் பெயர்ந்த தமிழர்களில் பலருடைய - செயற்பாடுகளைப் பார்க்கிற போது பாரதியின் மேற்கூறிய வரிகள நினைவு வருவதைத் தவிர்க்க முடியவில்லை (புலிகளாக இருந்த தமிழர்களை எருமைகளாக மாற்ற முற்படுகிறேன் எனத் தயவு செய்து என் மீது கோபம் கொள்ள வேண்டாம்!)

ஐ.நா அவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிற்பாடு ஒரு கூட்டம் தமிழர்கள் வாஷிங்டனில் வெள்ளை மாளிகைக்கு முன்னால் திரண்டு அமெரிக்காவுக்கும் ஹிலாரி கிளிண்டனுக்கும் நன்றி தெரிவித்தார்கள். இன்னொரு கூட்டம் தமிழர்கள் கனடாவிலுள்ள அமெரிக்கக் கொன்சலேற்றுக்கு முன்னால்கூடி நன்றிக் கண்ணீர் வடித்தார்கள். இன்னொரு கூட்டம் தமிழர்களே இந்தத் தீர்மானம் வெற்றிகரமாக நிறைவேறுவதற்குப் பின்நின்று உழைத்த கனடிய அரசுக்கு நன்றி கூறுவதற்காகக் கனடியத் தலைநகரான ஒட்டாவாவில் அமைந்திருக்கும் நாடாளுமன்றத்துக்கு முன்னால் அடுத்த வாரம் கூடப் போகிறார்கள். 1987 இல் இந்திய அரசுக்கு நன்றி தெரிவித்ததும் அதன் பின்னர் நடந்தவையும் நாம் மறந்து விடலாம்!

சிட்டுக் குருவிகளுக்குக் கூட அற்புதமான மூளை இருக்கிறது.

கனடாவைப் பொறுத்தவரை இத்தகைய செயற்பாடுகளுக்கு அமைப்பு சார்ந்து பின்னணியில் இருக்கின்றவர்கள் முன்னாள் விடுதலைப் புலிகளும், அவர்களது சார்பில் முன்பு இயங்கிய நிறுவனங்களும் என்பது ஒரு கேலிக்குரிய முரண்நகையாகும். கனடிய வரலாற்றிலேயே மிகவும் மோசமான பிற்போக்குவாத பழமை பேணும், மக்களுக்கு எதிரான ஒரு அரசாங்கத்தின் வெளிப்படையான ஆதரவாளர்களாக இருப்பதிலும் இந்த நிறுவனங்களுக்கு நாணம் கிடையாது. இது நாணயம் சம்பந்தப்பட்ட விடயம்.

ஐ.நா மனித உரிமைகள் அவையில தீர்மானம் வெற்றி பெற்ற மறுநாளே அமெரிக்க அரசு முக்கியமான ஒரு பரிசை இலங்கைக்கு வழங்கியது. கடலோரப் பாதுகாப்பு, கடல் வலயக் கண்காணிப்பு சார்ந்த தொழில்நுட்பம், கண்காணிப்பு தொடர்பான உதாரிகள் இலங்கைக்கு வழங்கப்படுவதற்கு கடந்த முப்பது ஆண்டுகாலமாக இருந்த தடை மார்ச் 23 ஆம் நாள் நீக்கப்பட்டது என்ற செய்தியை வாஷிங்டன் போஸ்ட் நாளிதழ் வெளியிட்டது.


பாதுகாப்பு, படைத்தளவாடங்கள், பயிற்சி போன்ற விடயங்களில் இலங்கை அரசுக்கு முக்கியமான சலுகை இது. கூடவே, ஈரானிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வது தொடர்பாகவும் அமெரிக்கா இலங்கைக்கு ஒரு பெரிய சலுகையை வழங்கியிருக்கிறது. ஈரான் மீதான பொருளாதாரத் தடையும் ஈரானிலிருந்து எண்ணெய் இறக்குமதித் தடையையும் இறுக்கமாக நடைமுறைப் படுத்துவதில் முன் நிற்கும் அமெரிக்கா இலங்கை அரசுக்கு வழங்கியுள்ள சலுகையின் படி எண்ணெய் இறக்குமதியில் 15 வீதத்தைக் குறைத்தால் மட்டுமே போதுமானது. இலங்கை தனது எண்ணெய் இறக்குமதியில் 93வீதத்தை ஈரானில் இருந்தே பெற்றுக் கொள்கிறது. எனவேதான், இலங்கை அரசு அமெரிக்க எதிர்ப்பை இவ்வளவு மூர்க்கத்தனமாகக் காட்டுவது ஒரு "தேசபக்தி" நாடகமாகவே இருக்கமுடியும்.

இத்தகைய பின்னணியில் ஐ.நா. மனித உரிமைகள் அவைத் தீர்மானம் ஏற்படுத்தப் போகும் தாக்கங்களையும் பார்க்கலாம். இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற எத்தகைய கடப்பாடும் இலங்கை அரசுக்குக் கிடையாது (Non-binding). மனித உரிமைகள் அவையில் கியூபாவுக்கும் இஸ்ரேலுக்கும் எதிராக ஏராளமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கிடப்பில் போடப்பட்டுள்ளன என்பதை நாம் நினைவு கொள்ளலாம்.

மனித உரிமைகள் அவையில் நிறைவேற்றப்படுகிற எந்தத் தீர்மானமும் சம்பந்தப்பட்ட நாட்டின் ஒப்புதலோடும். அந்த நாட்டுடன் கலந்தாலோசிக்கப்பட்டுமே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பது ஐ.நா. அவையின் ஒழுங்குமுறை அடிப்படை விதிகளில் ஒன்றாகும். இது நிரந்தரமானது.

இலங்கை பற்றிய ஐ.நா. அவைத் தீர்மானம் விவாதிக்கப்பட்ட போது ஐ.நா. அவைக்கான கியூபாவின் தூதர் அங்கதச் சுவையோடு ஒரு கேள்வியைக் கேட்டார், "போரின் போது இலங்கை பயன்படுத்திய ஆயுதங்களில் நாற்பது வீதமானவற்றை அமெரிக்காவே வழங்கியது. பிறகு ஏன் இந்தத் தீர்மானத்தை நீங்களே முன் வைக்கிறீர்கள்?" மீதி 60 வீதமான ஆயுதங்களை வழங்கியவர்களில் பலரும் அந்த அவையில் இருந்தார்கள்.

எனினும் மகிந்த அரசு இத்தகைய "மென்மை"யான தீர்மானத்துக்கே சஞ்சலம் கொள்வது ஏன்? முதலாவதாக, அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்கு முன்பு நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவது பற்றிய வேலைத் திட்டத்தை இலங்கை அரசு முன்வைக்க வேண்டும். இரண்டாவது, போர்க் குற்றங்களைப் பற்றிய சுயாதீனமான விசாரணை பற்றிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மூன்றாவதாக, இவை இரண்டையும் பற்றிய இலங்கையின் நடவடிக்கைகள் பற்றி அறிக்கைகளை மனித உரிமைகள் அவை ஆணையாளர், மற்றும் சிறப்பு அலுவலர்கள் சமர்ப்பிக்க வேண்டும்.




எனவே தொடர்ந்து நீண்ட காலத்துக்கு இலங்கை விடயம் ஐ.நா அவையில் இடம் பெறப் போகிறது. வேலைத் திட்டங்களை நடைமுறைப் படுத்த இலங்கை அரசு முன்வராவிட்டால், அல்லது மறுத்தால் என்ன பின் விளைவுகள் நிகழும் என்பது பழையபடி சூதாட்டத்திலும் சதுரங்கத்திலும் தான் தங்கியுள்ளது.

இவ்வாறு ஐ.நா.அவைக்கும் இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமான கயிறிழுப்பில் இலங்கை அரசு சாமர்த்தியமாக வெற்றி பெற்றால் அமெரிக்காவுக்காக ஆனந்தக் கண்ணீர் சிந்திய தமிழர்கள், ஒரு கோப்பை, கண்ணீருக்குள் பழையபடி தமது தலையை மூழ்கடிக்க வேண்டியதுதான்!

## கணிதத்தின் அழகு – 1

1 x 9 + 2 = 11
12 x 9 + 3 = 111
123 x 9 + 4 = 1111
1234 x 9 + 5 = 11111
12345 x 9 + 6 = 111111
123456 x 9 + 7 = 1111111
1234567 x 9 + 8 = 11111111
12345678 x 9 + 9 = 111111111
123456789 x 9 +10= 1111111111

## கணிதத்தின் அழகு – 2

1 x 8 + 1= 9
12 x 8 + 2= 98
123 x 8 + 3= 987
1234 x 8 + 4= 9876
12345 x 8 + 5= 98765
123456 x 8 + 6= 987654
1234567 x 8 + 7= 9876543
12345678 x 8 + 8= 98765432
123456789 x 8 + 9= 987654321

## 55 மணி நேரம்!



பிரிட்னி ஸ்பியர்ஸ்சுக்கு பாடலைப் போலவே, காதலையும் ரொம்ப பிடிக்கும். இரண்டு திருமணம், இரண்டு, "விவாகரத்து" ஆகியவற்றை முடித்துவிட்ட பிரிட்னி, தற்போது தன் மனேஜரான ஜாசன் ட்ராவிக்குடன் இணைந்துள்ளார்.

இந்நிலையில், பிரிட்னியின் முன்னாள் கணவரான ஜாசன் அலெக்சாண்டர் ஊடகங்களில் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறார்.


பிரிட்னியுடனான தன் காதல் மற்றும் கல்யாண வாழ்க்கை அனுபவங்களை, ஊடகம் மூலம் பகிர்ந்து கொள்ள முன்வந்துள்ளார் ஜாசன் அலெக்சாண்டர். இதற்காக, செய்தி நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் போட்டு பெருந்தொகை வாங்கியுள்ள ஜாசன், 2004இல், பிரிட்னியை மணந்து, ஜம்பத்தைந்து மணி நேரத்தில் அவரால் விவாகரத்து செய்யப்பட்டவர்.

இந்த 55 மணி நேர வாழ்க்கையைப் பற்றி, எத்தனை மணி நேரம் பேட்டி கொடுக்கப் போகிறார் ஜாசன் அலெக்சாண்டர் என்பதே இப்போதைய எதிர்பார்ப்பு.

## சினிமா சினிமா



❁ மகள் ஜானவியை எப்படி யாவது கதாநாயகி ஆக்கிவிட வேண்டும் என்ற எண்ணத்தில் தமிழ், தெலுங்கு, இந்தித் திரையுலகின் முன்னணி இயக்குநர்களிடம் பேசி வருகிறார் ஸ்ரீதேவி. அதோடு விரைவில் ஒரு தொலைக்காட்சித் தொடரையும் தயாரிக்கவுள்ளார். "மை டியர் மங்காத்தா" எனப் பெயரிடப்பட்டுள்ள அந்த சீரியலில் ஸ்ரீதேவியின் தங்கையும் முன்னாள் நடிகையுமான மகேஸ்வரி கதாநாயகியாக நடிக்கிறார்.



❁ பாடகர் மனோவின் மகன் ஷாகிர் "நாங்க" படத்தின் மூலம் வில்லனாக அறிமுகமானார். இதையடுத்து மகனைக் கதாநாயகனாக்க ஒரு புதிய படத்தைத் தயாரிக்கிறார் மனோ. இதற்காக பல இயக்குநர்களிடம் கதை கேட்டு வருகிறார். யார் இயக்கினாலும் இளையராஜாதான் இசை என்கிறார் மனோ.

❁ கண்ணிவெடிகளை மையமாக வைத்து எடுக்கப்பட்டு ஒஸ்கார் விருதுகளை வென்ற "நோ மேன்ஷஸ் லேண்ட்", "ஹர்ட் லொக்கர்" பட வரிசையில் "மிதி வெடி" என்ற பெயரில் சர்வதேசத் தரத்தில் ஒரு தமிழ்ப் படம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஈழப் பகுதிகளில் புதைத்து வைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளின் தன்மை, அவற்றில் எதிர்பாராமல் சிக்கிக்கொள்ளும் அப்பாவி மக்கள் ஆகியோரைப் பற்றி உருவாக்கப்பட்டுள்ள இந்தப் படத்தை அவுஸ்ரேலிய வாழ் தமிழர் ஆனந்தமயூர் ஸ்ரீநிவாஸ் இயக்கியுள்ளார். டானியல் பாலாஜி, நீலிமா ராணி ஆகியோர் இலங்கைத் தமிழில் பேசி முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.



❁ "ஆதிபகவன்" படத்தை முடிக்காமல் இழுத்துக்கொண்டே போவதாக படத்தின் நாயகன் ஜெயம் ரவி, இயக்குநர் அமீர் மீது வருத்தத்தில் இருக்கிறார். இந்தப் படத்தில் இரண்டு வித்தியாசமான 'கெட்-அப்'களில் நடிப்பதால் அதை மாற்றிவிட்டு வேறு புதிய படங்களுக்குத் திகதி தர முடியாததே ஜெயம் ரவியின் வருத்தத்துக்குக் காரணம்.

# சூரியக் குடும்பம் சுவையான தகவல்கள்

சூரியக் குடும்பம் எவ்வாறு தோன்றியது? இதற்கு உறுதிபூர்வமான கொள்கையோ, பதிலோ இதுவரை கண்டறியப்படவில்லை. சூரியக் குடும்பம் தோன்றியது குறித்து இதுவரை பல்வேறான கருத்துக்கள் கூறப்பட்டு வந்துள்ளன.

தொடக்கத்தில் 18ஆம் நூற்றாண்டில் புகையுருக் கோட்பாடு என்ற தத்துவம் ஒன்று கூறப்பட்டது. பல வாயுக்களால் அமைந்த பெரும் தொகுதி ஒன்று, சுழற்சியினால் மெதுவாகக் குளிர்ந்து சுருங்கத் தொடங்கியது. அச்சுருக்கத்தின் காரணமாக, அந்தத் தொகுதி முழுவதும் ஈர்ப்பு - சக்தியின் அணைப்பினால் சுழற்சி வேகம் மேலும் அதிகரித்தது. அதனால் அத்தொகுதியின் வெளிப்பரப்பின் வேகம் மிகவும் அதிகமாக, ஈர்ப்பை மீறத் தொடங்கியது. இதிலிருந்து சிறு சிறு துண்டுகள் விடுபட்டுக் கோள்கள் உருவாயின. நடுப்பகுதி மட்டும் சூரியனாக ஒளியையும், வெப்பத்தையும் அளித்துக் கொண்டுள்ளது.


இவ்வாறு புகையுருக் கோட்பாடு, சூரியக் குடும்பத்தின் தோற்றம் பற்றிக் கூறுகிறது.

பின்னாட்களில் ஏற்பட்ட அறிவியல் வளர்ச்சியால் தொலைநோக்கி கண்டுபிடிக்கப்பட்டது. இதன் மூலம் ஈர்ப்பு விசையை மீறி இடைப்பட்ட துண்டுகள் வெளியேற முடியாது என்று அறியப்பட்டது. இவற்றின் காரணமாக இக்கொள்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

18 ஆம் நூற்றாண்டில் சூரியக் குடும்பத் தோற்றம் பற்றிய கொள்கை உருவானது. விண்வெளியில் திரியும் மற்றொரு விண்மீன் சூரியனின் அருகே வர நேர்ந்தபோது, ஈர்ப்பின் காரணமாக, சூரியனது வாயுக்களை விண்வெளியில் அது கவர்ந்து ஈர்த்தது. அவ்வாறு சூரியனிலிருந்து பிரிந்த வாயுக்கள் குளிர்ந்து கோள்களாக உருவாயின என்று அக்கொள்கை விளக்கமளிக்கிறது. இரு விண்மீன்களுக்கு இடையேயுள்ள தூரம் மிக அதிகமாகையால் சூரியனை நோக்கி அதன் அருகே மற்றொரு விண்மீன் வந்திருக்கும் என்பது ஏற்புடையதாக இல்லை.

இறுதியாகத் தற்போது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கொள்கை ஒன்று உள்ளது. அது பின்வருமாறு விளக்கமளிக்கிறது.

வெகுகாலத்திற்கு முன் ஒரு மிகப் பெரிய விண்முகில் இருந்தது. அதன் ஒரு பகுதியில் நிறைச் செறிவு ஏற்பட்டது. இப்பகுதி ஏனைய பகுதிகளை ஈர்க்க ஆரம்பித்தது. அதாவது நியூட்டனின் ஈர்ப்பு விதியின்படி, இரு பகுதிகளான விண்முகிலில் நிறை ஈர்ப்புச் செறிவு மிகுந்த பகுதி, மறுபகுதியை ஈர்க்க ஆரம்பித்தது. இதன் பின் சொந்த நிறை ஈர்ப்பினால் விண் முகில் சுருங்கத் தொடங்கியது.



இந்நிலையில் இது ஒரு வாயுப் பந்து போல் சுருங்கச் சுருங்கச் சுழலும் வேகமும் அதிகரித்தது. காலப்போக்கில் இதன் மையப் பகுதி குமிழ் போன்றும் சுற்றுப்பகுதி வட்டுப் போன்ற அமைப்பையும் பெற்றது. இதன் பின்னர் வெளிப்புற வட்டின் சுழற்சி வேகம் அதிகரித்ததால் மையப் பகுதியில் உள்ள குமிழ் மேலும் சுருங்கியது. இதனால் மையத்தில் வெப்பம் அதிகரித்து மையப்பகுதி ஒரு விண்மீனாக (சூரியன்) மாறியது. சுற்றியுள்ள வட்டு உடைந்து சிறு பகுதிகளாகப் பிரிந்து வெவ்வேறு கோள் மீன்களாக மாறின.

சூரியனுக்கு அருகில் உள்ள கோள்க்ளான புதன், வெள்ளி, புவி மற்றும் செவ்வாய் ஆகியன மிக அதிகமான வெப்ப நிலையிலிருந்து குளிர்ந்து உருவானவை. இதனால் இவை திடக்கோளங் களாகக் காணப்படுகின்றன. இவற்றில் சிலிக்கான், இரும்பு போன்ற தாதுக்கள் காணபபடுகின்றன. இத்திடக் கோளங்களைச் சுற்றி மென்மையான வாயு மண்டலம் காணப்படுகின்றது.

ஆனால் சூரியனிலிருந்து தொலைவில் உள்ள கோள்கள் உயர்வெப்ப நிலையை அடையாது குளிர்ந்த வாயு நிலையிலேயே சுழன்று வருகின்றன. இவை பெரும்பாலும் ஹீலியம், ஐதரசன் ஆகிய வாயு மூலகங்களைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன.

சூரியனுக்கு அருகிலிருந்து இருக்கும் இடப்படி முறையே புதன், வெள்ளி, புவி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் என அமைந்துள்ளன. சூரியனுக்கும் புவிக்கும் இடையே அமைந்துள்ள கோள்களான புதன், வெள்ளி ஆகிய இரண்டும் உட்கோள்கள் (Inner Planets) என்று அழைக்கப்படுகின்றன. புவியைத் தாண்டிச் சுற்றி வரும் கோள்களான செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் ஆகியன வெளிக்கோள்கள் என்று அழைக்கப்படுகின்றன. சூரியனைச் சுற்றி வரும் இக் கோள்மீன் அனைத்தின் பாதையும் நீள்வட்டமே. அதே வேளையில் இவை ஏறக்குறைய ஒரே தளத்தில் அமைந்துள்ளன.

## வேறு வேறு சுதந்திரம்!

அரிஸ்டோட்டில் அடிமைகளையும் பெண்களையும் தவிர்த்த மற்றவர்களின் உரிமைகளையே பேசியிருக்கிறார். அடிமைகள் அல்லாதவர்களின் சுதந்திரம் பற்றி கிரேக்கர்கள் ரோமானியர்கள் போலவே மேல் ஜாதி பிராமணர்களின் சுதந்திரம் பற்றி அர்த்த சாஸ்திரம் எழுதிய கௌடில்யர் பேசியிருக்கிறார்.



குடும்பத்திற்கு நேர்மையாகவிருப்பதும் நாட்டுக்கு விசுவாசமாக இருப்பதும் ஆசிய சமூகங்களின் இரண்டு அடிப்படை மதிப்பீடுகள் என கன்பூஷியஸ் சொல்லியிருக்கிறார். அதே வேளை திருட்டை அரசிடமிருந்து மறைத்த தகப்பனையும் மகனையும் குடும்ப மதிப்பீட்டைக் காத்ததற்காகப் போற்றவும் செய்கிறார். ஆசியக் கலாசாரத்தில் உள்ள தீர்க்க முடியாத மிகப் பெரிய முரணாக இது இருக்கிறது. இன்னும் "உண்மை அரச குமாரனைச் சுடும் என்றாலும் கூட சொல்" எனும் கன்பூஷியஸ் அரசை எதிர்த்த கலகத்தை மறுப்பவர்.

புத்த மதமும் அசோகரும் முஸ்லிம் அரசனான அக்பரும் சகிப்புத் தன்மையை மதம் எனும் அம்சத்தில் வலியுறுத்துகிறார்கள் சுதந்திரத்தையும் சகிப்புத் தன்மையையும் பெண்களிடம் கைக்கொள்ள வேண்டியது பற்றி இவர்கள் பேசுவதில்லை. கபீரின் கவிதைகளிலும் சுத்ரகசாவின் நாடகத்திலும் சகிப்புத் தன்மை பற்றிப் பேசப்படுகிறது. பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்த ஈரானிய எழுத்தாளர அல்பருனி, மற்றவரை ஒதுக்கமாகப் பார்ப்பது எல்லா நாட்டினர்க்கும் உரியதாக இருக்கிறது என கூறுகிறார்.

இன்று நாம் அறிந்தபடியிலான ஜனநாயகமும் சரி அரசியல் சுதந்திரமும் சரி மறுமலர்ச்சி யுகத்திற்கு முன்பாக எந்தக் கலாசாரத்திலும் இருந்ததில்லை. அது மேற்கத்திய கலாசாரமாயினும் சரி கிழக்கத்தியக் கலாசாரமாயினும் சரி இதுவே உண்மை. மேற்கிலும் சரி கிழக்கிலும் சரி அரசியல் சுதந்திரம் ஆள்பவர்க்கான சுதந்திரமாகவே இருந்திருக்கிறது.

அதைப்போலவே மற்றவரின் தனித்துவத்தைச் சகிப்பது என்பதும் அரசியல் சமத்துவம் என்பதுவும் ஒப்பீட்டளவில் வேறு வேறு தளங்களில் வேறு வேறு காரணங்களுக்காகவே இருந்திருக்கிறது. அனைத்தும் தழுவிய வகையில் அரசியல் சுதந்திரம் பற்றியும் சரி ஜனநாயகம் பற்றியும் சரி சிந்தித்தவர்களென மறுமலர்ச்சிக் காலத்திற்கு முன் மேற்கிலும் இல்லை கிழக்கிலும் இல்லை.

**- அமார்த்தியா ஸென்**

## மதிப்பு!

உலகையே தன் குடையின் கீழ் கொண்டு வந்துவிட வேண்டும் என்ற பேராசை கொண்டவன் தைமூர். ஒருநாள் தன் அரசவைக் கவிஞரை உடனே வரும்படி கட்டளையிட்டான். கவிஞரைப் பார்த்து, "கவிஞரே! விலை கூறி விற்பதாயின் என்னை நீங்கள் என்ன விலைக்கு மதிப்பிடுவீர்கள்" என்று கேட்டான். கவிஞர் உடனே, "30 தினாருக்கு விலை கூறுவேன்" என்றார். "என்ன கவிஞரே! நான் அணிந்திருக்கும் இடுப்பு வாரே நீர் கூறியதற்கு மேலாக விலைபோகுமே" என்றான். கவிஞர் உடனே, "தங்களின் இடுப்பு வாருக்குத்தான் அந்த மதிப்பு!" என்றார் சற்றும் தாமதியாமல்.

# சர்வதேச விமர்சனங்களைத் தவிர்க்க பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டும்

## அமைச்சர் திஸ்ஸ விதாரண ஆலோசனை



(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாவிடின் சர்வதேச சவால்களையும் அழுத்தங்களையும் இலங்கையால் எதிர்கொள்ள முடியாது. எனவே அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட ஏனைய அரசியல் கட்சிகளை இணைத்துக் கொண்டு பொது இணக்கப்பாட்டுடன் செயற்படுவதே சிறந்தது என அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

பரிந்துரைகளில் அதிகாரப்பகிர்வு மற்றும் அரசியல் தீர்வு என்பன முக்கிய இடம் பிடித்துள்ளமையால் நாடாளுமன்ற தெரிவுக்குழு ஊடாக தீர்வுகளை எட்ட முயல வேண்டும். ஏனென்றால் ஜெனிவா தீர்மானத்தின் பின்னர் உலக நாடுகள் அனைத்தும் மிகவும் வெளிப்படையாகவே இலங்கை விவகாரங்களை கையாள ஆரம்பித்துள்ளன. இது நாட்டிற்கு நன்மை ஏற்படுத்தாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான தேசிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். பிரச்சினைகளுக்குரிய விவகாரங்கள் குறித்து அனைத்து தரப்புக்களுடனும் பேசி பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டும்.

அது மட்டுமன்றி சர்வதேச அழுத்தங்கள் மற்றும் தலையீடுகள் மிகவும் மோசமான முறையில் காணப்படுகின்றமை நாட்டின் நற்பெயருக்கு சவாலாகும்.

எனவே சர்வதேச விமர்சனங்களிலிருந்து இலங்கையை காப்பாற்ற வேண்டுமாயின் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் கூறியவற்றை முதலில் நடைறைப்படுத்திவிட்டு ஏனையவை தொடர்பில் பொது இணக்கப்பாடு ஒன்றுக்கு வரவேண்டும்.

காலத்தை கடத்துவது தொடர் தலையீடுகளுக்கு காரணமாக அமையும். நாடாளுமன்ற தெரிவுக்குழு ஊடாக தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்ற யோசனை வரவேற்கப்பட வேண்டிய தொன்றாகும்.

எனவே இச் சூழலில் அனைத்துத் தரப்புக்களும் உள்வாங்கப்பட வேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அடுத்த அமர்வில் இலங்கையில் மேற்படி திட்டங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுடனான பொறுப்புக் கூறும் தன்மை என்பவற்றை சர்வதேசம் ஆராயும்.

இதில் முன்னேற்றங்கள் காணப்படாவிடின் மீண்டும் சர்வதேசத்தின் தலையீடுகளும் அழுத்தங்களும் அதிகரிக்கும் என அமைச்சர் திஸ்ஸ விதாரண மேலும் தெரிவித்துள்ளார்.

# சுன்னாகம் பஸ் நிலையம் புனரமைக்க நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

சுன்னாகம் பஸ் நிலைய புதிய கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு அரசிடம் இருந்து சுமார் பத்து மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்றுள்ளதாக வலி தெற்கு உடுவில் பிரதேச சபை செயலாளர் திருமதி சுலோசனா மருகநேசன் தெரிவித்தார்.

சுன்னாகம் நகரப் பகுதியில் அமைந்துள்ள பஸ் நிலையம் கடந்த பல வருடங்களாக பல குறைபாடுகளின் மத்தியில் இயங்கி வருகின்றது.

இந்நிலையில் பஸ் நிலையத்தை திருத்தி புதிய கட்டடம் அமைப்பதற்கு நிதி கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் இந்நிதியின் மூலம் விரைவில் இக்கட்டடப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார்.

# வவுனியா சாலைக்கு மேலும் பஸ்கள் இணைப்பு

(வவுனியா)

பயணிகளின் நன்மை கருதி இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா கிளையினால் இரண்டு வழித்தடத்திற்கான போக்குவரத்து சேவைகள் கடந்த சனிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வவுனியா சாலை முகாமையாளர் செ.குணராசா தெரிவித்தார்.

நீண்டகாலமாக செயற்படாதிருந்த நெடும் வழித்தடமான நாவலப்பிட்டி மற்றும் தலைமன்னாருக்கான போக்குவரத்து சேவைகளே இவ்வாறு ஆரம்பிககப்பட்டுள்ளன.

நாவலப்பிட்டிக்கான சேவை வவுனியாவில் இருந்து தினமும் காலை 7.30 மணிக்கும் தலைமன்னாருக்கான சேவை காலை 5.30 மணிக்கும் ஆரம்பிக்கப்படும் என்பதுடன், தலைமன்னாருக்கு செல்லும் பேருந்து அங்கிருந்து 9.30 மணிக்கு நேரடியாக திருகோணமலைக்குச் செல்லுமெனவும் சாலை முகாமையாளர் தெரிவித்தார்.

இதேவேளை வவுனியாவிற்கான உள்ளூர் சேவைகளையும் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் போதியளவு பேருந்துகள் கிடைக்கப்பெற்றதும் அந்த போக்குவரத்துச் சேவைகளும் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கிராம மட்டத்தில் திட்டங்கள் உருவாக்க கலந்துரையாடல்

(வவுனியா)

வவுனியா நகரசபையினால் தமது எல்லைக்குட்பட்ட வட்டாரங்களைச் சேர்ந்த 33 கிராமங்களின் அபிவிருத்தி தொடர்பில் கிராம மட்டத்தில் இருந்து திட்டங்களை உருவாக்குதல் தொடர்பிலான கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை வவுனியா நகரசபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

33 கிராமங்க்ளின் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர்களுடன் கலந்துரையாடப்பட்ட இச்செயற்பாடு தொடர்பான விடயத்தில் நகர சபையினால் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தப் பணிகள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டன.

அதனை அடுத்து 2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தினை தயாரிப்பதற்கான முன்மொழிவுகளை கிராம மட்டத்தில் இருந்து பெறுதல் தொடர்பாகவும் தேவைகளை இனங்காணல் தொடர்பாகவும் கிராம மட்டத்தில் நகரசபை உறுப்பினர்கள் மற்றும் நகரசபை உத்தியோகத்தர்களுடன் மக்கள் சந்திப்புக்களை ஏற்படுத்துவது தொடர்பிலும் ஆராயப்பட்டு ஒவ்வொரு கிராமத்திற்கும் சந்திப்புக்களை மேற்கொள்வதற்கான திகதிகளும் தீர்மானிக்கப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை வவுனியா நகரசபையுடன் இணைந்து ஆசிய நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது.

# கல்வி அமைச்சினால் சீருடைக்கான விபரம் கோரல்

(வலிகாமம்)

வடக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான 2013 ஆம் ஆண்டுக்குரிய சீருடை விபரம் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் வலயக் கல்விப் பணிமனை ஊடாக அதிபர்களிடம் கோரப்பட்டுள்ளது.

அதிபர்கள் சீருடை விநியோகத்திற்குரிய படிவத்தில் தேவையான சீருடை விபரங்களைத் தயாரித்து, கோட்டக்கல்விப் பணிப்பாளர்களுக்கு ஊடாக வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை 2012 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட மாணவர் இலவச சீருடைத் துணியில் மீதியாக உள்ளவற்றையும் வலயக் கல்விப் பணிமனையில் ஒப்படைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (06)

# மானிப்பாய் இந்துவில் ஆங்கில தினவிழா

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் வருடாந்த ஆங்கிலதின விழா ஆங்கில மன்றப் பொறுப்பாசிரியர் ஆர்.எஸ்.மோகனதாஸ் தலைமையில் கல்லூரியின் வாகீசர் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்லூரியின் ஓய்வுபெற்ற உப அதிபர் இ.ஜெகநாதன் பிரதம விருந்தினராகவும், கல்லூரியின் பழைய மாணவனும் சிறந்த நடன நெறியாளருமான எஸ்.நற்குணசேகரன், பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ்.விவேகானந்தராசா மற்றும் கல்லூரியின் முதல்வர் எஸ்.சிவனேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் மாணவர்களது கலை நிகழ்வுகளான பாடல்கள், நடனங்கள், நாடகம் என்பன இடம்பெற்றன.

குழுப்பாடல்களுக்கான நெறியாழ்கையினை ஆசிரியர திருமதி. வசீகரன், நடனத்திற்கான நெறியாழ்கையினை நடன ஆசிரியர் செல்வி து.சதா மற்றும் நாடகத்திற்கான நெறியாழ்கையினை பழைய மாணவன் நற்குணசேகரன் மேற்கொண்டிருந்தனர்.

# தொலைத்தொடர்பு கம்பத்தை பதம் பார்த்த இ.போ.ச.பேருந்து



காரைநகரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து வீதியின் ஓரமாக இருந்த தொலைத் தொடர்புக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் மாலை ஆனைக்கோட்டைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

எனினும் மேற்படி பேருந்தில் பயணித்த பயணிகள் எவருக்கும் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் காரைநகரில் இருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி வருகை தந்துகொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஆனைக் கோட்டை மானிப்பாய்ப் பகுதியில் வீதியோரமாக நின்ற தொலைத் தொடர்புக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

பேருந்தின் முன் சக்கரம் (சில்லு) திடீர் என்று காற்றுப் போனதன் காரணத்தினாலேயே மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் அதேவேளை தொலைத் தொடர்புக் கம்பம் 5 துண்டுகளாக முறிவடைததுடன் பேருந்தின் முன்பக்கக் கண்ணாடி மற்றும் உடற்பகுதி முழுமையாகச் சேதமடைந்துள்ளது. (52)

# அல்லைப்பிட்டி பராசக்தியில் 'மகிழ்களம்' பயிற்சிப்பட்டறை

(அல்லைப்பிட்டி)

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய மாணவர்களுக்கான 'மகிழ்களம்' அரங்க பயிற்சிப் பட்டறை நிகழ்வு வித்தியாலய அதிபர் கு.திருச்செல்வம் தலைமையில் அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ் அரங்கப் பயிற்சிப்பட்டறை நிகழ்விற்கு பிரதம வளவாளராக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வழிகாட்டல் ஆலோசனை சேவைப் பிரிவு ஆசிரியர் நா.கு.மகிழ்ச்சிகரன் கலந்து கொண்டார்.

வளவாளர்களாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நாடகபபாட ஆசிரியர் எஸ்.ரி.குமரன, மானிப்பாய் இந்துக்கல்லூரி நாடகபாட ஆசிரியர் எஸ்.ரி.அருள்குமரன், அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய ஆசிரியர் எஸ்.இதயராஜ் ஆகியோர் கலந்துகொண்டு மகிழ்களம் அரங்க களப்பயிற்சியை நடத்தினர்.

இவ் அரங்கப் பயிற்ச்சிப்பட்டறையில் வித்தியாலயத்தைச் சேர்ந்த 9 ஆம் 10 ஆம் 11 ஆம் ஆண்டு மாணவர்கள் 48 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சிப் பட்டறையானது உளசமூக செயற்றிட்டத்தின் ஓர் பகுதியாக மகிழ்களம் என்னும் அரங்கச் செயற்பாட்டு நிகழ்வு இடம்பெற்றது.



இப்பயிற்சிப் பட்டறையில் ஆளுமை விருத்தி சார் செயற்பாடுகளும் மகிழ்வான கற்றலுக்கான சூழ்நிலையை உருவாக்குவதற்கான வழிவகைகளும் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்வதற்கான வழிவகைகள் பற்றியும் அரங்க பயிற்சி நுட்பங்கள் பற்றியும் மாணவர்களுக்குப் வழங்கப் பட்டது.

07) பின்வரும் சிங்களச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.


1) புடுவ.................................... 2) தாத்தா....................................


3) பதுர.................................... 4) கிரிபத்....................................

5) சுதுபாட்ட.................................... 6) ரதுபாட்ட....................................

08) பொருத்தமற்ற படத்தின் கீழ்க் கோடிடுக.

01)



(1)



(2)


(3)

02)


(1)


(2)


(3)


03)

| அ | E | P |
|---|---|---|
| (1) | (2) | (3) |


04)



(1)



(2)


(3)

05)


(1)


(2)


(3)

### கடந்த திங்கட்கிழமை வெளியான வெளியீடு - 48 கேள்விகளின் விடைகள்

1) 4
2) 3
3) 1
4) 2
5) 3
6) தங்கை சிரித்தாள்
7) தம்பி அழுதான்
8) தங்கை அழுதுகொண்டு தூங்கினாள்
9) தம்பி சிரித்துக்கொண்டு விளையாடினான்
10) தங்கை பாடினாள்
11) 2
12) 3
13) 5
14) 1
15) 4
16) 2
17) 2
18) 2
19) 3
20) 1
21) 10
22) 91
23) 5, 11, 19
24) 98
25) 35, 39
26) 2
27) 1
28) 2
29) 1
30) 1
31) 2
32) 3
33) 3.
34) 2
35) 1
36) 3
37) 1
38) 3
39) 1
40) 2



தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - II

1 மணி 15 நிமி

கல்வி முரசு

வெளியீடு 49



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

01) பந்தியை வாசித்துத் தரப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க.

மரக்கிளையின் மேலிருந்த மாம்பழக் குருவியானது, மலரப்போகும் ஒரு மொட்டைப் போன்று காட்சியளித்தது. இடையிடையே தன் தலையை அசைத்து சுற்றும் முற்றும் பார்த்த குருவி ஆபத்து என எண்ணும் எதனையும் காணவில்லை. எனினும் துரதிர்ஷ்டமான அக்குருவி பார்க்காத ஒரு பக்கம் இருந்தது. சிறிதேனும் அப்பக்கத்தைப் பார்த்திருந்தால் தன்னை இரையாக்குவதற்கு தனக்கு மிக அருகில் குறிபார்த்திருக்கும் சாரைப் பாம்பைக் கண்டிருக்கும். பழைய தேய்ந்த சைக்கிள் டயரைப் போன்று கறுப்பு நிறமான சாரைப் பாம்பு சிறிய பூமொட்டைப் போன்ற மாம்பழக்குருவியை அவ்வேளையில் பிடித்துக் கொண்டது. குருவி கீச்....கீச்...எனப் புலம்பியது.

1) இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பிராணிகள் எவை?

..........................................................................

2) மாம்பழக் குருவி எதைப் போன்று காட்சியளித்தது?

..........................................................................

3) சாரைப் பாம்பு எங்கே இருந்தது?

..........................................................................

4) கீழே தரப்பட்ட சொற்களின் எதிர்ச் சொற்களை எழுதுக.

1) கீழே.................................... 2) அதிர்ஷ்டம்....................................

5) கீழே தரப்பட்ட சொற்களின் ஒத்த சொற்களை எழுதுக.

1) மொட்டு.................................... 2) நிறம்....................................

6) கீழே தரப்பட்ட சொற்களின் பன்மைச் சொற்களை எழுதுக.

1) கிளை.................................... 2) தலை....................................

7) கீழே தரப்பட்ட சொற்களின் ஆங்கிலச் சொற்களை எழுதுக.

1) மரம் .................................... 2) கறுப்பு நிறம்....................................

3) பாம்பு.................................... 4) பூ....................................

02) சரியான விடையின் கீழ் கோடிடுக.

1) மணம் எதுவுமற்ற பூ பின்வருவனவற்றில் எது?

1) கடதாசிப் பூ 2) தாமரைப் பூ 3) அலரிப் பூ 4) ரோஜாப் பூ

2) மயில்களுக்கு எப்போதும் எதிரியான பிராணி எது?

1) தேவாங்கு 2) கழுகு 3) நரி 4) பாம்பு

3) தாவர இலை குழைகள், விலங்குகளின் கழிவுகள் என்பவற்றை உக்கலடையச் செய்யும் பிராணி எது?

1) காகம் 2). கோழி 3) மண்புழு 4) மீன்கள்

4) வீடுகளில் பயன்படுத்துகின்ற களியினால் செய்யப்பட்ட பாவனைப் பொருள் எது?

1) எவர்சில்வர் 2) கோப்பை 3) மண்சட்டி 4) அகப்பை

5) உணவு உண்ணுதல் தொடர்பான நற்பழக்க வழக்கம் எது?
   1) உணவை அவசரமாக மென்று விழுங்குதல்
   2) உணவை ஏனையோருடன் கதைத்தவாறு உண்ணுதல்
   3) உணவு உண்ண முன்பு கைகளை நன்றாகக் கழுவுதல்
   4) உணவு வகைகளை பசி ஏற்படும் வேளையெல்லாம் உண்ணுதல்

6) உணவு வகைகள் அசுத்தமடையும் சந்தர்ப்பம் அல்லாதது எது?
   1) உணவு வகை மீது பல்லி விழுதல் 2) உணவு வகைகளை மூடிவைத்தல்
   3) உணவின் மீது தூசி படிதல் 4) அழுக்கான பாத்திரத்தில் சமைத்தல்


7) இலங்கையைச் சூழவுள்ள கடலின் பெயர் என்ன?
   1) பசுப்பிக் சமுத்திரம் 2) இந்து சமுத்திரம்
   3) வங்காளவிரிகுடா 4) அத்திலாண்டிக் சமுத்திரம்

8) பின்வருவனவற்றில் விஷத்தன்மையுள்ள பிராணி எது?
   1) கரப்பான் 2) ஓணான் 3) மட்டைத்தேள் 4) தவளை

9) உலோகப் பாத்திரங்களின் இட்டு வைக்கக்கூடாத பொருள்,
   1) மிளகாய்த்தூள் 2) மிளகு 3) கறியுப்பு 4) சீனி

10) நுளம்புகளால் பரப்பப்படும் நோய் அல்லாதது எது?
   1) டெங்கு 2) கொலரா 3) மலேரியா 4) சிக்குன் குனியா

**03) தரம் 04 மாணவர்களில் சுற்றாடல், கணிதம், தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய பாடங்களை விரும்பும் மாணவர்கள் தொடர்பான நிரல் வரைபு கீழே தரப்பட்டுள்ளது.**




1) அதிக மாணவர்களால் விரும்பப்படும் பாடம் எது?
.......................................................................

2) மிகக் குறைந்த மாணவர்கள் விரும்பும் பாடம் எது?
.......................................................................

3) சிங்களத்தைவிட சுற்றாடல் பாடத்தை விரும்பும் மாணவர் தொகை யாது?
.......................................................................

4) தமிழ், கணிதம் ஆகிய இருப பாடங்களையும் விரும்பும் மாணவர் தொகை யாது?
.......................................................................



5) வகுப்பிலுள்ள மாணவர் தொகை எத்தனை?
.......................................................................

6) மாணவர் விரும்பும் பாடத்திற்கு ஏற்ப, பாடங்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக.
.......................................................................

7) கணித பாடத்தைவிட, ஆங்கில பாடத்தை விரும்பும் மாணவர் தொகை எத்தனை?
.......................................................................

**04) பின்வரும் தொடர் வாக்கியங்களைத் தனி வாக்கியங்களாக எழுதுக.**

1) ஆசிரியர் பொன்னும், பொருளும் பெறவில்லை.
.......................................................................

2) நாதன் கோழி முட்டையை விற்றுப் பணம் பெற்றான்.
.......................................................................

3) தம்பியும், நானும் பாடசாலைக்குப் போனோம்.
.......................................................................

4) வீட்டின் ஜன்னல்களும், கதவுகளும் உடைந்திருந்தன.
.......................................................................

5) எல்லோரும் வரிசையாக வந்து, ஆசனத்தில் அமருங்கள்.
.......................................................................

**05) பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக.**

1) பிரியாவின் வயதின் 4 மடங்கு வயதை உடையவள் சுதா, சுதாவின் வயது 12 எனில், பிரியாவின் வயது எத்தனை?
.......................................................................

2) தாயின் வயதைவிட மகனின் வயது 20 வருடங்கள் குறைவாகும். தாய்க்கு 45 வயதாகும் போது மகனின் வயது எத்தனை?
.......................................................................

3) பெரேரா 1996 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி பிறந்தான். இவனது 10 ஆவது பிறந்த நாளை எந்த வருடம் கொண்டாடுவான்?
.......................................................................

4) ரிஸ்மியா ஒவ்வொரு சனிக்கிழமையும் தனது அப்பம்மாவைப் பார்க்க போவாள். ரிஸ்மியா முந்தநாள் தன் அப்பம்மாவைப் பார்க்கப் போயிருந்தால், நாளைமறுதினம் என்ன கிழமை?
.......................................................................

5) ஒரு காற்சட்டையை வெயிலில் உலர்த்த 5 நிமிடங்கள் தேவை எனின், 10 காற்சட்டைகளை உலர்த்த எவ்வளவு நேரம் தேவை?
.......................................................................

**06) பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.**

1) Village.............................. 2) Jungle..............................
3) Stones.............................. 4) Train..............................
5) Nest.............................. 6) Carpenter..............................
7) Mosque.............................. 8) Rainbow..............................
9) Net ball.............................. 10) Spoon..............................

# வடமாகாண நாயகன், நாயகியாக யாழ்ப்பாணத்தவர்கள் தெரிவு



'ஸ்ருடியோ 9' நிறுவனத்தினால் யாழ்ப் பாணத்தில் முதன் முதலாக நடாத்தப்பட்ட வடமாகாண நாயகன், நாயகி தேர்வில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கோபிகிருஸ்ணா ராஜேந்திரா மற்றும் ஆனன் பேர்னாட் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் றில்கோ உல்லாச விடுதியில் கடந்த 31ஆம் திகதி இரவு 7.00 மணிக்கு இலங்கை அழகிகள் சங்கத் தலைவி சுபாசினி அபயவர்த்தன தலைமையில் நடைபெற்ற இறுதிக்கட்டத் தேர்விலேயே இவர்கள் வடமாகாண நாயகன், நாயகியாக தெரிவு செய்யப்பட்டு பட்டம் சூட்டிக்கொண்டனர். மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய 5 மாவட்டங் களிலும் இருந்து ஒவ்வொருவரினதும் தனித்திற மைகள் , முகபாவம், நடை, உடை, பரந்து பட்ட அறிவு, ஆளுமைத் திறன்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 15 போட்டியாளர்களுக்கு இடையிலான இறுதிப்போட்டியிலேயே இவர்கள் இருவரும் வெற்றி பெற்றுள்ளனர்.

மூன்று சுற்றுக்களாக நடைபெற்ற இறுதிப்போட்டியில் முதல் சுற்றில் போட்டியாளர்களின் அறிமுகமும், இரண்டாவது சுற்றில் குலுக்கல் முறையில் ஏற்பாட்டுக்குழுவினரின் கேள்வித் தொகுப் பில் இருந்து ஒரு கேள்விக்கான பதிலும் மூன்றாவது சுற்றில் போட்டியாளரினால் தெரிவு செய்யப்பட்ட நடுவர் கேட்ட கேள்விகள் பதில் அளித்த லுமாக போட்டிகள் நடைபெற்றன. நிகழ்வின் இறுதியாக போட்டியாளர்களுடைய தனித்திறமையினை வெளிக்காட்டிய காணொளி காண்பிக்கப்பட்டது.

யாழ். றில்கோ உல்லாச விடுதியில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார், இராணுவ உயர்அதிகாரி கேணல் ஜெயசிங்க ஆகியோர் பிரதமவிருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். (சி)

# குறைந்த விலையில் கொள்வனவு; அதிக விலைக்கு விற்பனை

## நுகர்வோர் பாதிப்பு

(அனு)

விவசாயிகளிடம் குறைந்த விலையில் மரக்கறிகளைக் கொள்வனவு செய்வதனால் பண்டத்தரிப்பு சந்தைக்கு மரக்கறி வகைகளைக் கொண்டுவருவதற்கு அவர்கள் தயக்கம் காட்டுவதாக பண்டத்தரிப்பு சந்தை வியாபாரிகள் தெரிவித்தனர்.

சந்தைக்கு கொண்டுவரும் மரக்கறிகளைச் சந்தையில் கொள்வனவு செய்யும் இடைத்தரகர்கள் குறைந்த விலைக்கே வாங்குவதாகவும், பின்னர் அவற்றை கூடுதல் விலைக்கு விற்பதாகவும் தெரிவிக்கும் விவசாயிகள் இதனால் நுகர்வோர் மரக்கறிகளைக் கொள்வனவு செய்யத் தயங்குவதாகவும் கூறினர்.

சில்லாலை, பிரான்பற்று, இளவாலை போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்களின் பொதுச்சந்தையாக இருக்கும் பண்டத் தரிப்புச் சந்தையில் விலை நிர்ணயம் இல்லாத காரணத்தினாலேயே சிரமங்களைத் தாம் எதிர்கொள்வதாக சந்தைக்கு வரும் மக்கள் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக சந்தையில் வியா பாரம் செய்யும் வியாபாரி ஒருவரைக் கேட்டபோது, சந்தைக்கு குறைவான மரக்கறிகளே வருகின்றன எனவும், மரக்கறிக்கு நியாயமான விலை கிடைக்காத காரணத்தினால் விவசாயிகள் அவற்றை வேறு சந்தைகளுக்கு எடுத்துச் சென்றுவிடுவதாகவும் கூறினார். இதனால், பண்டத்தரிப்புச் சந்தையில் மரக்கறி வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு விலையும் அதிகரிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சந்தையில் இடைத்தரகர்களின் செயற்பாடுகள் கண்காணிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதை உறுதிப்படுத்தவேண்டும் என்றும், மரக்கறி வகைகளுக்கான விலை நிர்ணயம் செய்யப்படுமானால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும் என்றும் அவர் கூறினார்.(சி)

# கைதடி கற்பகப்பிள்ளையாருக்கு குட முழுக்கு

30 வருட காலமாக, வீதியால் பயணிக்கும் பொதுமக்களிடம் சிறுகச் சிறுகப் பணம் சேர்த்துக் கட்டியெழுப்பப்பட்ட, பொட்டுப் பிள்ளையார் என அழைக்கப்படும் கைதடி கற்பகப் பிள்ளையார் ஆலயத்தின் குடமுழுக்கு வைபவம் கடந்த 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.


23ஆம் திகதி வெள்ளிக்கிழமை மற்றும் 24ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை ஆறு மணி தொடக்கம் மாலை ஆறு மணிவரை பக்தர்கள் விநாயகப் பெருமானுக்கு எண்ணெய்க்காப்புச் சாத்தினர்.

இந்த ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வினைத் தொடர்ந்து 48 நாட்கள் முழு மண்டலப் பூசைகள் நடைபெற்று வருகின்றன. திருவிழாக்காலங்களில் தினமும் காலை ஆறு மணி முதல் நண்பகல் 12 மணிவரை காலைப் பூசைகளும், மாலை நேரப் பூசைகள் மாலை 5 மணிக்கும் நடைபெற்று வருகின்றன.

கண்டி வீதிக்கு அருகில் இந்தப் புதிய ஆலயத்திற்கான கட்டடப் பணிகள் 1982ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. எனினும், நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக 30 வருடங்களின் பின்னரே ஆலயப் பணி நிறைவடைந்திருப்பதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (சி)

# யாழ்ப்பாணத்தின் ஒரேயொரு ரிக்ஷா வண்டி

யாழ்ப்பாணத்தின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றுவதில் ஒரு காலகட்டத்தில் முக்கிய இடம் பிடித திருந்த சைக்கிள் ரிக்ஷா வண்டி இப்பொழுது முற்றாகவே அருகிப்போய்விட்டது. ஆனால், இந்த ரிக்ஷா வண்டிகளை ஞாபகப்படுத்தும் விதமாக ஒரேயொரு வயோதிபர் இன்னமும் ரிக்ஷா வண்டி ஓட்டி தனது ஜீவனோபாயத்தை மேற்கொண்டு வருகிறார்.




எமது இளம் சந்ததியினர் திரைப் படங்களில் மட்டும் கண்டு களிக்கும் இந்த ரிகஷா வண்டியை பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றுவதற்கு மட்டுமே யாழ்ப்பாணத்தில் பயன்படுத்தப்படுவதாக ரிக்ஷா வண்டியின் உரிமையாளர் குறிப்பிட்டார்.

தம்பி நான் இந்த 'ரிக்ஷா' வண்டியை என்னுடைய தொழிலாகவே வைத்துள்ளேன். என்னுடைய சீவியத்துக்கு இது உழைத்துத் தருகிறது.இதில் பாடசாலைப் பிள்ளைகளை மட்டும் தான் ஏற்றி இறக்குகிறேன் யாழ்ப்பாணத்தில் இது மட்டும்தான் நிக்கிது.இதனை பல வெளிநாட்டவர்களும் படமெடுத்து செல்கின்றனர் எனக் குறிப்பிட்ட அவர், ஜேர்மனியில இருந்து வந்த ஒரு வெள்ளைக்காரத் தம்பதிகள் இதில் ஏறி யாழ.நகரைச் சுற்றிப்பார்த்ததாகத் தெரிவித்தார். (சி)

# மெய்தான் பாருங்கோ...

## அனுபவப்படிப்புகள்



பள்ளிப்படிப்பு உத்தியோகத் தொழிலுக்கும், அனுபவப்படிப்பு வாழ்க்கைக்கும் தான் உதவுமெண்டு என்ர அப்புச்சி சொல்லுறவர். தோட்டம் துரவுகள்... பட்டிக்கணக்கில மாடுகள், எருமையள் நிண்டதால என்னவோ தெரியாது என்ர அப்புச்சி என்னை அனுபவப் படிப்பை படிக்கட்டுமெண்டாக்கும் பத்தாம் வகுப்போடை நிற்பாட்டிப் போட்டார்.

அந்த நேரம்...மேற்கொண்டு படிக்க ஆசையாத்தான் இருந்தது. ஆனா அப்புச்சி விடேல்லை. தொடர்ந்து அவர் என்னைப் படிக்க விடாததில எனக்கு அப்புச்சி மேல ஆத்திரமும், எனக்குள்ள அழுகையுமாக் கிடந்தது. ஆனா இப்ப அதை நினைச்சுச் சந்தோசப்படுகிறன்!.

ஏன்தெரியுமே?

பள்ளிக்கூடத்திலயிருந்து உயர்மட்டப்படிப்பு வரை படிச்சிருந்தால், என்னைப் 'படிச்சவன்' எண்டொரு கௌரவத்தை இந்தச் சமூகம் தந்து கொண்டிருக்கும். ஆனா, அந்தச் சமூகத்துக்குள்ள இருக்கிற அடிமட்ட மனிசற்ரகுணம், நடத்தையளைப் புரிஞ்சு; அறிஞ்சு கொள்ளுறதுக்கு இந்தப் 'படித்தவன்' எண்ட கௌரவம் இறங்கிவரவிடாது பாருங்கோ!

பள்ளிகூட வாசலைப் பத்தாம் வகுப்போடை நிற்பாட்டிப் போட்டு, மண்வெட்டியையும் கலப்பையையும் பிடிக்க வெளிக்கிட்ட பிற்பாடுதான். நான் என்ர வாழ்க்கையில அடிமட்ட மனிசா களைப் பட்டறிவோடை படிக்க முடிஞ்சுது.

புத்தகங்களைப் படிச்சு அறிவை விருத்தி செய்யிறது ஒரு பக்கமிருக்க அனுபவங்கள் மூலம் மனிசரைப்பற்றிப் படிக்கிறதும் ஒரு படிப்புத்தான் பாருங்கோ. எங்கட வாழ்க்கைப் பயணத்தில எத்தனையோ பேர் எங்களை வந்து சந்திச்சுக்கொண்டு போகினம். ஆனா, எல்லாற்ற முகமும் நினைவில நிக்காது. சிலபேர் செய்யிற பாசமான ; பாதகமான செய்கையளால அவையள் ஏதோ ஒரு விதத்தில எங்கட மனசில ஒருதாக்கத்தை ; பாதிப்பை ஏற்படுத்தியிட்டுப் போயிடுவினம்.

சிலபேருடைய முகங்கள் நினைவினில் வரேக்கை மனம் வெதும்பி அழுகை வரும். வேறு சிலபேரை நினைக்க, "அவர் இப்பவும் இருக்கிறாரோ? இல்லாட்டி போய்ச் சேந்திட்டாரோ..." எண்டு உள்மனம் தூத்தரிச்சு சாபம் போடும்.

இது அவையவை செய்யிற காரியங்களைப் பொறுத்து வாழ்த்துறதும் ; தூற்றுறதுமாயிருக்கும். இப்பிடி என்ர வாழ்க்கையிலும் எத்தனையோ பேர் வந்து போயிருக்கினம்! இப்பிடி வந்து போன ஆட்களால எனக்கும் நிறைய அனுபவங்கள்...! படிப்பினைகள்...! பாடங்கள்...!

உப்புடித்தான் பாருங்கோ! ஒருக்கா ஒரு கொம்பனியில வேலை கேட்டுப் போன இடத்தில, அங்கை வேலை செய்யிற ஒரு பிள்ளையைச் சந்திக்க வேண்டி வந்திட்டுது. அந்த வேலைத் தலத்தில அவள்தான் முன்னுக்கு இருந்தாள். கொம்பனி முதலாளியோட வேலை விசயமாக் கதைச்சுப்போட்டுவர, 'சுய விபரம்' என்னமாதிரி எழுதுறதெண்டதையும் சொல்லித்தந்து, சம்பளம் இவ்வளவு... எண்டு ரகசியமாச் சொல்லி எழுதப் பண்ணினவள். அவளின்ர முகராசியோ என்னவோ எனக்கும் வேலை கிடைச்சிட்டுது. வேலை கிடைச்சாப்பிறகு என்னோட நல்ல அன்பா, மரியாதையாப் பழகினாள்.

ஒருநாள் பாருங்கோ! எனக்கு உடம்பு சரியில்லை. அண்டு முழுக்க வேலைத்தலத்தில நான் ஒருத்தரோடையும் கதைக் கேல்லை. அவளோடையும் தான்! அடுத்த நாள் அவள் என்னைத் தேடிவந்து "ஏனைய்யா என்னோடை கதைக்கேல்லை. என்னோடை ஏதும் கோவமே...?" எண்டு வஞ்சகமில்லாமல் கேட்டவுடன எனக்கு அழுகை வந்திட்டுது. என்னை விட எவ்வளவோ குறைஞ்ச வயசு. பிஞ்சுமனம்! நான் அவளைச் சமாதானப்படுத்திப்போட்டு போயிட்டன்.

பிறகொரு கொஞ்சக்காலம் வேலைக்குப்போகாமல் நிண்டிட்டு திரும்பிப்போனால், அவள் முன்னம் போல என்னோட மரியாதையா இல்லை. என்னோடை கதைக்கிறதைக் குறைச்சு, பிறகு அதையும் அறவே நிற்பாட்டிப்போட்டாள். என்ன பிரச்சினையெண்டது எனக்கு சரியாப்புலப்படாட்டிலும், பட்டறி அனுபவங்களுக்கை இந்தப்பிள்ளையின்ர செய்கை ஒருபாடமாக, அதை நான் அனுபவப்படிப்பாக எடுத்துக்கொள்ள வேண்டி வந்திட்டுது.

அவளின்ர புறக்கணிப்பு ஆரம்பத்தில என்ர மனசுக்கொரு அந்தரமாத்தான் கிடந்தது பாருங்கோ. எண்டாலும் என்ர வாழ்க்கையில மனிசரைப்பற்றி படிச்சுக்கொண்டு வாற எனக்கு, மெல்ல மெல்ல அவளின்ர செய்கையளால ஏற்பட்ட மனவருத்தங்கள் மாறிப்போகத் தொடங்கிச்சுது.

இன்டைக்கு அவள் எங்கை இருக்கிறாளோ ஆர்கண்டது?

இப்பிடித்தான் பாருங்கோ! வாழ்க்கைப் பயணத்தில எத்தனையோ பேரைச்சந்திக்கிறம்...! எத்தனை படிப்புக்களைப் படிக்கிறம்...! சந்திக்கிற எல்லாரும் எங்கட மனசில தங்கிக் கொள்ளுறதும் இல்லை. மனசைவிட்டு தவறிப்போறதும் இல்லை. சொந்தமுமில்லை அவையள் பந்தமுமில்லை. வருகிறார்கள்... முட்டுப்படுகிறார்கள்... போகிறார்கள்... அவ்வளவுதான்!

- சின்னக்குட்டி சின்னச்சாமி.

# ராகுலை பிரதமராக்க திட்டமிடும் சோனியா?

## ஜனாதிபதியாக மன்மோகன்



(புதுடில்லி)

அனைத்து விவகாரங்களிலும் நெருக்கடிகளைச் சந்தித்துவரும் மத்திய அரசின் தலைமைப் பதவியில் மாற்றம் செய்ய காங்கிரஸ் கட்சி முடிவுசெய்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.


தற்போது இடம்பெற்று வரும் பட்ஜெட் கூட்டத்தொடர் முடிந்தவுடன் மன்மோகன் சிங்கை பிரதமர் பதவியிலிருந்து அகற்றிவிட்டு ராகுலை அந்த பதவியேற்கச் செய்ய காங்கிரஸ் தலைமை சிந்தித்து வருவதாகக் கூறப்படுகிறது.

மன்மோகன் சிங் ஏற்கனவே ராஜிநாமா செய்ய முன்வந்ததாகவும், ஆனால் பட்ஜெட் கூட்டத் தொடர் முடியும்வரை காத்திருக்குமாறு சோனியா கேட்டுக் கொண்டதாகவும் காங்கிரஸ் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

தொடர்ந்து சர்ச்சை மேல் சர்ச்சை ஏற்பட்டு வந்தாலும் இராணுவத்தளபதி விகே.சிங் பிரதமருக்கு எழுதிய கடிதம் ஊடகங்களில் வெளியாகி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியதைத் தொடர்ந்தே காங்கிரஸ் தலைமை இதுகுறித்து தீவிரமாக சிந்தித்து வருவதாகக் கூறப்படுகிறது. எனவேதான் ராஜிநாமா செய்ய பிரதமராகவே முன்வந்தார் என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

சோனியாவின் இந்த முடிவால் பட்ஜெட் கூட்டத்தொடருக்குப் பின் டில்லி அரசியலில் பெரும் மாற்றம் இருக்கும் என்று இப்போதே தகவல்கள் உலா வரத் தொடங்கியுள்ளன.

# காந்தியின் பொக்கிஷங்கள் ஏலத்திற்கு வருகின்றன




(லண்டன்)

தேசத் தந்தை மகாத்மா காந்தியின் வட்ட வடிவக் கண்ணாடி, நூல் ராட்டை மற்றும் புல் வெடடும் கத்திகள் உள்ளிட்ட பல்வேறு அரிய பொருட்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி ஷ்ராப் ஷைரில் ஏலம் விடப்படவுள்ளது.

முல்லாக் நிறுவனம் இந்த ஏலத்தை நடத்துகிறது. இந்த ஏலத்தின் மூலம் ஏறக்குறைய 10,000 பவுண்டுகள் திரட்ட முடியும் என்று அந்த நிறுவனம் எதிர்பார்க்கிறது.

இந்த ஏலத்தில் 1948 ஆம் ஆண்டு காந்தி சுடப்பட்டபோது அவ்விடத்திலிருந்து எடுக்கப்பட்ட மண், புற்கள் உள்ளிட்ட அரிய பொருட்களும் ஏலத்திற்கு வருவது குறிப்பிடத்தக்கது.



தமிழக முதல்வர் ஜெயலலிதாவை பா.ஜ.க மூத்த தலைவர் அருண் ஜேட்லி தலைமைச் செயலகத்தில் நேற்று சந்தித்துப் பேசினார். மரியாதை நிமிர்த்தமாக இந்தச் சந்திப்பு நடந்ததாக தெரி விக்கப்பட்டுள்ளது.

# ஆயுத, தளபாட கொள்வனவு; டில்லியில் உயர்மட்ட ஆலோசனை

(புதுடில்லி)

இராணுவத்துக்கு தேவையான ஆயுதங்கள், தளபாடங்கள், கருவிகளைக் கொள்முதல் செய்வது தொடர்பாக பாதுகாப்புத் துறை உயர்நிலை அதிகாரிகளின் அவசர ஆலோசனைக் கூட்டம் டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தியச் செய்திகள்

இதில், கொள்முதல் நடைமுறைகளை முறைப்படுத்தும்படி தெரிவித்த மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி, இராணுவத் திட்டங்களுக்கு விரைவாக அனுமதியளிக்கப்படும் என்று உறுதியளித்தார்.

இக்கூட்டத்தில் இராணுவத் தலைமைத் தளபதி வி.கே.சிங், பாதுகாப்புத் துறைச் செயலாளர் சசிகாந்த் சர்மா உள்ளிட்ட மூத்த அதிகாரிகள் பங்கேற்றனர். இராணுவத்துக்கு வாகனங்கள் வாங்குவதில் இலஞ்சம் கொடுகக முயற்சி, ஆயுதப் பற்றாக்குறை குறித்து பிரதமருக்கு எழுதிய கடிதம் வெளியானது ஆகிய சர்ச்சைகளை அடுத்து வி.கே.சிங்கும், ஏ.கே.அந்தோனியும் முதல்முறையாக இக்கூட்டத்தில் சந்தித்துக் கொண்டனர்.

சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற இக்கூட்டத்தில், ஆயுதம் மற்றும் நவீன கருவிகள் கொள்முதலில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்கும் வகையில் ராணுவ தலைமையகத்துக்கு அதிக நிதி அதிகாரங்களைத் தர விரும்புவதாக ஏ.கே.அந்தோனி தெரிவித்துள்ளார்.

உயர்நிலைக் கூட்டத்தைத் தொடர்ந்து பாதுகாப்புத் துறை கொள்முதல் குழு கூட்டம் 2 மணி நேரம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இராணுவத் தலைமைத் தளபதி வி.கே.சிங், விமானப் படைத் தளபதி என்.ஏ.கே.பிரெஷன், கடற்படைத் தளபதி நிர்மல் வர்மா ஆகியோர் கலந்துகொண்டனர்.


# 2035 ஆம் ஆண்டிற்குள் 60 அணு உலைகள் அமைப்பு

எதிர்வரும் 2035 ஆம் ஆண்டிற்குள் 60 அணு உலைகள் கட்ட திட்டமிட்டுள்ளதாக இந்திய அணுசக்திக் கழக நிர்வாக இயக்குநர் எஸ்.கே.ஜெயின் தெரிவித்துள்ளார். சென்னையில் உள்ள தனியார் பல்கலைக்கழகத்தில் அணுசக்தி குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது.

அதில் கலந்துகொண்ட இந்திய அணுசக்திக் கழக நிர்வாக இயககுநர் எஸ்.கே.ஜெயின் பேசியதாவது, நாட்டின் மின்தேவை பெருமளவு அணுசக்தியைச் சார்ந்தே உள்ளது. தற்போது நாட்டில் செயற்பட்டு வரும் 45 அணு உலைகள் மூலம் 60,000 மெகாவாட் மின் சாரத்தை உற்பத்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்வருகிற 2035 ஆம் ஆண்டிற்குள் 60 அணு உலைகள் கட்டபபடும். அணு உலைகள் அமைப்பதற்கான இடங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. தேசிய அனல் மின் கழகத்துடன் சேர்ந்து இந்த அணு உலைகள் அமைக்கப்படுகின்றன என்றார்.

# மகள்களிடையே மோதல் சென்னை திரும்பினார் ரஜினி



(சென்னை)

மகள்கள் ஐஸ்வர்யா மற்றும் சவுந்தர்யா இடையே ஏற்பட்ட பிரச்சினை காரணமாக குழபபமடைந்த நடிகர் ரஜினிகாந்த், லண்டனில் நடந்த படப்பிடிப்பைப் பாதியிலேயே இரத்துச் செய்துவிட்டு அவசர அவசரமாக சென்னை திரும்பியுள்ளார். உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டு சிங்கப்பூரில் சிகிச்சை பெற்றபின் நீண்டநாள் ஓய்வில் இருந்த நடிகர் ரஜினிகாந்த், இப்போது தனது மகள் சவுந்தர்யா இயக்கத்தில் கோச்சடையான் படத்தில் நடித்து வருகிறார்.

இப்படத்தின் சூட்டிங்கிற்காக கடந்த 17 ஆம் திகதி ரஜினி, சவுந்தர்யா, சரத்குமார் உள்ளிட்ட கோச்சடையான் படக்குழுவினர் லண்டன் புறப்பட்டு சென்றனர். அங்கு விறுவிறுப்பாக சூட்டிங் நடந்து வந்தது.

ரஜினி, சவுந்தர்யா உள்ளிட்ட கோச்சடையான் படக்குழுவினர் இப்படத்தில் நடித்து வரும் அனுபவம் குறித்து பேட்டியளித்தனர்.

இந்நிலையில் நடிகர் ரஜினிகாந்த், லண்டனில் நடந்த சூட்டிங்கை இரத்துச் செய்துவிட்டு அவசர அவசரமாக நேற்று முன்தினம் காலை சென்னை திரும்பியுள்ளார்.

ரஜினிகாந்தின் மகள்களான ஐஸ்வர்யா மற்றும் சவுந்தர்யா இடையே தங்களது படங்களான 3 மற்றும் கோச்சடையான் படங்களை விளம்பரம் செய்வதில் பிரச்சினை உருவாகி இருப்பதாகவும், இதனால் குழப்பமடைந்த ரஜினி சூட்டிங்கை இரத்துச் செய்து சென்னை திரும்பியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## தவக்காலச் சிந்தனை

பரிசுத்த வாரம் புதன்



# தீர்ப்பிட நாங்கள் யார்?

பரிசுத்த வாரத்தில் பயணிக்கும் நாங்கள், இன்று எமக்கு ஆண்டவர் தரும் செய்தி மற்றவர்களுக்கு நாங்கள் தீர்ப்பிடுவதை நிறுத்துவோம். "தீர்ப்பிடாதீர்கள். தீர்ப்புக்கு உள்ளாவீர்கள்" என்று ஆண்டவர் இயேசு கூறுகிறார்.

எம்மில் நாங்கள் எவ்வளவுதான் குற்றங்கள் இருந்தாலும், அதை மற்றவர்கள் மீது திணித்து எமக்கு அடுத்திருப்பவர்களை குற்றவாளியாக்குகின்றோம். இது எமது அன்றாட வாழ்க்கையில் மலிந்து காணப்படுகின்றது. சட்டதிட்டங்களில் உள்ள துளைகளைக் கண்டுபிடித்து நாம் தப்பித்துக் கொள்கின்றோம். ஆனால் தவறுகள் செய்யாதவர்கள் சிறைச்சாலையில் வாடுகின்றனர்.

சற்றுச் சிந்திப்போம். அடுத்தவர்களுக்குத் தீர்ப்பிட நாங்கள் யார்? அன்று கடவுளின் மகனுக்குத் தீர்ப்பிட்டு அவரைக் கொலைக் களத்துக்கு இழுத்துச் சென்றனர். ஆனாலும் இயேசு அவர்களின் பாவங்களை மன்னித்தார். எமக்கு நாங்கள் தீர்ப்பிடுவோம். எமது பாவங்களை நினைத்து எங்களை நாம் திருத்திக் கொள்வோம். எனக்காக அழவேண்டாம் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என்று கூறுகிறார் ஆண்டவர். ஆகவே எமது பிழைகளை எண்ணி மனம்வருந்தி முழு பாவசங்கீர்த்தனம் செய்து எமது பாவங்களை பொறுத்தருள வேண்டும். மற்றவர்களுக்கு நாங்கள் தீர்ப்பளிக்காது அவர்களை சமவுரிமையோடு நாங்கள் ஏற்றுக்கொண்டு வாழ்வோம். அப்போதுதான் எமது வாழ்வும் எதிர்காலமும் முழுமைபெறும். அதற்காக இறைவனிடத்தில் இந்த பரிசுத்த நாட்களில் பிரார்த்திப்போம்.

-ஆர்.மதுசன், பாசையூர்

# தமிழக அரசின் கொள்கை; எதிர்த்து தி.மு.க. பொதுக்கூட்டம்

(சென்னை)

ஜெயலலிதா ஜெயராம் தலைமையிலான தமிழக அரசின் கொள்கைகளுக்கு எதிராக பொதுக்கூட்டங்களை நடத்தவுள்ளதாக திராவிட முன்னேற்ற கழகம் அறிவித்துள்ளது.


மின் கட்டண திருத்தம் உள்ளிட்ட மக்களுக்கு எதிரான தமிழக அரசின் பல்வேறு கொள்கைகளுக்கு எதிராக எதிர்வரும் 15 ஆம் திகதி கண்டனக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட மின்கட்டணத் திருத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, எதிர்வரும் ஒன்பதாம் திகதி தமிழக ரீதியில் ஆர்ப்பாட்டங்களுக்கு தி.மு.க அழைப்பு விடுத்திருந்தது.

அனைத்து முக்கிய இடங்கள் மற்றும் நகரங்களில் இந்தக் கூட்டங்கள் நடத்தப்படவுள்ளதாக திராவிட முன்னேற்றக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஸ் கட்டண உயர்வு, பால் விலை உயர்வு, மின் கட்டண உயர்வு, எரிசக்தி தட்டுப்பாடு, சட்டம் மற்றும் ஒழுங்கு விதிமுறைகளின் நிலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தக் கூட்டங்களை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

# உப ஜனாதிபதியை ஒப்படைக்குமாறு கட்டாரை வலியுறுத்துகிறது ஈராக்



(பாக்தாத்)

கட்டாருக்கு தப்பிச் சென்றுள்ளதாக கூறப்படும் தமது நாட்டு உப ஜனாதிபதி தாரிக் அல் ஹஷிமியை தம்மிடம் ஒப்படைக்குமாறு கட்டார் அரசாங்கத்தை ஈராக் அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

ஈராக் அரசியல் தலைவர்களை கொலை செய்வதற்கு கொலைக் குழுக்களுக்கு நிதியளித்ததாக ஈராக் உபஜனாதிபதி தாரிக் அல் ஹஷிமி மீது குற்றம் சுமத்தப்பட்டு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்பின் அவர் சுயாட்சி உரிமை கொண்ட ஈராக்கிய பிராந்தியமான குர்திஸ்தானில் தங்கியிருந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர் கட்டாருக்கு விஜயம் மேற்கொண்டு அந்நாட்டு மன்னர் ஷேக ஹமட் பின் கலீபா அல் தானி மற்றும் பிரதமர் ஷேக் ஹமட் பின் ஜாசெம் பின் ஜப்ர் அல் தானி ஆகியோரையும் சந்தித்தார். இதை உத்தியோகபூர்வ விஜயம் என ஹஷிமி கூறினார்.

இவ்விரு நட்பு நாடுகளுக்கிடையிலான நிலைவரங்கள் மற்றும் பிராந்திய நிலைவரங்கள் குறித்து ஹஷிமியும் கட்டார் மன்னரும் கலந்துரையாடியதாக கட்டார் அரசின் செய்தி முகவரகம் தெரிவித்தது.

இந்நிலையில் தன்னால் தேடப்படும் நபர் ஒருவரை கட்டார் உபசரிக்கிறது என ஈராக் குற்றம் சுமத்தியுள்ளது.

தேடப்படும் நபர் ஒருவரை கட்டார் உபசரிப்பது ஏற்றுக் கொளளப்பட முடியாது. அவரை ஈராகிடம் கட்டார் ஒப்படைக்க வேண்டும் என ஈராக்கிய பிரதிப் பிரதமர் ஹுஸைன் அல் ஷாஹ்ரிஸ்தானி கூறியுள்ளார்

அவரை ஈராக்கிலிருந்து வெளியேற அனுமதித்ததன் மூலம் குர்திஷ் பிராந்திய அரசாங்கம் சட்டத்திற்கும் நீதிக்கும் தெளிவான சவாலொன்றை ஏற்படுத்தியுள்ளது எனவும் ஈராக் துணைப் பிரதமர் கூறினார்.

எனினும் தனக்கு எதிராக எந்த நீதிமன்றத்திலிருந்தும் தீர்ப்பு எதுவும் இல்லை எனவும் ஈராக் அரசாங்கத்தின் கோரிக்கை அரசியலமைப்பின் 93 ஆவது 'ரத்துக்கு முரணானது எனவும் உப ஜனாதிபதி தாரிக் அல் ஹஷிமி கூறியுள்ளார். அரசியலமைப்பில் தனக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரவித்தார்

# அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு; ஏழு பேர் ஸ்தலத்தில் பலி



(கலிபோர்னியா)

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் ஏழு பேர் கொல்லப்ப்ட்டதுடன், மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

கலிபோர்னியாவின் கல்லூரி ஒன்றில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலை நடத்தியதாக கூறப்பட்ட ஒருவர் பின்னர் கைது செய்யப்பட்டார். இது தொடர்பில் ஒக்லேண்ட் பொலிஸார் தகவல் வெளியிடும் போது, துப்பாக்கிதாரி ஒருவர் கல்லூரி வளாகத்தினுள் நுழைந்து, சரமாரியாகத் துப்பாக்கித் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

உலகச் செய்திகள்

# ஹங்கேரி ஜனாதிபதி பதவி விலகுகிறார்



ஜனாதிபதி பதவியிலிருந்து தாம் விலகுவதாக ஹங்கேரியின் ஜனாதிபதி போல் ஸ்கிமிட் அறிவித்துள்ளதாக பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.

மோசடி காரணமாக ஹங்கேரி ஜனாதிபதியின் கலாநிதிப் பட்டம் பறிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

தனது தனிப்பட்ட விவகாரங்கள் நாட்டினைப் பிளவுபடுத்துவதாக அமைந்திருந்தமையால் இந்தத் தீர்மானத்தினை எடுத்ததாக, 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட ஸ்கிமிட் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் சேவையினையும், ஜனாதிபதி என்ற ரீதியில் தன் வசமிருந்த அதிகாரத்தினையும் இராஜினாமா செய்ய வேண்டியது தனது கடமையென ஸ்கிமிட் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஹங்கேரி ஜனாதிபதி கலாநிதி பட்டத்தின் பொருட்டு 1992 ஆம் ஆண்டு செம்மெல்வீஸ் பல்கலைக்கழகத்திடம் சமர்ப்பித்த இறுதி ஆய்வறிக்கையின் பெரும்பகுதி முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வறிக்கையொன்றின் நகலாக இருந்தமை கண்டறியப்பட்டுள்ளதால் அவரது கலாநிதிப் பட்டம், கடந்த வாரம் மீளப்பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஏவுகணை செலுத்த முன்னர் உயர்மட்ட கலந்துரையாடல்



வடகொரியா இம்மாதம் ஏவுகணை செலுத்தும் திட்டத்திற்கு முன்னர் உயர் மட்ட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவுளளது.

வடகொரியாவின் நிர்வாகம் கிம் ஜொன் யுன்னின் கீழ் வந்துள்ள நிலையில் இந்தச் சந்திப்பு முக்கியமானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி இடம் பெறவுள்ள இந்தக் கூட்டத்தில் தொழிற்கட்சியைச் சேர்ந்த உயர் மட்ட உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகொரியா ஏவுகணைத் திட்டத்தின் கீழ் விண்வெளிக்கு செய்மதி ஒன்றினை எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் 16ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியினுள் அனுப்ப திட்டமிட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வடகொரியாவின் நீண்ட தூர ஏவுகணை பிரயோகத்திற்கு ஐக்கிய நாடுகள் சபை எதிர்ப்புத தெரிவித்து பிரேரணை ஒன்றினை நிறைவேற்றியுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இதேபோன்ற ஏவுகணையை அனுப்பிய போதே, வடகொரியாவிற்கு எதிராக பொருளாதாரத் தடை மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டால் கடலுக்குள் மூழ்கும் ஜப்பான்

(டோக்கியோ)

மீண்டுமொரு முறை நிலநடுக்கம் ஏற்படுமாக இருந்தால் ஜப்பானின் பெரும் பகுதி கடலுக்குள் மூழ்கிவிடுமென ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஜப்பானில் கடந்தாண்டு ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கமும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமியும் பல நகரங்களைப் பாதிப்புக்குள்ளாக்கின.

இந்த விபத்தில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகினர். மேலும் புகுஷிமா நகரில் இருந்த அணு உலைகள் வெடித்துச் சிதறின.

பயிர்கள், மனிதர்கள் கதிர்வீச்சில் பாதிக்கப்பட்டனர். ஓராண்டு முடிந்த நிலையில் நிலநடுக்கம், சுனாமி பாதிப்பு குறித்து விரிவான ஆய்வு நடத்த நிபுணர் குழு அமைக்கப்பட்டது. இக்குழு கடந்த ஓராண்டாக பல விடயங்களை ஆராய்ச்சி செய்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், ஜப்பானில் மீண்டும் 9.0 புள்ளி ரிச்டர் அளவுக்கு நிலநடுக்கம் ஏற்பட்டால் 112 அடி உயரத்துக்கு(34 மீற்றர்) சுனாமி அலைகள் தாக்கும் அபாயம் உள்ளது. அப்படி நடந்தால் டோக்கியோ முதல் தென்மேற்கு பகுதியில் உள்ள குயூ தீவு வரை பாதிப்பு இருக்கும். பல நகரங்கள் மூழ்கிவிடும் என்று எச்சரித்துள்ளது.

கடந்த 2003ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட நிபுணர் குழு சுனாமி அலைகள் 20 மீற்றர் உயரத்துக்குத் தாக்கினாலும் எந்த நகரமும் மிக மோசமாக பாதிக்கப்படாது என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அசாத்திற்கு காலக்கெடு விதிக்குமாறு வலியுறுத்து

சிரியாவில் தொடரும் முரண்பாடுகளை முடிவுக்கு கொண்டுவர பஷார் அல் அசாத்திற்கு காலக்கெடு விதிக்கப்பட வேண்டுமென மேற்குலக மற்றும் அரபு நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அரபு லீக்கின் விசேட பிரதிநிதி கொபி அனானிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.


கொலைகள் தொடர்ந்தும் இடம் பெறும் பட்சத்தில் சிரிய விவகாரத்தை ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவைக்கு கொண்டு வரவும் மேற்குலக மற்றும் அரபு நாடுகள் அழைப்பு விடுத்துள்ளன.

இதேவேளை சிரிய பிரஜைகளின் சட்டரீதியான பிரதிநிதியாக அந்த நாட்டு தேசியப் பேரவையை சிரிய நண்பர்கள் என்ற அமைப்பு ஏற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச சமூகத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் பிரதிநிதியாகவும் சிரிய தேசியப் பேரவையை மேற்குலக மறறும் அரபு நாடுகளைக் கொண்ட குறித்த அமைப்பு ஏற்றுக் கொண்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

# பின்லேடனின் மனைவியருக்கு சிறைத்தண்டனை விதிப்பு

## நாடு கடத்தவும் உத்தரவு



அல்-கொய்தா இயக்கத்தின் தலைவர் ஒசாமா பின்லேடனின் மனைவியர் மூவர மற்றும் இரு மகள்களுக்கு சட்டவிரோதமாக பாகிஸ்தானில் தங்கியிருந்த குற்றத்திற்காக 45 நாட்கள் சிறைத்தண் டனை விதித்து பாகிஸ்தான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன் இவர்களை இயன்றவரை விரைவாக நாடுகடத்துமாறும் இஸ்லாமபாத்திலுள்ள அந்நீதிமன்றம் தெரிவித்துள்ளது. அதேவேளை மேற்படி ஐவருக்கும் தலா, பத்தாயிரம் பாகிஸ்தான் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் சட்டவிரோதமாக தங்கியிருந்ததாக இவர்கள் மீது முறைப்படி குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட மார்ச் 3 ஆம் திகதியிலிருந்து இத்தடுப்புக்காவல் காலம் அமுலுக்கு வரும் எனவும், இப்போது அவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள இஸ்லாமாபாத் வீட்டில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்படுவர் எனவும் அவர்களின் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் முஹமட் ஆமிர் மேற்படி வீட்டுக்கு வெளியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

இவ்வீடு ஓர் உப சிறை என பாகிஸ்தான் அதிகாரிகள் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

பின்லேடனின் மனைவியர் மற்றும் மகள்களை நாடுகடத்துவதற்கான நடவடிக்கைகளை பாகிஸ்தான் உள்துறை செயலாளர் மேற்கொண்டு வருவதாகவும், இந்நடவடிக்கை இரு வாரங்களில் பூர்த்தியடையும் என தான் எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார். பின்லேடனின் இளைய மனைவி யேமனைச் சேர்ந்தவராவார். ஏனைய இருவரும் சவூதி அரேபியாவைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒளி வெள்ளத்தில் மூழ்கி இருக்கிறது அரங்கம். அடுத்த பாடலை பாட வருகிறார், போட்டியாளர். பின்னணியில் இசை ஒலிக்க, பாடத் துவங்குகிறார்.

'ஆராரிரோ.. நானிங்கு பாட தாயே நீ கண்ணுறங்கு'

அரங்கிலிருப்பவர்கள் முதல் நடுவர்கள் வரை அவரவர் அன்னையின் தியாகத்தை எண்ணி உருகியபடி இருக்கின்றனர். பாடலின் நடுவில், நடுவர்களில் ஒருவர் இடைமறிக்கிறார்.

'ஒரு நிமிசம், இதை யாருக்கு டெடிகேட் பண்றீங்க, சந்தோஷ்?'

'அம்மாவுக்கு, சார்'- போட்டியாளர்

'உன் அம்மா எங்க?' விட்டால் அழுது விடுவது போன்ற உருக்கமான குரலில் நடுவர்.

'அம்மா வரலை, அம்மாவுக்கு உடம்பு முடியாததால, வந்து உட்கார முடியாது. அதனால வரலை.' - போட்டியாளர்.

தடுமாற்றமான குரலில் பதிலளிக்கிறார். தனக்கு இந்த ஏற்பாடு முன்பே தெரிந்திருந்தாலும், ஆச்சரியமாக இருக்கட்டுமே என்பதற்காக மகனிடம் இது குறித்துச் சொல்லவில்லை என்கிறார். இதற்கும் அரங்கம் கண்கலங்குகிறது. நெகிழ்ந்து கரவொலி எழுப்புகிறது. சிறிது நேரத்தில் விட்ட இடத்திலிருந்து திரும்ப பாடல் தொடங்குகிறது.

சூப்பர் சிங்கர் - தமிழகத்தின் பிரமாண்டமான குரல் தேடல் மற்றும் தமிழகத்தின் செல்லக் குரலுக்கான தேடல் என்ற இந்த நிகழ்ச்சிகள் தமிழகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் பிரசித்தம்.

முதலில் இந்த நிகழ்ச்சி மற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் போல் அல்லாமல், உண்மை நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட ரியாலிட்டி ஷோ வகையைச் சார்ந்தது. அதாவது, பணத்துக்காக நடிக்கும் நடிகர்களை கொண்டதல்ல. நிகழ்ச்சியில் பங்கேற்பாளர்களைக் கொண்டு, அவர்களின் உணர்ச்சிகளை, வாழ்க்கையை மைய

இருக்காது. எல்லாம் ஒரு செயற்கைத் தனம் கலந்து இருக்கும். அதே நேரம் உண்மையில் நடப்பது போல தொகுத்து வழங்குவார்கள்.

ரியாலிட்டி நிகழ்ச்சிகள், பார்ப்பவரை அடுத்தது என்ன என்பதை இதயத் துடிப்பை எகிறவைத்து, எதிர்பார்ப்பை ஏற்படுத்தி ஈர்த்துப் பிடிக்கின்றன. எவ்வளவுக்கெவ்வளவு மக்களை ஈர்த்துப் பார்க்க வைக்கின்றன என்பதைப் பொறுத்து அந்த நிகழ்ச்சியின் டி.ஆர்.பி ரேட்டிங் எகிறும். அதைப் பொறுத்து பணமும் கொழிக்கும்.

பொழுதுபோக்கு அம்சத்துக்காக நிகழ்ச்சிகள் காண்பிக்கப்பட்டது போக, நிஜத்தைப் போலவே காண்பிக்க வேண்டும், பார்ப்பவர்களின் உணர்ச்சிகளை கட்டிப்போட வேண்டும் என்ற உந்துதலில் நிகழ்ச்சிகளை செயற்கையாக இட்டுக்கட்டி நடத்துகின்றன. அதற்காக எந்த எல்லைக்கும் செல்ல தயாராக இருக்கின்றன, தொலைக்காட்சி நிறுவனங்கள்.

வெற்றி பெற்றவர்களை தேர்ந்தெடுப்பதும் மற்றொரு வகைச்சுரண்

ஆயிரத்தில் ஒருவர்தான் இந்தப் போட்டியில் வெற்றி பெற முடியுமென்றாலும் பெற்றோர்கள் அயர்ந்து விடுவதில்லை.

லாட்டரி சீட்டு வாங்கினால் லட்சாதிபதி என்று கனவு கண்டு ஒவ்வொரு நாளும் லாட்டரி சீட்டு வாங்கி பாமரர்கள் ஏமாறுகிறார்கள், இல்லையா? அது போல, தங்கள் குழந்தையை ரேஸ் குதிரைகளாக நினைக்கும் பெற்றோரின் இந்த மனநிலையை தொலைக்காட்சி சனல்கள் நன்றாகப் பயன்படுத்திக் கொள்கின்றன.

ஒருவேளை, இந்த போட்டியில் ஜெயித்து விட்டால் அவனது வாழ்க்கையே முற்றிலுமாக மாறிவிடும் என்று பலரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதாவது, இதன் மூலம் சினிமாவில் பாட சான்ஸ் கிடைக்கும் என்று பரப்பப்பட்டு வருகிறது. அதற்கேற்றாற் போல், நடுவராக வருபவர் ஏதாவது ஒரு இசையமைப்பாளரும் ஆசை காட்டுகிறார்.

பெற்றோர்கள் இந்த நிகழ்ச்சியை




# சூப்பர் சிங்கர்: மாபெரும் உணர்ச்சிச் சுரண்டல்!

'அப்படியா? நிஜமா?' - போலித்தனமான இரக்க வார்த்தைகளில் நடுவர்.

'ஆமா, நிஜமாத்தான் சார்' - பாடலை பாதியில் நிறுத்தச்சொன்ன கலக்கத்துடன் பதிலளிக்கிறார் போட்டியாளர்.

'இங்கே பாருங்க, ஒரு சர்ப்ரைஸ் உங்களுக்கு' என்று நடுவர் சொன்னதும், அரங்கமே திரையில் பார்க்கிறது. அங்கு, வாசலுக்கு வெளியே ஸ்ட்ரெச்சரிலிருந்து ஒரு அம்மாவை இறக்குகிறார்கள். அவரால் நடக்க முடியவில்லை. அப்படியும் விடாமல், கைத்தாங்கலாக அழைத்து வருகிறார்கள். கமெரா போட்டியாளரிடம் திரும்புகிறது. அவரோ, இதைக் காணச்சகியாமல் திரும்பிக் கொள்கிறார். அழுகிறார். உருகுகிறார். அரங்கமே எழுந்து நிற்கிறது. இதற்கேற்ப, ஒரு சோகப் பின்னணி இசை வாசிக்கப்படுகின்றது. பலரும் கைகொடுத்து தூக்கிவிட, அந்த அம்மா சிரமப்பட்டு படியேறுகிறார். இதைக் காண்பவர்கள், இன்னும் நெகிழ்ந்து விடுகிறார்கள். வாய் பொத்தி, 'அய்யோ' என்று பதறுகிறார்கள். கண்களைத் துடைத்துக்கொள்கிறார்கள்.

மேடையில் அவர் நாற்காலியில் அமர்ந்ததும் கரவொலி. இதோடு அந்த போட்டியாளரை விட்டு விடவில்லை. 'சரி, சந்தோஷ், ஆரம்பிக்கிறதுக்கு முன்னாடி நீங்க என்ன ஃபீல் பண்ணீங்க, இப்போ என்ன ஃபீல் பண்றீங்க? எப்படியாவது வார்த்தையில அதை கொண்டு வாங்க?' என்று அந்த போட்டியாளரை விடாமல் தோண்டித்துருவி செண்டிமெண்டைப் பிழிந்து எடுக்கிறார்கள்.

நடுவர்கள் கண்களை துடைத்துக் கொள்கிறார்கள். அரங்கத்திலிருப்பவர்கள், இந்தக்காட்சியை காணத் திராணியற்றவர்களாய் தங்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு தலைகுனிந்து அமர்ந்திருக்கிறார்கள். அப்படியும் போட்டியாளரை நிகழ்ச்சி நடத்துபவர் விடவில்லை. விக்கித்துப் போய் இருப்பவரிடமிருந்து உணர்ச்சியை வார்த்தைகளாகக் கறந்து விடத் துடிக்கிறார். 'எங்க அம்மாவால நடந்து வர முடியாது, வந்தாலும் நாள் முழுக்க நாற்காலியில உட்கார்ந்து இருக்க முடியாது' என்று போட்டியாளர் சந்தோஷ் தடுமாறுகிறார்.

போட்டியாளரின் தாயையும், நிகழ்ச்சி நடத்துபவர் விடவில்லை. அவரும்

மாகக் கொண்டு பணத்துக்காகவும், படாடோபமான பரிசுகளுக்காகவும் முக்கியமாக டி.ஆர்.பி ரேட்டிங்குக்காக நடத்தப்படுபவை. முன்னரே திட்டமிட்டு தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகளைப் பார்த்து சலித்த ரசிகர்களுக்கு உண்மையான விறுவிறுப்பு, ஆவல், த்ரில் முதலான உணர்ச்சிகளை ஊட்டி கல்லா கட்டுவதுதான் இந்த ரியாலிட்டி ஷோக்களின் நோக்கம்.



இவ்வகை நிகழ்ச்சிகள் ஆரம்பத்தில் 1970களில் அமெரிக்காவில் பிரபலமாக இருந்தது. அமெரிக்காவில் ஓபரா வின்ஃப்ரே என்ற பெண்மணியின் இவ்வகை நிகழ்ச்சி மிகவும் புகழ்பெற்றது. எல்லா வணிக ஊடகங்களும் அமெரிக்க மாதிரியை வைத்து வளர்ந்தது போல தற்போது இந்த நிகழ்ச்சிகள் இந்தியாவுக்கும் இறக்குமதியாகி இருக்கின்றன.

கோன் பனேகா குரோர்பதி, உங்களில் யார் அடுத்த பிரபுதேவா, காபி வித் அனு, சச் கா சாம்னா, மானாட மயிலாட, சரிகமபதநி என்று இதில் அநேக ரகங்களுண்டு. இந்த ரியாலிட்டி நிகழ்ச்சிகளில் விளையாட்டு, காமெடி, பிரபலங்களை வைத்து, திறமைக்கான தேடல் என்றும் பல வகைகள் உண்டு. ஏஎக்ஸ் போன்ற சனல்களில் இது போன்ற ரியாலிட்டி ஷோக்களே தனிச் சிறப்பாக நடக்கின்றன. அதில் போட்டி நிகழ்ச்சிக்காக அருவருப்பான உணவுகளை உண்பது, சாதாரணமாக அன்றாட வாழ்க்கையில் செய்யாதவற்றை கமெரா முன்பு செய்வது, சமயங்களில் உயிரைக்காவு கொள்ளக்கூடிய சாகசங்கள், முன்பின் தெரியாதவர்களுடன் சில நாட்களை ஒரே வீட்டில் கழிப்பது முதலியன.

வகைவகையாக நிகழ்ச்சிகள் இருந்தாலும் அவற்றின் நோக்கம் ஒன்றுதான் - காண்பவரின் உணர்ச்சிகளைக் கொண்டு விளம்பரங்களின் மூலம் காசு பார்ப்பது. அதாவது ரியாலிட்டி என்று சொல்லிக் கொண்டாலும் அதில் இயல்புத் தன்மை என்பது பேச்சுக்குக் கூட

டல்தான். யார் அதிக வாக்குகளை செல்போன் குறுஞ்செய்திகள் மூலம் பெறுகிறார்களோ அவர்கள்தான் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படுவார்கள். அனுப்பப்படும் ஒவ்வொரு குறுஞ்செய்திக்கும் காசு. விளம்பரங்கள் மட்டுமல்லாமல் மக்களின் குறுஞ்செய்திகளிலும் காசு வேட்டைதான். இப்படிக் கொள்ளையடிப்பதற்காக, மக்களின் கவனத்தைப் பெறுவதற்கு அவர்களுக்குத் தெரியாமலே வக்கிரமான ரசனைகளுக்குக்கொண்டு சென்று செண்டிமெண்டால் தாக்குவார்கள்.

ஒருமுறை ஸ்ரீகாந்த் என்ற சிறுவன் இறுதிச்சுற்றுக்கு வந்து விட்டான். அடுத்ததாக, பொது மக்களின் வாக்கு மூலம் தேர்ந்தெடுக்க வேண்டும். அவனுக்கு வாக்குகள் சேகரிக்க சென்னை நகரெங்கும் ப்ளெக்ஸ் பேனர்கள் வைக்கப்பட்டிருந்தன. அவனுடைய எஸ்.எம்.எஸ். எண், எந்த எண்ணுக்கு அனுப்ப வேண்டும், எந்த நேரத்துக்குள் அனுப்ப வேண்டும் என்பன போன்ற விவரங்களுடன்.

அதில், 10 வயது கூட நிரம்பியிராத அந்த சிறுவன் கூழைக் கும்பிடு போட்டுக்கொண்டு, 'என்னை வாக்களித்து ஜெயிக்க வைத்து, ஜுனியர் 2 டைட்டிலை வின் பண்ணிக் கொடுங்க, ப்ளீஸ்' என்று கெஞ்சிக் கொண்டிருந்தான். இந்த நிகழ்ச்சிகள் எந்த அளவுக்கு பெற்றோரின் மனநிலையை, குழந்தைகளின் மனநிலையைச் சீரழித்து வைத்திருக்கின்றது என்பதற்கு எடுத்துக் காட்டு இது.




பிறக்கும் போதே குழந்தை என்ன பொறியியல் படிப்பு முடிக்க வேண்டும், எத்தனை இலட்சம் சம்பளத்தில் பணியாற்ற வேண்டும், என்ன ஆய கலைகள் கற்க வேண்டும் என்பதை ஒரு பந்தயக் குதிரையை வளர்ப்பது போல 'தீனி' போட்டு வளர்க்கிறார்கள், நடுத்தர வர்க்க பெற்றோர்கள்.

ஆரோக்கியமான போட்டியாகக் கண்டிப்பாக பார்ப்பதில்லை. ஏனெனில், அது தற்போது பரிசை நோக்கிய ஓட்டமாக மாறி விட்டது. கலந்து கொள்ளும் தங்கள் குழந்தைகள் வெற்றி பெற்றே ஆக வேண்டுமென்று அனைவரும் நினைக்கிறார்கள். எப்படியாவது பரிசுப்பொருளைக் கைப்பற்ற எண்ணுகிறார்கள். பணத்துக்காக எதை வேண்டுமானாலும் விற்கத் தயாராக இருப்பவர்கள் தங்கள் குழந்தையை விற்கத் தயாராகிவிடுகிறார்கள்.

ஐந்து வயது கூட நிரம்பாத குழந்தைகள், குமரிகளுக்கான விரகதாபத்துடன் ஜட்டம் பாடல்களைப் பாடுகிறார்கள். முக்கல் முனகல்களுடன் அபிநயிக்கிறார்கள். நடுவர்களை பார்த்து கண்ணடிக்கிறார்கள். இதனைப் பெற்றோர்கள் பார்த்து ஆர்ப்பரிக்கிறார்கள். நடுவர்கள், 'உன் குரல்ல இன்னும் ஃபீல் பத்தல' என்று விமர்சிக்கிறார்கள்.

குழந்தைகள், பெரியவர்கள் போல் பேசுகிறார்கள். ஜோக் அடிக்கிறார்கள். ஆனால், குழந்தைகளாக நடிக்கிறார்கள். குழந்தை உருவத்தில், பெரியவர்களுக்கான பாடல்களை பாடுகின்றனர். அங்க அசைவுகளை வெளிப்படுத்துகிறார்கள். சின்னஞ்சிறு வயதிலேயே வயதுக்கு மீறிய உடல் மொழி, உணர்வுகளை மெல்ல மெல்லக் கற்றுக் கொள்கிறார்கள்.

குழந்தைகளிடம் தாம் இப்படி, தகாத முறையில் பாலியலை அறிமுகப்படுத்தியதைப் பற்றி டி.வி.யோ அல்லது பெற்றோர்களோ கிஞ்சித்தும் கவலைப்படுவதில்லை. வெளிப்படையாக வல்லுறவு செய்தால்தான் பாலியல் வன்முறை என்பதில்லை. குழந்தைகளின் உணர்ச்சியை அளவு கடந்து தூண்டிவிடுதலும், குழப்புவதும் கூட பாலியல் வன்முறைதான்.

இந்த நிகழ்ச்சிக்கு வெளியே, சமூக அரசியல் காரணங்களால் வஞ்சிக்கப்பட்ட எண்ணற்ற குழந்தைகளின் நிலை பற்றி எண்ணுவதற்குக் கூட இவர்களுக்கு நேரமிருப்பதில்லை.

முதலாளித்துவ சமூகத்தில், பண்டங்களை சந்தைப்படுத்துவதற்கே ஊடகங்கள் தேவை. சந்தையில் பலியிடப்படும் தங்கள் குழந்தைகள் பண்டங்களா என்பதை பெற்றோர்கள் சிந்திக்கட்டும்.

நன்றி:- வினவு

# மந்தகதியில் அபிவிருத்தி பிரித்தானிய எம்.பி.கவலை



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நடைபெற்றுவரும் அபிவிருத்திப் பணிகள் மந்த கதியில் நடைபெறுவதாக பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் லோர்ட்ஸ் நெசபி தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்திற்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டுள்ள பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினரும் அவரது பாரியாரும் நேற்றுக்காலை யாழ். மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையை ஆயர் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

யாழ்.மாவட்டத்துக்குப் பல தடவைகள் தான் விஜயம் மேற்கொண்டபோது மந்தகதியிலான அபிவிருத்தியையே காண முடிந்ததாக பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த ஆயர் யாழ். மாவட்டம் பாரிய முன்னேற்றத்தினைக் கண்டபோதிலும் அபிவிருத்திகள் மந்த கதியிலேயே நடைபெறுகின்றன. வீதிகள் சீராக அமைக்கப்படவில்லை. மக்களின் வாழ்வாதாரத் திட்டங்கள் மந்தகதியில் நடைபெறுகின்றன. நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையினை ஏற்றுக்கொண்டு நடைமுறைப் படுத்த அரசாங்கம் இணங்க வேண்டும் என யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மக்கள் சமத்துவமாக வாழ்வதற்கு ஆட்சி முறை நல்ல முறையில் அமைய வேண்டும். நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையினை மக்கள் படித்து அறிந்து கொள்வதற்கு மொழி பிரச்சினையாக உள்ளது.

மொழிப் பிரச்சினைகளை நீக்குவதற்கு தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சருடன் கலந்துரையாடிபோது மொழி பெயர்ப்பாளர்களும், அச்சுக்கோவைகளும் இல்லை என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்ததாக பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினரிடம் ஆயர் தெரிவித்தார்.

தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் தட்டச்சு இணைப்பாளர்கள் இல்லை எனவும் தெரிவித்த ஆயர் ஆங்கில அறிவை வளர்ப்பதற்குத் தகுதியான ஆசிரியர்கள் இல்லை எனவும் சுட்டிக் காட்டினார். அத்துடன் இரண்டு வருடத்திற்குள் அபிவிருத்திகள் முடிவடையும் என்றும் தெரிவித்தார்.

ஆயரின் வேண்டுகோளைச் செவிமடுத்த பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து பதிலளிக்கையில், மனதில் நம்பிக்கையுடன் செயல்களைச் செய்து வந்தால் வெற்றியை நமதாக்கிக் கொள்ளலாம் என உறுதிபடத் தெரிவித்தார். (எஸ்)

# சர்வதேச அழுத்தங்கள்...

வெளிச் சூழலில் இருந்து ஏற்படுகின்ற எத்தகைய நெருக்கடிகளும் முழு இலங்கையரையுமே பாதிக்கும். இன்றைய சர்வதேச அரசியற் போக்குகளை மனங்கொள்ள வேண்டிய அதேநேரத்தில் எமது அரசியற் சூழலையிட்டும் நாம் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

யுத்தத்திற்குப் பிறகு மக்களிடையே பதற்ற நிலை குறைந்திருப்பது மறுக்கப்பட முடியாத உண்மை. அகால மரணங்களுக்கு ஒரு முற்றுப் புள்ளியை இந்த அரசாங்கம் வைத்திருப்பதும் உண்மையானது.

தடைகளும் வரையறைகளும் தகர்க்கப்பட்டு சகல மக்களும் இந்த நாட்டில் எங்கே வேண்டுமானாலும் சென்று வரக்கூடிய நிலைமை உருவாகியிருப்பதும் உண்மையானதே.

இன நல்லிணக்கத்தை உருவாக்கும் வகையில் பல முன்னேற்றகரமான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வகையிற்தான் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் ஊடாக இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணும் முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளச் சிந்தித்தது.

இன்று இலங்கையின் இன முரண்பாடு தொடர்பான விவகாரங்களில் நடை முறைக்குச் சாத்தியமான அணுகுமுறைகளையும் நிலைப்பாட்டையும் எடுத்துச் செயற்பட்டு வருகிறோம்.

இந்த நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே இனப்பிரச்சினைத் தீர்வுக்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்பதற்கான எமது இணக்கத்தைத் தெரிவித்திருந்தோம்.

அதேவேளை யுத்தத்தின் பின்னரான நிலைமைகளை ஒட்டி எமது மாண்புமிகு ஜனாதிபதி அவர்களினால் அமைக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறும் தெரிவித்து வருகிறோம்.

இந்த நிலைப்பாட்டை ஒத்ததாக இந்த அரசாங்கத்தில் அங்கத்துவத்தை வகித்து வரும் இடதுசாரிக் கட்சிகளும் தங்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளன.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் பொதுமக்கள், பாதிக்கப்பட்டவர்கள் சமூகத்தின் பல்வேறு தரப்பினர் எனப் பல நிலைப்பட்டவர்களிடம் இருந்து திரட்டப்பட்ட தகவல்களையும் அபிப்பிராயங்களையும் அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டது.

ஆகவே அந்த அறிக்கைக்கு ஒரு முக்கியத்துவம் உள்ளது. இந்த அறிக்கையை இந்த நாட்டிலுள்ள மக்களும் இடதுசாரிக்கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அமைதியையும் நிரந்தரத் தீர்வையும் விரும்புகின்ற பிற தரப்பினர் பெரும்பாலான ஊடகத்தினர் மற்றும் ஐ.நா உள்ளிட்ட சர்வதேச சமூகத்தினர் எனப் பலரும் வரவேற்றிருக்கின்றனர்.

இதேவேளை எமது மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து நாம் நீண்டகாலமாகவே வலியுறுத்தி வரும் நடைமுறைச் சாத்தியமான வழிமுறைகள் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

ஆகவேதான் இந்த அறிக்கையை நடைமுறைப்படுத்தி இனங்களுக்கிடையிலான நல்லெண்ணத்தையும் அரசாங்கத்தின் செயலுறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தும்படி நாம் கேட்கின்றோம்.

இந்த நாட்டிலே மேலும் மேலும் இனமுரண்பாட்டை வளர்ப்பதற்கு நாம் எவரும் இடமளிக்கக் கூடாது என்று இந்த அவையிலே கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கொள்கையின் அடிப்படையில் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களும் இந்த அரசாங்கமும் கொண்டிருக்கும் திடசங்கற்பத்தையும் நாம் வரவேற்கிறோம்.

ஆனால் இந்தத் திடசங்கற்பத்தை நடை முறையாக்கி இதை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதிலேயே உண்மையான வெற்றியும் நிரந்தரத் தீர்வும் தங்கியுள்ளன.

ஆகவே இலங்கைத் தீவின் ஒருமைப்பாட்டைப் பேணிக்கொண்டு, அதனுடைய இறைமையைப் பாதுகாத்துக் கொண்டு தமிழ் பேசும் மக்களின் அரசிலுரிமைகளையும் வென்றெடுக்க நாம் விரும்புகிறோம்.

இந்த அடிப்படையிலேயே இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளில் எம்மை இணைத்துள்ளோம்.

இந்த அடிப்படையிலேயே தமிழ் பேசும் மக்களின் சார்பில் எமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தக் கூடிய வகையில் நாம் அரசாங்கத்துக்கு ஆதரவாக ஜெனிவா மாநாட்டில் கலந்து கொண்டிருந்தோம்.

இதன்மூலம் எமது மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு காணக் கூடிய இன ஐக்கியச் சூழலைப் பாதுகாக்கவும் நாம் விரும்பியிருந்தோம்.

நாம் வழங்கிய இந்த ஆதரவை இந்த நாட்டு மக்கள் அனைவரும் ஒரு நல்ல சமிக்ஞையாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

சர்வதேச சமூகத்தின் ஆதரவென்பது இலங்கைத்தீவின் அமைதிக்கும் சுபீட்சமான எதிர்காலத்துக்கும் இன நல்லுறவுக்கும் ஏற்றதாக அமைய வேண்டும். இதையே இந்த நாட்டு மக்களும் விரும்புகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.



யாழ்.மாவட்ட அபிவிருத்தி குறித்து பார்வையிடுவதற்காக யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்த பிரித்தானிய எம்.பி.க்கள் குழுவினர் நேற்று வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியையும் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போது, பிரிட்டன் எம்.பி. ஒருவர் ஆளுநருக்கு நினைவுப் பரிசு வழங்குவதைக் காணலாம்.

# பாவனைக்கு உதவாத குடிநீர்

மண்டைதீவுக்கு அல்லைப் பிட்டியில் இருந்து விநியோகிக் கப்படும் குடிநீரில் அளவுக்கதிகமாக குளோரின் இடப்படுவதன் காரணமாக அந்தக் குடிநீரைப் பருகுவதில் அப்பகுதி மக்கள் மிகுந்த அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இக்கிராமத்திற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் யுனிசெவ் நிறுவனத்தின் நிதியுதவின் கீழ் குழாய் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இவ் விநியோக நடவடிக்கையின்போது குழாய் மூலமாக வரும் குடிநீரினைச் சுத்தமான குடிநீராக விநியோகிக்க குளோரின் இடப்பட்டு பிரதான நீர்ப் பகுதியில் இருந்து விநியோகிக் கப்படுகிறது.

இந்நிலையில், நீரைத் தூய்மையாக்க இடப்படும் குளோரின் கூடுதலாக நீரில் கலக்கப்படுவதன் காரணமாக நீரில் குளோரின் மணமும், நீரைக் குடிக்கும் போதும் ஒரு விதக் காரத்தினையும் உணர முடிவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், தற்போதைய கோடை காலத்தில் குளோரின் இடப்பட்ட நீர் குளிர்ச்சியற்று இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. எனவே இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட பகுதியினர் தமது மேலான கவனத்தைச் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (பா)

## மீள்குடியமர்வில்....

எடுத்துக் கூறினார். இதன்போது வலி.வடக்கில் மீள்குடியேற்றம் தாமதமடையும் காரணம் குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த அரச அதிபர் ஏற்கனவே உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீள்குடியேற்றம் செய்யுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உயர் நீதிமன்றத்தில் வழங்கொன்றினைத் தாக்கல் செய்திருந்ததாக அரச அதிபர் தெரிவித்தார். அதன் பின்னர் இரண்டு வருடங்களில் ஐந்து உயர் பாதுகாப்பு வலயங்களில் ஒன்றில் மட்டுமே மக்கள் மீள் குடியமர்த்தப்பட வேண்டியிருப்பதாகவும் இதுவரை 37 ஆயிரம் குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டிருப்பதாக வும் அவர் தெரிவித்தார்.

மேலும் 10 ஆயிரம் குடும்பங்களே எஞ்சியிருப்பதாகவும், கண்ணி வெடிகள் அகற்றப்படுவது முடிவடைந்து உத்தரவாதத்திற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்ததும் விரைவில் அவர்கள் மீள் குடியமர்த்தப்படவுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

இன்னமும் 13 வீதமான பகுதிகளே கண்ணிவெடி அகற்றப்பட வேண்டியிருப்பதாகவும் அரச அதிபர் இதன்போது குறிப்பிட்டார்.(பா,02)

## கடன் உதவி....

இன்றுவரை சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 2.13 பில்லியன் அமெரிக்க டொலரை கடனாக வழங்கியுள்ளது.

நாட்டின் வெளிநாட்டு ஒதுக்கம் பெரிதும் அற்றுப்போயுள்ளது. இதனால் அரசாங்கத்திடம் பணம் இல்லாத நிலைமை தோன்றவுள்ளது. அரசாங்க ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி அடைவதை அனுமதித் துள்ளது. அத்துடன் இறக்குமதிகளை தூண்டக்கூடிய கடன்களுக்கு உச்ச வரம்பொன்றையும் நிர்ணயித்துள்ளது.

வர்த்தக மீதியை நிதிப்படுத்தவும் கடன்களை திருப்பிச்செலுத்தவும் அரசாங்கம் பெரியளவில் கடன் வாங்க வேண்டிய நிலையில் உள்ளது. இதனால் நாடு கடன் நச்சுவட்டத்தினுள் அகப்படும் ஆபத்தும் உள்ளது. எனினும், கடன்களை திருப்பிச் செலுத்தாத வங்குரோத்து நிலையை இதுவரை எதிர்கொள்ளவில்லை என அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கூட்டமைப்பை...

ஹிலாரி கிளிண்டன் விடுத்துள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்தி தவறானது எனவும் அமெரிக்கத் தூதரகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை சந்திப்பதற்காக மே 18ஆம் திகதி வொஷிங்டன் வருமாறு ஹிலாரி கிளின்டன் அழைப்பு விடுத்துள்ளார் எனவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள அனைத்து கட்சிகளுடனும் அமெரிக்கா தொடர்பினை பேணும் நிலையில் ஜீ.எல்.பீரிஸ் - ஹிலாரி கிளின்டன் சந்திப்புக்கு முன்னரோ அல்லது பின்னரோ தமிழ்த் தேசியக் கூட்டடமைப்பினரின் அமெரிக்க விஜயத்திற்கான ஏற்பாடு எதுவுமில்லை என மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தேவாலயங்களின்....

விட இப்போது சமயங்களின் எழுச்சி காணப் படுகின்றது. பௌத்த விகாரை புனரமைப்பு நடவடிக்கைகள் போன்றே ஏனைய சமயங்களின் முக்கிய தளங்கள் புரனமைப்புக்காக அரசாங்கம் நிதி ஒதுக்கியுள்ளது.

சகல சமயங்களுக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தி நாட்டில் நிரந்தர சமானத்தைத் தோற்றுவிப்பதே அரசாங்கத்தின் இலக்காகும் என்றும் கூறினார்.

மக்கோன- ஹினிதும மற்றும் குருநாகல் ஆகிய பிரதேசங் களில் உள்ள தேவாலயங்களின் பிரதிநிதிகளுக்கு தலா ஒரு லட்சம் ரூபாவை பிரதமர் கையளித்தார்.

# வேலையற்ற பட்டதாரிகள் யாழ்ப்பாணத்தில் அதிகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 2600 வரையான வேலையற்ற பட்டதாரிகள் தமக்கான வேலைவாய்ப்பினை பெற்றுத் தரக் கோரி யாழ். செயலகத்திற்கு விண்ணப்பித்திருப்பதாக நேற்று யாழ். செயலகத்திற்கு விஜயம் செய்த பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் லோர்ட்ஸ் நெசபியிடம் யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

கலை, விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம் உள்ளிட்ட பாடங்களில் பல்கலைக்கழக பட்டம் பெற்றவர்களே இவற்றில் உள்ளடக்கப்பட்டிருப்பதாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் இதன்போது பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினருக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தத் தொகை மேலும் அதிகரித்து வருவதாகவும், நாளாந்தம் வேலையற்ற பட்டதாரிகள் யாழ். செயலகத்திற்கு தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதன்போது பட்டதாரிகளினால் யாழ். செயலகத்தில் கையளிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் தொகுப்பையும் பிரித்தானிய தூதுவருக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் அரச அதிபர் காண்பித்தார். (பா)

# இப்படியும் நடந்தது

(யாழ்ப்பாணம்)

கல்வயல் வேதவன பிள்ளையார் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த குதிரை வாகனத்தை கடந்த செவ்வாய்க்கிழமை பின் இரவு 2 மணியளவில் கழற்றிச் செல்ல திருடர்கள் முற்பட்டுள்ளனர்.

இதேவேளை ஆலயத்திலிருந்து 200 மீற்றருக்கு அப்பால் உள்ள வீடொன்றில் நித்திரையாய் இருந்த ஆலய பக்தர் ஒருவர் திடீரென்று படுக்கையிலிருந்து எழுந்து கத்திக்கொண்டு வீதியில் ஓடினார்.

இவரது சத்தத்தை கேட்ட அயலவர் எழுந்து இவருக்கு பின்னால் ஓடினர். சத்தம் போட்டுக்கொண்டு ஓடிவருவதை அவதானித்த திருடர்கள் இருவரும் தமது ஹெல்மெட்டையும் குதிரை வாகனத்திலிருந்து கழற்றிய கால்களையும் கைவிட்டு தப்பி ஓடியுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக ஆலய நிர்வாகனத்தினர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறையிட்டனர். பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டனர்.

வீதியில் கத்திக்கொண்டு ஓடிவந்தவர் தனக்கு என்ன நடந்தது எனத் தெரியாது என்று கூறியுள்ளார். ஆலய வாகனம் தப்பியது. விசாரணைகள் தொடர்கின்றன.

# சம்மாந்துறையில் பெண்ணின் சடலம்

(மட்டக்களப்பு)

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சொறிக்கல்முனை, நாணல்காடு பகுதியில் இருந்து நேற்றுப் பிற்பகல் பெண்ணின் சடலமொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் சடலம் கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிடுகின்றது.

51 வயதான பெண் ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளதுடன், சடலம் கணவரால் அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்தப் பெண் கடந்த மாதம் ஆறாம் திகதி காணாமல் போயுள்ளதுடன், மனநிலை பாதிக்கப்பட்டவர் என்றும் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிடுகின்றது.

# நாட்டில் பாலியல் கல்வி போதிப்பதில் அமைச்சுக்கும் மாகாணசபைகளுக்குமிடையில் இழுபறி

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு இனப்பெருக்க சுகாதார கல்வி போதிப்பது குறித்து சுகாதார அமைச்சு ஒத்துழைப்பு கோரி விடுத்த கோரிக்கையை 8 மாகாண சபைகள் நிராகரித்துள்ளன.

இலங்கையிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு இனப்பெருக்க சுகாதார கல்வியைப் போதிப்பதற்கான தருணம் வந்துள்ளது எனவும் மாணவர்களுக்கான பாடவிதானத்தில் இப்பாடமும் சேர்க்கப்பட வேண்டும் எனவும் பிரதி சுகாதார அமைச்சர் லலித் திசாநாயக்க கூறினார்.

இதற்கான ஒத்துழைப்புக்கு 9 மாகாண சபைகளிடம் சுகாதார அமைச்சு கோரிக்கை விடுத்த போதிலும் சப்ரகமுக மாகாண சபை மாத்திரமே இதை ஏற்றுக் கொண்டதாகவும் அவர் தெரிவித்தார். இது சர்ச்சையை தோற்றுவிக்கும் எனக் கருதி, ஏனைய மாகாண சபைகள் இத்திட்டத்தை நிராகரித்ததாகவும் அவர் கூறினார்.

இனப்பெருக்க சுகாதார கல்வி என்பது மற்றொரு வகையான பாலியல் கல்வி என மாகாண கல்வி அதிகாரிகள் தவறாக புரிந்துகொண்டுள்ளார்கள். இனப்பெருக்க சுகாதாரக் கல்வியை ஒரு கட்டத்தில் பாடசாலை பாடத்திட்டத்தில் சேர்ப்பது சிறந்தது. 10 ஆம் வகுப்பிற்குப்பின் இதை அறிமுகப்படுத்துவதன் மூலம்




இளையோர்களை பாலியல் மூலம் பரவும் நோய்களிலிருந்தும் அநாவசிய கர்ப்பங்களிலிருந்தும் பாதுகாத்துக்கொள்ள உதவும் எனவும் பிரதியமைச்சர் தெரிவித்தார்.

ஏறத்தாழ, அபிவிருத்தியடைந்த நாடுகள் அனைத்திலும் பாடசாலைகளில் இனப்பெருக்க சுகாதார கல்வி போதிக்கப்படுகிறது எனவும் பாடசாலை பாடத்திட்டத்தில் இதை சேர்ப்பதற்கான சாத்தியம் குறித்து சுகாதார அமைச்சர் மற்றும் கல்வி அமைச்சருடன் தான் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# கைத்துப்பாக்கியை விற்ற முன்னாள் ஜனாதிபதி வேட்பாளர்

(கொழும்பு)

நுகேகொடை, பாகொடவைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருக்கு தனது கைத்துப்பாக்கியை விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நவ சிஹல உறுமய கட்சித் தலைவர் சரத் மனமேந்திராவை விசாரணைக்கு உட்படுத்தவுள்ளதாக மிரிஹான பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதி வேட்பாளராக இவர் போட்டியிட்டபோது, அரசாங்கத்தினால் இக்கைத்துப்பாக்கி வழங்கப்பட்டது. இதனை 52,000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வர்த்தகர் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து மிரிஹான பொலிஸ் நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு மனமேந்திராவிடம் கேட்டபோது, அதனைச் செய்வதற்கு அவர் தவறிவிட்டதுடன், தனது கையடக்கத் தொலைபேசியையும் நிறுத்திவைத்துவிட்டார். இதனைத் தொடர்ந்து அவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த வர்த்தகர் கைத்துப்பாக்கி ஒன்றை கையில் ஏந்தியவாறு அங்குமிங்குமாக அலைந்து திரிந்ததாக பொதுமக்கள் வழங்கிய தகவலை அடுத்து அவர் கைதுசெய்யப்பட்டதுடன், இரு தோட்டாக்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். மனமேந்திராவினாலேயே இக்கைத்துப்பாக்கி விற்பனை செய்யப்பட்டது என்பதை குறித்த வர்த்தகர் ஒப்புக்கொண்டுள்ளார்.

## தேசிய கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழா

(கொழும்பு)

தேசிய கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழா நேற்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது கல்வி முதுமாணி பட்டம், கல்வி முகாமைத்துவ விஞ்ஞான முதுமாணி, கல்விமாணி பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா ஆகிய பாடநெறிகளை வெற்றிகரமாக நிறைவு செய்த பட்டதாரிகளுக்கு பட்டம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வு கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் இடம்பெற்றது.

# முன்னாள் போராளிகளுக்கு தொழில் வழங்க தனியார் நிறுவனங்கள் ஆர்வம்

(கொழும்பு)

தொழிற்பயிற்சிகளுடன் புனர்வாழ்வளிக்கப்பட்ட புலிகளின் முன்னாள் போராளிகளுக்கு தொழில வாய்ப்புகளை வழங்குவதில் தனியார் நிறுவனங்கள் ஆர்வம் காட்டுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. புலிகளின் முன்னாள் போராளிகள் 105 பேரை தனியார் நிறுவனமொன்று மேசன் துறையில் பயிற்சியளித்துள்ளது.

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சந்தன ராஜகுரு இது தொடர்பாக தெரிவிக்கையில்,

இராணுவத்திடம் சரணடைந்த 12,000 முன்னாள் போராளிகளில் 11,000 இற்கும் அதிகமானோர் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.



மேலும் அவர்கள் சிலவேளைகளில் பிரதேச செயலங்கள் போன்ற அரச அலுவலகங்களில் சேவையைப் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அப்போது அவர்கள் எமது உதவியை நாடுகின்றனர். அவர்கள் அந்தளவு எமக்குப் பழக்கமானவர்களாகி விட்டனர். அவ்வாறான தருணங்களில் நாம் அவர்களுக்கு உதவோம் என அவர் தெரிவித்தார்.

# திருகோணமலைக்கும் சொகுசு ரயில் பெட்டி

கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு செல்லும் கடுகதி ரயிலில் பிரயாணிகளின் நலன்கருதி எக்ஸ்போ லங்கா நிறுவனம் சகல வசதிகளுடனான குளிரூட்டப்பட்ட எக்ஸ்போ சொகுசு ரயில் பெட்டியொன்றை கடந்த முதலாம் திகதி ஞாயிறுக்கிழமை முதல் இணைத்துள்ளது.

வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் திங்கட்கிழமை ஆகிய தினங்களில் கொழும்பிலிருந்து இரவு 9 மணிக்கு புறப்படும இந்த ரயில் அதிகாலை 5.10 இற்கு திருகோணமலையை சென்றடையும். இதேவேளை, வெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் திருகோணமலையிலிருந்து 7.30 மணிக்கு புறப்படும் இந்த ரயில் அதிகாலை 4.05 மணிக்கு கொழும்பை வந்தடையும்.

குறித்த சொகுசு ரயில் பெட்டியில் பயணிக்கும் பிரயாணிக்கு ஒரு வழிப் பயணத்திற்காக 1,900 ரூபா அறவிடப்படுகின்ற நிலையில் 3 - 11 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு 1,450 ரூபா அறவிடப்படுகின்றது. இதில் பிரயாணிகளுக்கு குளிரூட்டி சேவை




யுடன் இரவு நேர சாப்பாடு, வரையறையற்ற தேநீர் மற்றும் கோப்பி ஆகியன இலவசமாக பரிமாறப்படுகின்றன. ஏற்கனவே கொழும்பிலிருந்து கண்டி, பதுளை மற்றும் வவுனியா ஆகிய இடங்களுக்கான கடுகதி ரயிலில் இது போன்ற எக்ஸ்போ சொகுசு ரயில் பொட்டி இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சில கப்பல்கள் ஹம்பாந்தோட்டைக்கு

(கொழும்பு)

இலங்கைக்கு வாகனங்களை ஏற்றிவரும் அனைத்துக் கப்பல்களும எதிர்வரும் மே 31 ஆம் திகதி முதல் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு திருப்பப்படும் என இலங்கை துறைமுக அதிகார சபை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக, கப்பல் நிறுவனங்கள் மற்றும் வாகன இறக்குமதியாளர்களுடன் கலந்தாலோசனை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் இலங்கை துறைமுக அதிகார சபை தெரிவித்துள்ளது.

# பிச்சை எடுத்தவர்கள் கைது வவுனியா பொலிஸார் அதிரடி

(வவுனியா)

வவுனியா நகர்ப்பகுதியில் பிச்சையெடுத்துக்கொண்டிருந்த 16 பிச்சைக்காரர்களைக் கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். பல்வேறு காரணங்களைக் கூறி வவுனியா நகர்ப்பகுதியில் பொதுமக்களுக்கும், பயணிகளுக்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையில் பிச்சை எடுத்தார்கள் என்ற காரணத்தினாலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலிஸார், தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட பிச்சைக்காரர்கள், வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஏப்ரல் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.